Registered as a Newspaper in Srilanka


தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 120 • 26.11.2017




## பிரபாகரனின் காதல் கதை!

- ஏழு இளைஞர்களும், காத்தான்குடி பெண்ணும்!
- மாற்று அரசியலணியின் பின்னணியில் இந்தியா?

## விக்னேஸ்வரனை கண்காணிக்கும் இரகசிய கமரா



# பொட்டம்மான் VS கருணா

## பதினேழு வருட பகை; புலிகள் பிளவின் கதை


CNR
Courier & Cargo

CNR World Wide Express

DHL
AUTHORIZED SHIPPING CENTRE
Air Ticketing
Date Change
Reconfirmation
Visa Renewal

வெளிநாடுகளுக்கான தபால் பொதி பரிமாற்று சேவை



021 567 4145 401 மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்

# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)

ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்




தொடர்புகளுக்கு

## தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)



## யாழ் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் அதி உயர்தர வலம்புரி ஹோட்டல்.





Green Grass

**The Valampuri**



## TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar<br>Jaffna<br>Tel 021 222 4743<br>Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road<br>Jaffna<br>Tel 021 222 4643<br>Email : topazagn@gmail.com | No 195, Power House Road<br>Jaffna<br>Tel 021 222 4933<br>021 221 9933 |

## சுரேஷ் தனிவழி

# இந்தியாவின் கிரீன் சிக்னல்.. அடித்து கேட்டால் கூட ஆளை சொல்ல மாட்டோம்!

இந்திய அமைதிகாக்கும் படைக் காலத்தில் தம்மீது படிந்த இரத்தக்கறைகளை கழுவ பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இரண்டு பிரிவினரும். ஒரு பிரிவினர் கூட்டமைப்பிற்கு வெளியே செல்கிறார்கள், இன்னொரு பிரிவினர் கூட்டமைப்பிற்கு உள்ளே செல்கிறார்கள் என்பதுதான் இதில் சுவாரஸ்யமான விடயம்.



நம்மாழ்வார்

நான்குமாதங்களின் முன்னரே தீபத்தில் ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம். ஈ.பி.ஆர்.எல்.எவ் முல்லைத்தீவு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தமிழரசுக் கட்சிக்கு தாவப்போகிறார் என. அந்த செய்தியை படித்தவர்கள், அடுத்தடுத்த வாரம் அப்படியொரு சம்பவமே நடக்கவில்லையென்பதால், தீபத்தையும் பத்தோடு பதினோராவது ஊடகமாக நினைத்திருக்க கூடும். நான்கு மாதங்களின் முன்னரே ரவிகரனின் கட்சிதாவலை தீபம் மோப்பம் பிடித்திருந்தது.

முல்லைத்தீவை சேர்ந்த தமிழரசுக்கட்சி எம்.பியொருவர்தான் இந்த தாவலிற்கு ஏற்பாடு செய்தவர். தமிழரசுக்கட்சியில் இணைவதற்கான விண்ணப்ப படிவத்தை ரவிகரன் சமர்ப்பித்து விட்டார். ஈ.பி.ஆர்.எல்.எவ் இல் இருந்து ரவிகரனை கழற்றியெடுக்கும் ஒப்ரேஷனை தமிழரசுக்கட்சி ஏன் மேற்கொண்டது?

இதற்கு பதில் தெரிவதென்றால், அதைவிட பெரிய ஒப்ரேஷன் ஒன்றை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்ச வீட்டிற்கு போன தற்கும், சுரேஷ் பிரேமச்சந்திரனின் கிளர்ச் சிக்குமிடையில் ஒரு ஒற்றுமையுள்ளது, பின்னணி சக்தி ஒன்றுதான். இப்படி மேலோட்டமாக நாம் சொன்னால், நீங்கள் நம்பப்போவதில்லை. ஏதோ பத்திரிகை பரபரப்பிற்காக எழுதுகிறோம் என நினைப்பீர்கள். ஆனால் இரண்டிற்கும் பின்னணி சக்தி ஒன்றுதான். அதைப்பற்றி விபரமாக சொல்கிறோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் “குழப்படி”காரராக இதுவரை இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி, திடீரென கூட்டமைப்பிற்குள்ளிருந்து முகத்தை முறித்துக்கொண்டு தனிவழி செல்ல ஏன் முடிவெடுத்தது?


தமிழரசுக்கட்சியில் ஜனநாயகமில்லை, மக்கள் ஆணையை மீறி நடக்கிறார்கள் என பலகாரணங்கள் சொன்னாலும், கிடைக்கும் உள்ளக தகவல்கள் வேறுவிதமாக உள்ளன. பிராந்திய அரசியல் எப்படியெல்லாம் இலங்கைக்குள் புகுந்து விளையாடுகிறது என்பதற்கும் அது உதாரணமாக அமையும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியேற வேண்டு மென்பது யாருடைய முடிவு என நினைக்கிறீர்கள்?

இந்த கேள்விக்கான பதிலை கட்டு ரையை முழுமையாக படிப்பவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

கூட்டமைப்பிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியேறும் முடிவிற்கு கட்சியின் இரண்டாம் நிலை முக்கியஸ்தர்கள் பெரும்பாலும் ஆதரவில்லை. நாம் பேசியவர்களில் பெரும்பாலானவர்கள், “சுரேஷ் அவசரப்படுகிறார்” என்றார்கள். அவர்கள் பாதி விழுங்கி, பாதி சொன்ன இன்னொரு விடயம் “வேறு யாருடையதோ தாளத்திற்கு கட்சி ஆடினால் நாங்கள் எப்படி கிறவுண்டில் அரசியல் செய்வது?”

யாருடைய தாளத்திற்கு கட்சி ஆடுகிறது? என்ற கேள்வியை அவர் களிடமே திருப்பிப்போட்டோம். பெரும் பாலானவர்கள் சட்டென றூட்டை மாற்றி, “அரசாங்கத்தின் ஒற்றையாட்சி நிகழ்ச்சி நிரலிற்கு விலைபோன தமிழரசுக்கட்சி யின் சூழ்ச்சிக்கு பலியாகமாட்டோம். மக்களின் ஆணைதான் நமக்கு முக்கியமானது” என மேடையில் பேசுவதை போல குரலை உயர்த்திப்பேசிவிட்டு தொலைபேசியை துண்டித்து விட்டார்கள்.



தமிழரசுக்கட்சி உறுப்பினர் படிவத்தை மாவை.சேனாதிராசாவிடம் ஒப்படைக்கும் ரவிகரன்

நமது அரசியல்வாதிகள் உரத்த குரலில் தமிழ் தேசியம் பேசினாலே பின்னால் ஏதோ “சம்திங்” இருக்கவேண்டுமே... அது என்னவாக இருக்குமென, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருடன் தொடர்ந்து பேசினோம். அப்போது அவர்கள் சொன்ன தகவல்கள்தான் இவை. இதை கேட்க உங்களிற்கும் தலையை சுற்றும். தமிழ் அரசியலே இப்பொழுது தலையை சுற்றும் நிலைக்கு வந்துவிட்டதால், தலையை சுற்றாமல் இதை படியுங்கள்.

நம்முடன் பேசியவர்களில் சிலர், 1980களின் தொடக்கத்தில் ஆயுத இயக்கங் களுடன் தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்தவர்கள். சிங்கள இனஒடுக்கு முறைக்கு எதிராக தமிழ் இளைஞர்களின் எழுச்சி இயல்பாக மேலெழுந்தபோது, அதற்கு எண்ணெய் ஊற்றியது இந்தியா. தமிழ் ஆயுத இயக்கங்களிற்கு ஆயுதம், நிதி, பயிற்சியளித்து ஜே.ஆர் அரசுக்கு எதிராக கொம்புசீவிவிட்டது இந்திய அரசு. இந்திய அயலக புலனாய்வுத்துறை (றோ) அதை கச்சிதமாக செய்தது.

அப்போதைய ஜே.ஆர் அரசு அமெரிக்க சார்புடையதாக மாறிக்கொண்டிருந்ததை தடுத்து நிறுத்த வேண்டிய தேவை இந்தியாவிற்கு இருந்தது. இந்த இரகசிய ஒப்ரேஷனின்; நடவடிக்கை வடிவமே இந்திய அமைதிகாக்கும்படை!

இந்திய அமைதிகாக்கும் படைக் காலத்தில் தம்மீது படிந்த இரத்தக்கறை களை கழுவ பிரயத்தனப்பட்டுக்கொண்டி ருக்கிறார்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இரண்டு பிரிவினரும். ஒரு பிரிவினர் கூட்டமைப்பிற்கு வெளியே செல்கிறார்கள், இன்னொரு பிரிவினர் கூட்டமைப்பிற்கு உள்ளே செல்கிறார்கள் என்பதுதான் இதில் சுவாரஸ்யமான விடயம்.

1980களின் தொடக்ககால பட்டறி வுடைய அந்த பிரமுகர்களின் பிரதான அச்சமே மீண்டும் ஒரு விபத்தை சந்திக்க வேண்டி வருமோ என்பதே!

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியேறுவதென்ற முடிவின் பின்னால் இந்தியா இருக்கலா மென அவர்கள் கருதுகிறார்கள். இது மீண்டுமொரு கழுவ முடியாத கறையை தமக்கு ஏற்படுத்துமோ என்பதுதான் அவர்களின் அச்சம். அவர்களுடன் பேசியதை தொகுத்து தருகிறோம்.

தற்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பில் மேற்குலம் சார்பான அணி வலுப்பெற்று வருகிறது. இப்போது கிட்டத்தட்ட கூட்டமைப்பின் சார்பில் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளையும் அந்த அணிதான் எடுக்கிறது. தமது ஆதரவு அணியொன்றை கூட்டமைப்பின் எதிர்கால தலைமைபீடத்திற்கு கொண்டு வர இந்தியா விரும்பியது. ஆனால் இப்போதைய நிலையில் அதற்கு வாய்ப்பில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணியை கூட்டமைப்பிற்குள் கொண்டு வரலாமென இந்தியா முடிவெடுத்தது இரண்டரை வருடங்களிற்கு முன்னர். ஆனால் இப்பொழுதுதான் அவர்களிற்கு கதவு மெல்ல திறக்கிறது.

பொதுவாக ஓவர் த போனிலேயே காரியங்களை முடிப்பதுதான் இந்தியா வின் பெரியண்ணன் பாணி. இப்போது பல விடயங்கள் நேரில் பேசினாலும் நடப்பதில்லையென்ற கடுப்பு இந்தியா விடம் இருக்கிறது.

அயல்நாட்டில் தமக்கு பிடிக்காத சில நடவடிக்கைகள் நடந்தால், ராஜதந்திர ரீதியில்தான் சில சிக்னல்களை கொடுப் பார்கள். கொஞ்சம் ஆழமான அரசியல் தொடர்புள்ளவர்களால் மட்டுமே அவற்றை புரிந்துகொள்ளலாம். இப்பொழுது நாம் சொல்லப்போகும் தகவலை ஆறு மாதத்திற்கு முன்னர் ஒரு செய்தியாக மட்டும் படித்திருப்பீர்கள். அந்த செய்தி “இலங்கைக்கு விஜயம்

தொடர்ச்சி 5-ம் பக்கம்...



# கைவிரித்த ஹரிபாபுவின் காதலி... கர்ப்பமான நளினி!



## ராஜிவ் காந்தி கொலை 10
### எப்படி... என்ன நடந்தது?

கே.ராகோத்தமன்

நளினி அன்றே ராயப்பேட்டை வீட்டுக்குச் சென்று பாக்கியநாதனிடம் திருப்பதி செல்ல ஒரு கார் ஏற்பாடு செய்யும்படி சொன்னார். 'ஒரு விஷயம். நம்முடன் உன்னுடைய அம்மாவும் வந்தால் மிகவும் வசதியாக இருக்கும். ஒரு பாதுகாப்பும்கூட' என்றார் சிவராசன். எனவே அவர்கள் மொத்தமாகப் புறப்பட்டார்கள். வில்லிவாக்கம் பிள்ளை யாருக்கு அபிஷேகம் ஆரம்பித்தபோது நளினி, சுபா, சிவராசன், முருகன், பாக்கியநாதன், பத்மா அனைவரும் திருப்பதியில் தரிசனம் செய்துகொண்டிருந்தார்கள்.

முன்னதாக நளினி அங்கே அங்கப்பிரதட்சிணம் செய்தார். இரண்டு காட்டேஜ் எடுத்துத் தங்கி, தரிசனம் முடித்து, வாடகைக் காரில் அவர்கள் சென்னை திரும்பி அவரவர் இருப்பிடங்களுக்குப் போனார்கள்.

நளினி, அதற்குமேல் வில்லிவாக்கம் வீட்டை வைத்துக்கொண்டிருக்க வேண்டாம் என்று முடிவு செய்து, அன்றே அந்த வீட்டை காலி செய்தார். ஓர் ஆட்டோவில் பொருள்களை ஏற்றிக்கொண்டு ராயப்பேட்டை வீட்டுக்குக் கொண்டு வந்து போட்டார்.

முருகனும் நளினியும் தங்குவதற்கு மடிப்பாக்கத்தில் முருகன் ஒரு வீடு பார்த்திருப்பதாகச் சொல்லியிருந்தார். 'நீ பாட்டுக்கு ஆபீஸ் போய்க்கொண்டிரு, ஜூன் 7ம் திகதி பெசண்ட் நகர் அஷ்டலட்சுமி கோயிலுக்கு வா. அங்கே சிவராசன் உன்னைச் சந்திப்பார். அதன் பிறகு மற்ற விஷயங்களைப் பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டு முருகன் பாக்கியநாதனின் அச்சகத்துக்குக் கிளம்பிப் போனார்.

இடைப்பட்ட நாள்களில் அவர் அங்கேதான் தங்கிக்கொண்டிருந்தார்.


ஜூன் 4ம் திகதி முருகனும் நளினியும் மேற்கு மாம்பலத்தில் இருந்த ஒரு பெண் மருத்துவரிடம் சென்றார்கள். நளினியைப் பரிசோதித்த அந்த டாக்டர், அவர் கர்ப்பமாகியிருப்பதை உறுதி செய்தார்.

அன்றிரவு அவர்கள் மடிப்பாக்கம் வீட்டுக்குச் சென்று தங்கினார்கள். ஜூன் 6ம் திகதி நளினி, தன் தங்கை கல்யாணியிடம் வில்லிவாக்கம் வீட்டு ஓனரைச் சந்தித்து, வீடு காலி செய்த விவரத்தைச் சொல்லி செட்டில் பண்ணிவிடக் கேட்டுக்கொண்டார்.

மறுநாள் திட்டமிட்டபடி அஷ்டலட்சுமி கோயிலில் சிவராசன், நளினியைச் சந்தித்தார். 'நிலைமை சரியில்லை. சி.பி.ஐ. மிகவும் ஆழமாக விசாரிக்கத் தொடங்கிவிட்டது. நாம் சென்னையில் தொடர்ந்து தங்குவது நல்லதல்ல.



சுபா, தனு, சிவராசா குர்தாவுடன்.. நிற்பவர்





நீ எங்களுடன் இலங்கைக்கு வந்துவிடு' என்று சிவராசன் சொன்னார். அவரோடு சுபாவும் வந்திருந்தார். சுபாவுக்குச் சற்று உடல்நிலை சரியில்லாமல் இருந்தது.

நளினி, அவரை பெசண்ட் நகரில் ஒரு பெண் மருத்துவரிடம் காட்டி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். அந்த மருத்துவரின் கிளினிக் ரிஜிஸ்டிரேஷன் கார்டில் 'சுபா' என்று பெயர் எழுதி தனது தாயின் ராயப்பேட்டை முகவரியை அளித்திருந்தார். (பின்னால் இது நளினி சொன்னதன்பேரில் கைப்பற்றப்பட்டது.) என்ன தோன்றியதோ, புறப்படும்போது ஆட்டோகிராப் நோட்புக் வாங்கி சுபாவுக்காக அதில் சில வரிகள் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டுப் போனார்.

நளினிக்கு பயமாக இருந்தது. கவலையாக இருந்தது. அன்றிரவு அவர் உறங்கவில்லை. மறுநாள் காலை விடிந்ததும் தன் தாயை அழைத்து, நாம் தற்கொலை செய்துகொள்ளலாம் என்று சொன்னார்.

முந்தைய நாள் இரவே ஒரு விஷ மருந்தும் வாங்கிச் சென்றிருந்தார். என்ன தோன்றியதோ, பிறகு தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டுவிட்டுத் தப்பிக்க முயற்சி செய்யலாம் என்று தீர்மானித்தார்.

ஜூன் ஒன்பதாம் திகதி காலை நளினி அண்ணா சாலையில் உள்ள சாந்தி தியேட்டர் வாசலுக்குச் சென்று காத்திருந்தார். முருகனை அங்கே சந்திப்பதாக ஏற்பாடு.

இருவரும் முதலில் திருப்பதிக்குப் போனார்கள். ஏற்கெனவே சென்று நேர்த்திக்கடன் செலுத்திவிட்டு வந்த அதே இடம்.

முருகன் அங்கே மொட்டையடித்துக் கொண்டார். அங்கே ஒருநாள் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான சத்திரத்தில் தங்கிவிட்டு, அங்கிருந்து மதுரைக்கு வந்தார்கள்.

மதுரையில் ரவி என்கிற நபர் நளினிக்கு ஏற்கெனவே அறிமுகமானவர். அவருடன் ஒரு சமயம் வேலை பார்த்தவர். அவருடைய வீட்டில் ஒரு நாள் தங்கிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு விழுப்புரம் சென்றார்கள்.

விழுப்புரத்தில் ஹரி பாபுவின் காதலியான சுந்தரி வசித்துக் கொண்டிருந்தாள். விஷயத்தைச் சொல்லி அங்கே தங்க அனுமதி கேட்டபோது சுந்தரியின் அம்மா மறுத்துவிட்டார். "வேண்டாம், ஆபத்து. உங்களுக்கு மட்டுமல்ல. எங்களுக்கும். எங்காவது போய் விடுங்கள்". வேறு வழியில்லாமல் அங்கிருந்து புறப்பட்டு பெங்களூர். அங்கிருந்து தாவணகரே.

அங்கே சசிகலா என்கிற நளினியின் தோழி ஒருவர் பள்ளி ஆசிரியையாக இருந்தார். அவரைச் சந்தித்து முழு விவரம் சொல்லித் தங்களுக்கு உதவக் கேட்டுக்கொண்டார் நளினி. சசிகலாவின் கணவருக்கு அது சரிப்படவில்லை. "வேண்டாம், ஆபத்து. நீங்கள் போய் விடுங்கள்". எனவே திரும்பவும் விழுப்புரத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

மீண்டும் சுந்தரியின் வீடு. ஆனால் இம்முறை வீடு பூட்டியிருந்தது. விசாரித்தபோது அவர்கள் சென்னைக்குச் சென்றிருப்பதாகப் பக்கத்தில் தகவல் கிடைத்தது.

இருக்க இடமில்லாமல் நளினியும் முருகனும் அதன்பிறகு திரும்பவும் புறப்பட்ட இடத்துக்கே திரும்பத் தீர்மானித்தார்கள்.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் நளினி அளித்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி. நாங்கள் நளினியைத் தேடுவது என்று முடிவு செய்ததும் உறவினர் வீடுகளுக்குப் போய் நேரத்தை வீணாக்காதீர்கள், அவரது நண்பர்களைப் பிடியுங்கள் என்றுதான் புலனாய்வு அலுவலர்களிடம் சொன்னேன்.

ஏனென்றால் நளினி தனியே செல்லவில்லை. தன்னுடன் தன்னுடைய காதலனை அழைத்துச் சென்றிருக்கிறார். எனவே உறவுக்காரர்களைவிட நண்பர்களைத்தான் அவர் அதிகம் நம்பக்கூடும் என்று எனக்குத் தோன்றியது.

தவிரவும் தமிழகம் முழுதும் அதற்குள் நளினி, சுபா, சிவராசன் புகைப்படங்கள் பிரபலமாகியிருந்தன. அவருக்கு அடைக்கலம் கொடுக்க விரும்புகிறவர்கள் இங்கே குறைவாகவே இருப்பார்கள் என்றும் தோன்றியது.

நளினி வேலை பார்த்த இடங்கள், அவர் வசித்த வில்லிவாக்கம் வீட்டுப் பகுதி, ராயப்பேட்டை வீட்டுக்கு அருகே இருந்தவர்கள் அனைவரிடமும் விசாரித்து நளினியின் தொடர்புகள் பற்றி ஓரளவு தகவல் சேகரித்திருந்தோம்.

அதனைக் கொண்டு, அவர் செல்லக் கூடிய இடங்கள் என்று சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அங்கெல்லாம் புலனாய்வு அதிகாரிகளை முன்னதாக அனுப்பிவைத்திருந்தோம்.

அப்படி விழுப்புரத்துக்குச் சென்ற புலனாய்வு அதிகாரி கிருஷ்ண மூர்த்திக்கு ஒரு தகவல் கிடைத்தது. (தொடரும்)

# உறவினர்கள் பெயரில் காணி... பிரதேசசெயலாளரின் மோசடி!

✎ தீபம் CID

பொறுப்பான அரச அதிகாரியொருவரே அரச வளத்தை மோசடி செய்த சம்பவம் ஒன்று தொடர்பான தகவல்களை இந்த பகுதியில் வெளிப்படுத்துகிறோம்.

மட்டக்களப்பில் அரச காணிகளை அரசியல், நிர்வாக அதிகாரத்தை பயன் படுத்தி முறைகேடாக ஆக்கிரமிக்கப்படும் சம்பவங்கள் பலவற்றை ஏற்கனவே வெளிப்படுத்தி வந்திருந்தோம். உயரதிகாரிகள் சிலரின் அனுசரணையுடன் நடந்த இந்த மோசடிகள் அரங்கேற்றப் பட்டன.

இப்பொழுது நாம் வெளிப்படுத்தப் போகும் மோசடியுடன் மாவட்டத்தின் பொறுப்பான அரச அதிகாரியொருவர் தொடர்புபட்டுள்ளார்.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வட்டக்கல், மதுரங் குளம் கிராமத்தில் சுமார் 20 ஏக்கர் அரசகாணியை நபரொருவர் முறையற்ற விதமாக உடமையாக்க முயன்றுள்ளார். அந்த நபர் நாவிதன்வெளி பிரதேசசெயலாளராக கடமையாற்றிய எஸ்.கரன். தற்போது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இணைப்பு செய்யப்பட்டுள்ளார். கடந்த யூலை மாதத்தில் இருந்து எவ்வித கடமை பொறுப்பும் வழங்கப்படாமல் மாவட்ட செயலகத்தில் இணைக்கப்பட்டு, சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

மதுரங்குளம் மிகவும் பின்தங்கிய பிரதேசம். இங்குள்ள அரசகாணிகளில் மதுரங்குளம், குஞ்சன்குளம், பனிச்சங்கேணி போன்ற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். யுத்தகாலத்தில் காணி அனுமதி பெறப்படாமலேயே விவசாயத்தில் ஈடுபட்டனர்.

இந்த காணிகளை தொடர்ந்து பராமரித்துவரும் விவசாயிகள் குறிப்பிட்ட காலத்தின் பின்னர், விவசாய அமைப்புக்களில் பதிவுசெய்து, விவசாய காணி இடாப்பில் (PLR) பதிவுசெய்வார்கள். இந்த பதிவுள்ள காணிகளிற்கே உரம், விவசாய மானியங்கள் வழங்கப்படும்.

இந்த பகுதியிலுள்ள சுமார் 20 ஏக்கர் காணியை தனது குடும்பத்தின் பராமரிப்பில் இருந்தது என்று குறிப்பிட்டு, PLR பதிவிற்காக விண்ணப்பித்துள்ளார் எஸ்.கரன். அவர் தனது குடும்பத்தின் நீண்டநாள் பராமரிப்பில் இருந்ததென குறிப்பிட்டிருந்தாலும், அது தவறான தகவல். அவரது குடும்பத்தின் பராமரிப்பில் காணி இருந்ததென்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடையாது.

அந்த பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டு, மானியங்களை பெற்றுக்கொண்டவர்களது பட்டியலில், கரனது குடும்பத்தினரது விபரம் கிடையாது.

வாகரையில் தமது குடும்பம் விவசாயத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு, தனக்கு காணியை வழங்குமாறு கோரி, வெவ்வேறு பிரதேசங்களை சேர்ந்தவர்களின் பெயரில் அனைவரும் அவரது உறவினர்கள் காணிகளை பெற்றுக்கொள்ள முயன்றுள்ளார். ஆறு பேரின் பெயரில் காணிகள் கோரப்பட்டுள்ளன. ஆறு நபர்களும் தனித்தனி நபர்களாக, வெவ்வேறு முகவரிகளிடப்பட்டுள்ளன. இதில் கரன், அவரது மனைவியும் அடங்குவார்கள். அக்கரைப்பற்று, தம்பிலுவில் பிரதேச முகவரிகளையுடைய உறவினர்களும் உள்ளனர்.

இந்த காணியை தமது பராமரிப்பில் வைத்திருந்தது உண்மையெனில், அரசாங்க அதிகாரிகளுக்கான சொத்துப் பிரகடனத்தில் வெளிப்படுத்தியுள்ளனரா?

தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க நிதிப்பிரமாணங்களை மீறி அரசாங் உடமையான காணியினை பணத்திற்கு கொள்வனவு செய்வது மோசடியாகவோ, அரச வளம் துஸ்பிரயோகமாகவோ கருதப்படும். மேற்படி காணியை உரிமைகோரியுள்ளவர், அதன் உண்மையான பராமரிப்பாளர் இல்லையெனில், அவர் பணம் கொடுத்து காணியை வாங்கியதாகவே கொள்ளப்பட வேண்டும்.

அரசஉத்தியோகத்தரான முன்னாள் பிரதேசசெயலாளர், அரசகாணியொன்றை உரிமைகோர சட்டத்தில் இடம்கிடையாது. 5 இலட்சம் ரூபாவிற்கும் அதிக வருட வருமானத்தையுடைய அரச அலுவலர்கள், சட்டபூர்வ ஏற்பாடுகளின்படி காணியை குத்தகைக்கு பெற்றுக்கொள்ளலாமே தவிர, உரித்தாக்கிக்கொள்ள முடியாது.

காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் காணி பெற தகுதியில்லாத நிலையிலும், முன்னாள் பிரதேசசெயலாளர் அரசகாணிகளை மோசடியாக பெற்றுக்கொள்ள முயன்றுள்ளார். அந்த பிரதேச பொதுமக்களிற்கு உரித்தான காணிகளை மோசடியாக பெற முயன்றது மோசடியான செயற்பாடாகும்.

தனது குடும்ப உறவினர்களின் பெயரில் தலா மூன்று ஏக்கர் விவசாய நிலங்களை PLR பதிவிற்காக விண்ணப்பத்துள்ளார். 2008/4 சுற்றறிக்கையின் பின் ஒருவர் 1 ஏக்கர் PLR பதிவையே மேற்கொள்ள முடியும். எனினும், ஒவ்வொருவருக்கும் தலா மூன்று ஏக்கர் வீதம் விண்ணப்பித்துள்ளார்.

இந்த மோசடி செயற்பாடு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தீபம் கைவசம் வைத்திருக்கிறது. பொறுப்புடைய அரச அதிகாரிகளே, மக்களிற்குரிய வளங்களை மோசடியாக பெற்றுக் கொள்வது தவறல்லவா?

**வாகரையில் தமது குடும்பம் விவசாயத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு, தனக்கு காணியை வழங்குமாறு கோரி, வெவ்வேறு பிரதேசங்களை சேர்ந்தவர்களின் பெயரில் அனைவரும் அவரது உறவினர்கள் காணிகளை பெற்றுக்கொள்ள முயன்றுள்ளார்.**




---

3-ம் பக்க தொடர்ச்சி...

செய்த நரேந்திரமோடி தமிழ் தேசிய கூட்டமைப்பினரை சந்தித்து பேசினார்".

இந்த செய்தியில் என்ன அட்டடியென்ன சூட்சுமம் இருக்கிறதென யோசிப்பீர்கள். அதையும் சொல்லிவிடுகிறோம்.

அன்றைய சந்திப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டார். அவர் யார் என்பதை இப்பொழுது நாம் சொல்லப்போவதில்லை. பகிரங்கமாக சொல்வது சில இராஜதந்திர சிக்கல்களை தோற்றுவிக்கலாம். அதனால் இப்பொழுது அந்த பெயரை தவிர்த்து விடுகிறோம். கூட்டமைப்பில் இருப்பதே நான்கைந்து முக்கிய தலைவர்கள்தான், பிறகெதற்கு இந்த பீடிகை என நீங்கள் நினைக்கலாம். அடித்துக்கூட கேட்டாலும் இப்போது சொல்லமாட்டோம்!'

அந்த தலைவரை ஏன் முக்கியத்துவப் படுத்தவில்லை தெரியுமா?' அவர் மேற்கின் அமெரிக்காவின் ஆள் என இந்தியா கருதுகிறது. மோடியின் சந்திப்பில் கொடுத்த ரெட் லைட் எச்சரிக்கையை கூட்டமைப்பு கண்டுகொள்ளாததன் விளைவுதான் இப்போதைய நெருக்கடிகள் என்கிறார்கள். தனது விருப்பப்படி இலங்கை அரசியல் தலைவர்கள் நடக்காவிட்டால் அது மஹிந்த ராஜபக்சவாக இருந்தால் கூட கவிழ்க்க முடியுமென இந்தியா நினைக்கிறது. இதனால்தான் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஒப்ரேஷனை ஆரம்பித்திருக்கலாமென கூறுகிறார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்மையில் இந்தியா சென்று வந்திருந்தார். இந்த பயணத்தின் பின்னரே ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தனிவழி பயணம் தீவிரம் பெற்றிருக்கிறதென்கிறார்கள். இந்த பயணத்தில் கட்சிக்குள் அவ்வளவாக உடன்பாடில்லை. ரவிகரன் போன்ற சிலர் தமிழரசுக்கட்சிக்கு தாவிவிட்டனர். அண்மையில் கட்சி தாவிய ஒரு உறுப்பினருடன் பேசியபோது "மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் இருந்து தப்பிப்பதில் என்ன தவறு?" என தத்துவார்த்தமாக பேசினார்.

1980களில் பலஇயக்கங்கள் இந்தியாவால் போஷிக்கப்பட்டாலும், 80 இன் இறுதியில் இந்தியாவின் நோக்கத்திற்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆயுதக்குழுவாக செயற்பட்டிருந்தது. அப்போது ஏற்பட்ட கறையை கழுவ முடியாமல் திண்டாடும் நிலையில், இப்போதைய விலகலும் இன்னொரு கறையாகிவிடுமோ என்ற அச்சம் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரிடம் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இடைக்கால அறிக்கை பணிகள் முக்கிய கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அதை சவாலிற்குட்படுத்துவதைபோல கட்சி நடப்பதை அவர்களில் பலர் விரும்பவில்லை. கட்சியின் செயற்பாடுகள் அரசியலமைப்பு உருவாக்க பணிகளையே குழப்பினால், கழுவவே முடியாத அந்த கறையும் தம்முடன் ஒட்டிவிடும் என்பதே அவர்களின் அச்சம். கட்சித்தலைமை இதை புரிந்துகொள்ளாமல் செயற்படுகிறது என்று கவலையாக பேசினார்கள்.

மகிந்த ராஜபக்ச வீட்டிற்கு போனதற்கும், சுரேஷ் பிரேமச்சந்திரனின் கிளர்ச்சிக்குமிடையில் உள்ள ஒற்றுமையென எதை குறிப்பிட்டோமென்பது புரிந்ததா?

# முதலமைச்சரை கண்காணிக்கும் இரகசிய கமரா... வாயை மூடிய பிரதமர்!

கருடன்

### சம்பந்தரிற்கு தெரியாத 2 கோடி விடயம்

சொன்ன நேரத்தைவிட முன்னதாகவே வந்து, கடந்த வார தினசரிகளை புரட்டிக்கொண்டிருந்தார் கருடர். நம்மைக்கண்டதும் ஒரு சிரிப்புடன் "கடந்த வாரம் நான் எதிர்வுகூறியவற்றில் எத்தனை விடயங்களை கடந்த சிலநாள் தினசரிகள் செய்தியாக வெளியிட்டன என்பதை பார்த்தேன்" என்றார்.

"தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் புதிய கட்சி நுழைவது, மாற்று அணி முயற்சி, தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது 2 கோடி அபிவிருத்தி நிதி பற்றியெல்லாம் கருடர் சொன்னதன் பின்னர்தான் தினசரிகளில் வெளியாகியிருந்ததை நாமும் அவதானித்தோம்"

"ம்... அந்த 2 கோடி விவகாரம் பற்றி இன்னும் பல தகவல்கள் உள்ளன. தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர்தான் அந்த நிதியை பெற்றனர். ஆனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிற்கே அந்த விவகாரம் தெரியாது"

"இதென்ன புதுக்கதையாக இருக்கிறது"

"விபரமாக சொல்கிறேன். கடந்த 16ம் திகதி பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்ட வாக்கெடுப்பிற்கு முன்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்கள் கலந்துரையாடல் நடந்தது. இதில் 2 கோடி விவகாரம் பேசப்பட்டது. தமிழரசுக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு மட்டும் இப்படியான விசேட நிதி ஒதுக்கி, மற்றவர்களை புறந்தள்ளினால் நாம் வாக்களிக்கப்போவதில்லையென சில எம்.பிக்கள் சொன்னார்கள். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய புகார்களை சொல்லியும் சிலர் வாக்களிக்கப் போவதில்லையென்றார்கள்.

2 கோடி தகவலை கேட்ட சம்பந்தன், கொஞ்சம் வியப்படைந்தவராக 'அப்படி நடந்ததா?' என கேட்டார். பிறகு, 'தம்பியவை யார்யார் அந்த நிதியை பெற்றீர்கள்' என கூட்டத்தை பார்த்து கேட்க, எல்லோருமே சத்தமின்றி இருந்தார்கள். வாயை திறக்கவில்லை. ஆனால் அந்த நிதியை பெற்றவர்களும் அந்த இடத்தில் இருந்தார்கள்.

"யார் யார் நிதி வாங்கியவர்கள்?"

"அதை பின்னர் சொல்கிறேன். எம்.பிக்கள் பலரும் அரசாங்கத்தின் மீது நிறைய குற்றச்சாட்டுக்களை வைத்ததால், அனைவரையும் அழைத்துக்கொண்டு பிரதமரிடம் சென்றார் சம்பந்தன்.

அதற்கு முன்னரே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த செல்வம் அடைக்கலநாதன், 'கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களிற்கும் விசேட நிதி ஒதுக்கப்பட வேண்டும். அப்படி நிதி ஒதுக்கப்படாவிட்டால் பலர் வரவு செலவுத்திட்டத்திற்குஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள்' என சொல்லிவிட்டார்.

"பிரதமர் அதற்கு என்ன சொன்னார்?"

"ஆட்களை கையாள்வதில் பிரதமர் பழம் தின்று கொட்டை போட்டவர். அவர் நாசூக்காக கையாண்டார். 'இதெல்லாம் ஒரு பிரச்சனையா? கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களிற்கும் விசேட நிதி உடனே ஒதுக்குகிறேன்' என கூறிவிட்டார்.

### வாழைச்சேனை விவகாரம்

கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்பில் ரணில் மிக தாராளமாக நடப்பவரை போலத்தான் காட்டிக் கொண்டார். எல்லா கோரிக்கைகளையும் செய்து தருவேன் என்றார். அனைத்து உறுப்பினர்களிற்கும் 2 கோடி நிதி உடனே ஒதுக்கப்படும் என்றார். ஆனால் மட்டக்களப்பு எம்.பி யோகேஸ்வரனின் கோரிக்கை நிறைவேறுமா என்பதுதான் சந்தேகமாக உள்ளது"

"யோகேஸ்வரன் என்ன கோரிக்கை வைத்தார்?"

"இந்த கேள்விக்கு பதில் சொல்ல முன்னர், நீங்கள் முதல் கேட்ட கேள்விக்கு பதில் சொல்கிறேன். அந்த விசேட அபிவிருத்தி நிதியை பெற்றவர்கள் யார் என்பதை சொல்லாமல், யார் யார் பெறவில்லையென்பதை சொல்கிறேன். மட்டக்களப்பில் யோகேஸ்வரன், ஸ்ரீநேசன், வியாழேந்திரன் ஆகிய மூவருக்கும் கிடைக்கவில்லை. வவுனியாவில் சிவசக்தி ஆனந்தன், மன்னாரில் செல்வம் அடைக்கலநாதன், யாழ்ப்பாணத்தில் சித்தார்த்தன் பெறவில்லை. இந்த பட்டியலில் இடம் பெறாத இன்னும் இரண்டு அல்லது மூன்று எம்.பிக்களும் விசேட அபிவிருத்தி நிதியை பெறவில்லை. இனி அனைவருக்கும் நிதி கிடைக்கும். ஆனால் உடனடியாக கிடைக்குமா என்பதுதான் தெரியவில்லை. ஏனெனில் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. அதற்கு பின்னர் நிதி ஒதுக்குவதில் சிக்கல் ஏற்படலாம்.

யோகேஸ்வரன் விடயத்தை சொல்கிறேன். வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதெனில் வாழைச்சேனை காகித ஆலையை மீள இயக்க வேண்டுமென அவர் சம்பந்தனிடம் நிபந்தனை விதித்தார்.

வாழைச்சேனை காகித உற்பத்திச்சாலை பல வருடங்களாக இயங்காமல் இருக்கிறது. பெருமளவு வேலைவாய்ப்பை வழங்கிய கிழக்கின் முக்கிய தொழிற்சாலையாக இருந்தது. சில மாதங்களின் முன்னர் பாராளுமன்றத்தில் யோகேஸ்வரன் உரையாற்றிய போது, வாழைச்சேனை காகித ஆலையை மீள இயங்கவைக்க வேண்டுமென்றார். அதற்கு பதிலளித்த கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீன் நிதி வழங்குனர்களை அழைத்து வந்தால் மீள இயக்கலாம் என்றார்.

வாழைச்சேனை ஆலையை மீள இயங்க வைக்க கொரிய அரசு நிதியளிக்க அண்மையில் முன்வந்துள்ளது. ஆனால் காகித ஆலையை மீள ஆரம்பிக்க அரசு தயங்குகிறது."

"ஏன் தயங்குகிறார்கள்?"

"வாழைச்சேனை காகித ஆலை சிறப்பாக இயங்கிய போது அதன் வருமானத்தில் இருந்து எம்பிலிபிட்டியவில் ஒரு காகித ஆலை திறக்கப்பட்டது. இப்போது அதுவும் செயலற்றுப்போய் விட்டது. வாழைச்சேனை காகித ஆலைக்கு கொரியா வழங்கும் நிதியை, எம்பிலிபிட்டியவிற்கு மாற்ற அரசு விரும்புகிறது. வாழைச்சேனை காகித ஆலை வளாகத்தில் தகவல் தொழில்நுட்க பூங்கா ஒன்றை அமைக்கப் போகிறோம் என பிரதமர் அந்த சந்திப்பில் தெரிவித்தார்.

வாழைச்சேனையில் காகித ஆலைதான் வேண்டுமென யோகேஸ்வரன் உறுதியாக நின்றார். இறுதியில், சம்பந்தன் சொன்னார் 'நான் அங்கு சென்று பார்த்தேன். காகித ஆலையை மீள் இயங்க வைக்க வேண்டும். அதனால் பெருமளவு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்' என்றார்"

"பிரதமர் என்ன சொன்னார்?"

"பிரதமர் மௌனமாக இருந்தார். ஆனால், 'பிரதமரிடம் பேசி காகித ஆலையை மீள இயங்கவைப்பேன். வரவுசெலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களியுங்கள்' என யோகேஸ்வரனிடம் சம்பந்தன் சொன்னார். தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் யாராவது வரவு செலவுதிட்டத்திற்குஎதிராகவாக்களித்தால் அது வீணாண நெருக்கடியை ஏற்படுத்துமென கூட்டமைப்பு தலைமை நினைக்கிறது. வரவு செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களித்தால், பின்னர் தீர்வு முயற்சிகளில் அரசிற்கு அழுத்தம் கொடுக்க முடியாதென நினைக்கிறார்கள்"


தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சங்கிலியன் பூங்காவில் நடந்த மரநடுகை மாத நிகழ்வில் முதலமைச்சர்

### சுரேஷின் அவசரமும் கட்சியின் குழப்பமும்

"சரி வடக்கு நிலவரங்கள் எப்படியிருக்கிறது? உள்ளூராட்சி தேர்தலில் கூட்டணிகள் முயற்சிகள் எப்படியிருக்கிறது?" கருடரை வடக்கு பக்கம் திருப்பினோம்.

"முதலாவதாக கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் குறிவைக்கப்பட்டுள்ளார். அவரை பதவியிலிருந்து அகற்ற நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதை பற்றியும் ஆலோசிக்கிறார்கள். இது சிங்கக்கொடி ஏற்ற மறுத்ததற்காக அல்ல. ஈ.பி.ஆர்.எல்.எவ் தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து தனித்து சென்று உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொண்டால் மாத்திரமே.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை சேர்ந்த சர்வேஸ்வரன் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றியடைந்து அமைச்சர் பதவியை வகிக்கும்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினால், சர்வேஸ்வரனும் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்படி நடந்தால் வடக்கிற்கு நான்கு மாதத்தில் மூன்றாவது கல்வியமைச்சர் வருவார்"

"அப்ப மாகாணசபையில் இன்னும் அதிக குழப்பங்களிற்கு வாய்ப்பிருக்கிறது என்கிறீர்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தேர்தல் நிலைப்பாடு எப்படியிருக்கிறது?"

"உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட ஈ.பி.ஆர்.எல்.எவ் தயாராகிக் கொண்டிருக்கிறது. கூட்டணி விடயங்கள் இன்னும் முடிவாகவில்லை. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிடமாட்டார்கள் என்பது மட்டும் உறுதியாகியுள்ளது. கூட்டமைப்பு வேறு சின்னத்தில் போட்டியிட்டால் மாத்திரமே ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமையின் இந்த முடிவிற்கு கட்சிக்குள் பெரிய வரவேற்பில்லை. இரண்டாம் நிலைத்தலைவர்கள் பலர் அதிருப்தியுடன் இருக்கிறார்கள். சுரேஷ் பிரேமச்சந்திரனிற்கு தமிழரசுக்கட்சியுடன் உள்ள பகையைதீர்க்க முயல்கிறார் என முணுமுணுக்கிறார்கள். கட்சியின் மட்டக்களப்பு முக்கியஸ்தர்கள் சிலர் அண்மையில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியொன்றின் தலைவரை தொலைபேசியில் அழைத்துள்ளனர். "சுரேஷ் பிரேமச்சந்திரன் அவசரப்படுகிறார். அவருக்கு நிலைமையை புரிய வையுங்கள்" என கேட்டுள்ளனர்.

### மாற்று அணிக்கு பிள்ளையார் சுழி போட்ட இந்தியர்

வீடு அல்லது உதயசூரியன் தவிர்ந்த வேறு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியடைய முடியாதென மட்டக்களப்பு முக்கியஸ்தர்கள் நினைக்கிறார்கள். அதனால்தான் உதயசூரியன் சின்னத்தில் கூட்டணி அமைப்பது குறித்த பேச்சுக்கள் மீண்டும்இப்பொழுதுதீவிரம்பெற்றுள்ளன"

"உதயசூரியன் சின்னத்தில் கூட்டணி அமையுமா?"

"அதை இப்போது சொல்ல முடியாது. தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். கூட்டணி பேச்சிக்களிற்காக நவம்பர் 20ம் திகதி ஆனந்தசங்கரி யாழ்ப்பாணம் வந்து தங்கினார். அன்று காலையே சந்திப்புக்கள் நடந்தன. ஒரு பொது உடன்பாட்டிற்கு

வந்து, கூட்டணி கொள்கை விவகாரங்களை எழுத்துமூல ஆவணமாக்க முயற்சிக்கிறார்கள். இதில் கையெழுத்திட ஆனந்தசங்கரி சம்மதித்தால் கூட்டணி அமையும்.

ஆனந்தசங்கரி இதுவரை பேசி வந்த நிலைப்பாட்டிற்கு மாறான நிலைப்பாடுகளும் கொள்கையாக வரையப்பட்டுள்ளது. அதையெல்லாம் ஏற்றுத்தான் ஆனந்தசங்கரி கையெழுத்திட வேண்டும். அதற்கு அவர் சம்மதித்து விட்டார்.

ஆனால் கடந்த ஒரு மாதமாக கொஞ்சம் கலங்கிப்போயிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறார்கள். தமக்கு சவாலான ஒரு கூட்டணி உருவாகாதென நினைக்கிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ், மக்கள் முன்னணியினரிற்கிடையில் சரியான புரிந்துணர்வு இருப்பதாக தெரியவில்லை. இதனால் கூட்டணி நீடிக்காதென அவர்கள் நினைக்கிறார்கள்.

அரசியல் நிலைப்பாடுகளினடிப்படையில் ஏற்படும் கூட்டணிதான் வலுவாகஇருக்கும் ஆனால்இந்தகூட்டணி அப்படி அமையவில்லை. அரசியல் கட்டுரைகள் எழுதும் சிலர்தான் இந்த கூட்டணி முயற்சிகளின் பின்னணியில் நிற்கிறார்கள். விடுதலைப்புலிகளின் காலத்தில் வாராவாரம் கட்டுரை எழுதிய ஒருவர் இப்போது இந்தியாவில் இருக்கிறார். அவரும் அவரது வேறு சில நண்பர்களும் சேர்ந்துதான் கூட்டணிக்கு பிள்ளையார்சுழி போட்டனர். இந்த கூட்டு இயல்பாக உருவாகாததால்தான் இவ்வளவு சிக்கல்படுகிறது"


ஆனந்தசங்கரி


கல்வியமைச்சர் சர்வேஸ்வரன்

**முதலமைச்சரை கண்காணிக்கும் இரகசிய கமரா**

"முதலமைச்சரை சமரசப்படுத்தி மாற்று அணிக்குள் அழைத்து வர முயற்சிகள் நடக்கவில்லையா?"

"சில முயற்சிகள் நடந்தன. ஆனால் முதல்வர் பதவி இப்பொழுது அவசியமென விக்னேஸ்வரன் நினைக்கிறார். இன்னும் சில மாதங்கள்தான் வடமாகாண சபைக்கு ஆயுள். அதுவரை முதல்வர் பதவியிலிருந்தால், அடுத்த மாகாணசபை தேர்தலில் வலுவான கூட்டணியொன்றை அமைக்கலாமென முதலமைச்சர் நினைக்கிறார். மாற்று அணியென முதலமைச்சர் இதுவரை கணக்கிட்டு வைத்திருந்தது, அடுத்த மாகாணசபை தேர்தலில் தான் உருவாக்கும் கூட்டணியைத்தான். மற்றவர்கள் உருவாக்கும் கூட்டணியில் அவர் இணைய விரும்பவில்லை. மாகாண சபையின் ஆயுள் முடியும் தறுவாயில் முதலமைச்சரின் தனி ஆவர்த்தனத்தை சில சமயம் அவதானிக்கலாம்.

முதலமைச்சரை கண்காணிக்கும் இரகசிய கமரா பற்றிய ஒரு தகவலும் உள்ளது"

"முதலமைச்சரையே கண்காணிக்கிறார்களா? யார் கண்காணிக்கிறார்கள்?"

"இது கொஞ்சம் சுவாரஸ்யமான விடயம். முதலமைச்சரை சந்திப்பவர்களின் விபரங்கள் உடனுக்குடன் ஊடகங்களில் செய்தியாக வெளியாகிவிடுகிறது. முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தமிழரசுக்கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட சமயத்தில் தனது அணியை சேர்ந்தவர்களுடன் இரகசிய மந்திராலோசனைகளில் ஈடுபட்டு வந்தபோதும், முதலமைச்சரை யார் சந்திக்கிறார்கள் என்ற விடயம் உடனுக்குடன் வெளியில் கசிந்து கொண்டிருந்தது. முதலமைச்சரை சந்திப்பதுகூட செய்தியாகி விடுகிறதே என சம்பந்தப்பட்டவர்கள் தலையை சொறிந்து கொண்டிருந்தார்கள். எப்படி தகவல் வெளியில் கசிகிறதென தெரியாமல் முதலமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகளும் விழித்துக்கொண்டிருந்தனர். அண்மையில்தான் இதற்கான காரணத்தை ஓரளவு ஊகித்துள்ளனர். அது முதலமைச்சரின் வீட்டிற்கு மிக நெருக்கமாக உள்ள வீடொன்றில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கமரா.


முதலமைச்சரின் வீட்டை கண்காணிக்கக்கூடிய விதமாக அங்கு சிசிரிவி கமரா பொருத்தப்பட்டுள்ளது. அந்தவீட்டிலிருந்து சிசிரிவி பூட்ரேஜ்கள் ஊடகங்களிற்கு சென்று கொண்டிருக்கிறதென பாதுகாப்பு அதிகாரிகள் நம்புகிறார்கள்".

பேசிக்கொண்டிருந்த கருடர் திடீரென நேரத்தை பார்த்து விட்டு, "இப்பொழுது கிளம்ப போகிறேன். மாற்று அணியின் ஒப்பந்த விபரங்களுடன் அடுத்த வாரம் சந்திக்கிறேன்" என்றபடி பறந்து சென்றார்.

## சிவாஜிலிங்கத்திற்கு வாகனம் கொடுத்த அனந்தி!

தனது அமைச்சின் பாவனையிலிருந்த வாகனம் ஒன்றை மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் பாவனைக்கு வழங்கியுள்ளார் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன். ழிறிறிதி 1213 என்ற இலக்கமுடைய வாகனமே சிவாஜிலிங்கத்தின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் பாவனையில் இருந்த இரண்டு வாகனங்களும், கூட்டுறவு அமைச்சிற்கு வழங்கப்பட்டது. ஒரு வாகனத்தை அனந்தி சசிதரன் பயன்படுத்துகிறார். மற்றையதை சிவாஜிலிங்கத்தின் பாவனைக்கு வழங்கியிருக்கிறார். இதற்கான எரிபொருள் செலவை சிவாஜிலிங்கமே கவனித்துக்கொண்டாலும், அமைச்சின் பாவனைக்கு வழங்கப்பட்ட வாகனத்தை உறுப்பினரின் பாவனைக்கு வழங்குது நடைமுறை மீறலாகும். இது வளத்துஷ்பிரயோகமாகவும் அமையும் என அதிகாரிகள் சிலர் அமைச்சரிற்கு சுட்டிக்காட்டியிருந்தபோதும், அதை கவனத்தில் கொள்ளாமல் சிவாஜிலிங்கத்தின் பாவனைக்காக வாகனத்தை வழங்கியுள்ளார் என கூறப்படுகிறது.

## கிளிநொச்சி வடமாகாணத்தில் இல்லை!



கிளிநொச்சி மாவட்டத்தை வடமாகாண நிர்வாக கட்டமைப்புக்களிற்கு கட்டுப்படாத தனிப்பட்ட இராச்சியமாக மெதுமெதுவாக மாற்றிக்கொண்டு வருகிறார் சிறிதரன் எம்.பி. வடமாகாண முதலமைச்சருக்கு எதிரான தமிழரசுக்கட்சியின் முரண்பாட்டை, நிர்வாக இடையூறு என்றளவிற்கு கிளிநொச்சி மாவட்டம்தான் வளர்த்து செல்கிறது. கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன், விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஆகியோரை கிளிநொச்சியில் ஓரங்கட்டும் காரியத்தை கிளிநொச்சியில் திட்டமிட்டு செய்கிறார்கள். ஏற்கனவே கிளிநொச்சியில் இரண்டு பாடசாலை நிகழ்வுகளிற்கு கல்வியமைச்சரை அழைக்காமல், அவருக்கு சவால் விடும் விதமாக செயற்பட்டிருந்தனர். இந்த வரிசையில் தற்போது விவசாய அமைச்சர் க.சிவனேசனிற்கு எதிராகவும் ஒரு நிகழ்வு நடந்துள்ளது. இரணைமடு குள புனரமைப்பின் பின் காலபோக செய்கைக்காக நீர் திறந்துவிடப்படும் நிகழ்வு அவசரகதியில் 20ம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்விற்கு முதலமைச்சரையோ, விவசாய அமைச்சரையோ அழைப்பதில்லையென நிகழ்வு ஏற்பாட்டின்போதே திட்டமிடப்பட்டிருந்தது. முதலமைச்சருக்கு அழைப்பு கொடுக்க வேண்டுமென இரணைமடு கமக்காரர் அமைப்பை சேர்ந்த ஒரு பகுதினர் வற்புறுத்தியுள்ளனர். "முதலமைச்சருக்கு அழைப்பு கொடுக்கலாம். ஆனால் அவர் வராமல் தனக்கு பதிலாக சர்வேஸ்வரனையோ, சிவநேசனையோ அனுப்பினால் சிக்கலாகிவிடும்" என கூறப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் பற்றிய விளக்கத்தை அமைச்சின் செயலாளரிடம்,விவசாய அமைச்சர் எழுத்துமூலம் கேட்டிருக்கிறார். இதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்க விவசாய அமைச்சில் முடிவாகியுள்ளது.

## யார் தலைவர்?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்,முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் விரைவில் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதற்கான வாய்ப்பு உடனடியாக கிடையாதென்றே தெரிகிறது. மஹிந்த ராஜபக்சவுடன் இணைவதை மைத்திரிபால சிறிசேன விரும்பவில்லை. மைத்திரி, மஹிந்த இணைவு என்றல்லாமல், மஹிந்தவுடன் மைத்திரி இணைவு என்று அமையும் விதமாகவே மஹிந்த தரப்பில் காய்கள் நகர்த்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி தேர்தலை மஹிந்த தலைமையில் எதிர்கொள்வது, மீண்டும் கட்சி தலைமை போன்ற மஹிந்த தரப்பின் நிபந்தனைகளை மைத்திரி தரப்பு கொஞ்சமும் ரசிக்கவில்லை. மைத்திரிபாலவின் தலைமைத்துவத்தை மஹிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டால் மாத்திரமே இணைவு சாத்தியம் என தெரிகிறது.


## என்னவோ நடக்கிறது!

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் விவகாரத்தில் மிகப்பெரியளவில் அரசியல் தலையீடுகள் நடந்து வருகின்றன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இலங்கை வரலாற்றில் வேறெந்த அரசாங்க அதிபர் நியமனத்திலும் இவ்வளவு அரசியல் தலையீடு இருந்திருக்க வாய்ப்பில்லை என்கிறார்கள். அரசாங்க அதிபர் நியமனம் நிகழ்வதற்கு முன்னரே, மட்டக்களப்பில் பல அமைப்புக்கள் புதிய அரசாங்க அதிபர் உதயகுமாரை வரவேற்று பதாதைகள் கட்டியிருந்தன. அமைச்சரவை அனுமதி கிடைப்பதற்கு முன்னரே புதிய அரச அதிபராக யார் நியமிக்கப்படுவார்கள் என்பதை பதாகை அமைத்த அமைப்புக்கள் எப்படி உறுதியாக தெரிவித்தன என்ற சர்ச்சை எழுந்துள்ளது. மட்டக்களப்பு அரசாங்க அதிபர் விவகாரத்தில் அரசியல் தலையீடுகள் தாராளமாக நடப்பதாக ஏற்கனவே தீபம் செய்தி வெளியிட்டிருந்தது. அதை உறுதிசெய்யும் விதமாக இந்த சம்பவங்கள் அமைந்துள்ளன.

நிலவன்

மட்டக்களப்பில் ஏழு பாடசாலை இளைஞர்களுடன் மூன்று பிள்ளைகளின் தாய் கைது செய்யப்பட்ட விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மிகவும் ஒழுக்கம் நிறைந்த சமூகமாக கட்டுக்கோப்புடன் வளர்க்கப்பட்ட தமிழ் சமூகத்தின் நிலை இன்று தலைகீழாக மாறியுள்ளது. இளைஞர்கள் மிகவும் திட்டமிடப்பட்டு போதை வஸ்துப் பாவனைக்கு அடிமையாக்கப்படுவதுடன்





# ஏழு இளைஞர்களுடன் கைதான மூன்று பிள்ளைகளின் தாய்!

## நடந்தது என்ன?

விபச்சார நடவடிக்கைகளுக்கும் பயன் படுத்த படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

இந்த விவகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரண்டு இனங்களுக்கிடையே பல்வேறு விதமான கருத்துக்களை பதிவு செய்திருந்தது. பல கிசுகிசுக்களை தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் அறிந்து கொண்ட சமூகத்திற்கு தங்களது பகுதியில் நடந்த இந்த கைது சம்பவம் ஊடாக பொது மக்கள் மத்தியில் பலவிதமான ஊகங்கள் தெறிக்க விடப்பட்டிருந்தது.

மிக முக்கியமாக முகநூல் பதிவாளர்கள் மிக வேகமாக கண் காது மூக்குகள் வைக்கப்பட்டு பலவிதமான ஊகங்களுடன் ஆங்கில பட தரத்தில் பதிவிட்டார்கள். ஆனால் அவை அனைத்தும் பொய் என்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நடந்து என்ன?

மட்டக்களப்பு தாண்டவெளி, பாரதி வீதி இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு ஒன்றில் இளைஞர் குழுக்களின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் கிராம சேவையாளரிடம் பல தடவைகள் முறையிட்டு வந்தனர். சம்பவதினம் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளால் உசாரடைந்த மக்கள் கிராமசேவகரிற்கு அறிவிக்க, நேரடியாக சென்று அவதானித்த கிராம சேவையாளர் உடனடியாக மட்டக்களப்பு பொலீசாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலீசார் வீட்டில் இருந்த முஸ்லீம் பெண் ஒருவரையும் ஏழு இளைஞர்களையும் கைது செய்ததுடன், வீட்டில் இருந்து ஆண் உறைகள், கஞ்சா உள்ளிட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர்.

இந்த கைது சம்பவம் மட்டக்களப்பு நகர் பகுதியில் பல்வேறு ஊகங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தி இருந்தது. அதுவும் ஒரு முஸ்லீம் பெண்ணுடன் ஏழு இளைஞர்கள் ஒரே வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டதாக வெளியான செய்தி தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஒரு வித சமூக முரண்பாட்டை உருவாக்கி இருந்தது.

மார்க்க ரீதியாக மிகவும் கட்டுப்பாடான முஸ்லீம் சமூகத்திற்கு தமது பெண் ஏழு இளைஞர்களுடன் இருந்து கைது செய்யப்பட்டதாக வந்த செய்தி அவர்களது சமூகத்திற்கு இழிநிலையை ஏற்படுத்தியதாக கருதியிருந்த நிலையில், வெளியாகிய பொலிஸாரின் விசாரணை அறிக்கை அதற்கு மாறாக அமைந்திருந்தது.

பொலீஸ் விசாரணைகளின் படி

வாழைச்சேனையில் கல்வி பயின்ற இளைஞர் ஒருவர் தனது மேற்படிப்பிற்காக மட்டக்களப்பில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து, மட்டக்களப்பு நகர் பகுதியில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில் கல்வி பயின்று வந்துள்ளார்.

அந்த வீட்டில் அவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த சம்பவங்களை பலதடவைகள் அப்பகுதிக்கு உரிய கிராம சேவகர் அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் குறித்த வீட்டில் இருந்த ஏழு இளைஞர்களையும் முஸ்லீம் பெண் ஒருவரையும் கைது செய்து விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இதில், கைது செய்யப்பட்ட பெண் காத்தான்குடியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டதுடன், அவர் மட்டக்களப்பு வெயிலி வீதியில் உள்ள ஒருவர் மீது காதல் கொண்டுள்ளதாகவும், காதலனை சந்திப்பதற்காகவே குறித்த பெண் அவ் வீட்டுக்கு வந்ததாகவும் அவ்வேளையில் நடைபெற்ற சுற்றிவளைப்பில் தான் பெண்ணும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடந்த வீட்டை சுற்றிவளைத்த போது ஆண் உறைகள், கஞ்சா உள்ளிட்ட பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வாடகைக்கு வீடு எடுத்த இளைஞருக்கு வெளிநாட்டில் இருந்து பணம் வருவதாகவும், அவரின் தாயார் வாழைச்சேனை பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றி வருவதாகவும் கூறப்படுகிறது.

குறித்த இளைஞருக்கு எதிராக கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக 10,000 ரூபா அபராதமும் ஏழு நாள் விளக்கமறியலும், மற்றைய ஆறு பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த பெண்ணும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் இது போன்ற முறையற்ற சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. குறித்த மாணவர்கள் தொடர்பான தகவல்களை வெளியாகக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் உயர்தரம் கற்று வருபவர்கள். அவர்கள் தங்கியிருந்த வீட்டில் ஆண் உறைகள், கஞ்சா உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 27 வயதுடைய பெண் காத்தான் குடியை சேர்ந்தவர் எனவும், கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை கடந்த காலங்களில் பெரும் வறுமைக்கு மத்தியிலும் மாணவர்கள் படித்து உயர் நிலையை அடைந்த நிலையில், தற்போது செல்வம் காரணமாக மாணவர்களின் வாழ்வு சீரழிவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு அப்பால் குறித்த சம்பவம் தொடர்பாக பல கேள்விகள் தொக்கி நிற்கின்றது. குறிப்பாக சம்பவத்தில் கைதான பெண் அந்த வீட்டிற்கு வந்ததாக கூறப்படும் காரணம் மற்றும் குறித்த இளைஞர்களுக்கு கஞ்சா உள்ளிட்ட போதைபொருட்கள் எவ்வாறு கிடைத்தது போன்ற விடயங்கள் குறித்து பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.


இளைஞர்களுக்கு கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் எவ்வாறு கிடைத்தது அதனை விநியோகம் செய்தவர்கள் யார்?

அந்த வீட்டில் ஆணுறை கண்டு பிடிக்கப்பட்டால் அந்த வீட்டிற்கு வந்து போகும் பெண் அல்லது பெண்கள் யார்?

அந்த பெண் அவ்விடத்திற்கு காதலனை சந்திக்க வந்ததாக பொலிசார் கூறுகின்றனர். உயர்தரம் படிக்கும் மாணவர்களின் இருப்பிடத்தில் 27 வயது பெண் எந்த காதலனை சந்திக்க வந்தார்? மாணவர்களில் ஒருவரா அல்லது வெளியில் இருப்பவரா? அது உண்மையா?

இப்படி பல கேள்விகளுக்கு இன்னும் விடை தேடவேண்டியுள்ளது.

தமிழ் பகுதிகளில் தொடர்ந்து இது போன்ற பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன அதனை கண்காணித்து தடுக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அத்துடன் கல்வி கற்பதற்காக தங்களது பிள்ளைகளை தனியாக படிக்க அனுமதிக்கும் பெற்றோர்களுக்கும் தங்களது பிள்ளைகள் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்து அவர்களை தனியாக நண்பர்களுடன் படிப்பதற்காக அனுமதிக்கும் பெற்றோர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்க வேண்டும்.





## ஹிஸ்புல்லாவின் சொல் அல்ல செயலே வேண்டும்!

வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் என்கிறார் ஹிஸ்புல்லா. காலியில் உண்மையிலேயே முஸ்லிம்கள் தாக்கப்படுகிறார்கள். நாடு முழுவதும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் அபாயம் அச்சப்படும் அளவிற்கு அதிகரித்திருக்கிறது. இந்த அபாய கட்டத்தை கடப்பதில் ஹிஸ்புல்லாவிடம் செய்வதற்கு ஒன்றுமில்லாமலிருக்கிறது. ஆனால் மேலும் கொதிநிலையை வளர்க்கும் இனவாத பேச்சுக்களிற்கு மட்டும் குறைவில்லாமல் இருக்கிறது.

எல்லா இனங்களிலுமே இனவாதம் பேசுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், ஹிஸ்புல்லா வாக்கு அரசியலை மையமாக வைத்து இனவாதம் பேசுகிறார். சில வருடங்களின் முன்னர் ஹிஸ்புல்லா பேசியதாக ஒரு வீடியோ வெளியாகியிருந்தது. இந்துக்கோயில் இருந்த இடத்தில் மீன் சந்தை அமைத்தேன், நீதிபதியை மாற்றி தீர்ப்பை மாற்றினேன் என்ற சாரப்பட உள்வட்ட கூட்டமொன்றில் பேசினார். இந்தவகை பேச்சுக்கள் அதிதீவிர எண்ணம் கொண்டவர்களை வளைத்துப்போடலாம். ஆனால், சிறுபான்மையினங்களிற்கு உதவப்போவதில்லை.

தமிழர்களிலும் முஸ்லிம் விரோத மனப்பான்மை கொண்ட அரசியல்வாதிகள் சிலர் இருந்தனர். ஆனால் கடந்த இரண்டு தேர்தல்களிலும் தமிழ் மென்சக்தியொன்று மேலெழுந்திருக்கிறது. ஒப்பீட்டளவில் மற்றைய இனங்களை விட, இனஐக்கியம் தொடர்பான சாதகமான பார்வையும் தமிழர்களிடம் அதிகரித்துள்ளது.

முஸ்லிம்களை விட தமிழர்கள் பெரிய இனம், தமிழர்கள் சம்மதித்துள்ள போதே முஸ்லிம்களும் விட்டுக்கொடுத்து நடந்துவிட வேண்டுமென்ற சட்டாம்பிள்ளை வாதத்தை வைக்கவில்லை. இலங்கையில் சிறுபான்மையினங்கள் உண்மையிலேயே அச்சுறுத்தலான நிலைமையை எதிர்கொள்கின்றன, அவர்களிற்குள் புரிந்துணர்வு இருக்காவிட்டால் அவர்களை ஹிஸ்புல்லாவாலோ, சம்பந்தனாலோ காப்பாற்ற முடியாதென்பதே மெய். இந்த கள யதார்த்தத்தை சிறுபான்மையினங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கிழக்கின் முதல்குடிகள் யார், பின்னால் வந்தவர்கள் யார் என்ற வாதங்களை வரலாற்றை எழுதுவதற்கு தேவையானால் வைத்திருக்கலாம். ஆனால் அரசியலிற்கு அது ஆபத்தானது. இலங்கையில் இன்று இருக்கும் அத்தனை இனங்களும் தவிர்க்கவே முடியாமல் இலங்கையில்தான் இருந்தாக வேண்டும். யாரையும் எங்கும் கப்பலேற்ற முடியாது.

கடந்த நாற்பதாண்டுகளாக இனங்களிற்குள் நீடித்த பகையும், சந்தேக உணர்வும் இன்று இல்லை. கடந்தகால பட்டறிவுதான் இந்த முதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வடக்கு கிழக்கு இணைவதா பிரிவதா என்பதை இரண்டு சமூகங்களும் பேசி முடிவெடுக்க வேண்டும். இனவாதத்தை தூண்டும் தலைவர்கள் அதை முடிவெடுக்க முடியாது. வடக்கு கிழக்கு இணைந்தாலும், முஸ்லிம்களின் சகலவிதமான அரசியல் உரித்துக்களையும் அங்கீகரித்து, தம்மைதாமே நிர்வகிக்கும் ஒரு நிர்வாக பொறிமுறை அவசியம். அந்த மனப்பக்குவம் இன்று தமிழ் அரசியலில் வளர்ந்துவிட்டது.

தமிழ் முஸ்லிம் உறவென்பது தனியே வடக்கு கிழக்கு இணைப்பல்ல. இன்று கிழக்கில் விஸ்பரூபம் எடுத்துள்ள காணி விவகாரமும் அதனுடன் தொடர்புடையதுதான். கிழக்கில் முஸ்லிம்களின் சனப்பெருக்கத்துக்கு தகுந்தளவில் நிலங்களை கைவசம் வைத்திருக்கவில்லையென்பது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்மை அவர்கள் நிலங்களை சுவீகரிப்பது பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசியல், நிர்வாக அதிகாரத்தை பயன்படுத்தி முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் இந்த நில சுவீகரிப்பின் பின்னால் இருக்கிறார்கள். மட்டக்களப்பில் தலையாய பிரச்சனையாக உருவெடுத்துள்ள இந்த நில சுவீகரிப்பு தொடர்பாக ஏற்கனவே தீபம் பல தகவல்களை ஆதாரபூர்வமாக வெளியிட்டிருந்தது. மட்டக்களப்பில் நடந்த மோசமான நில சுவீகரிப்பு ஒன்று தொடர்பான ஆவணங்களை விரைவில் வெளியிடுவோம்.

ஒரு சில முஸ்லிம் எம்.பிக்களே இந்த நில சுவீகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். சூழ்ச்சிகரமான அணுகுமுறைகளுடன், ஆக்ரோச மனநிலையில் இந்த காரியத்தில் ஈடுபட்டுள்ளனர். இதை எதிர்கொள்ளும் வல்லமை பிரதேசத்தில் உள்ள தமிழ் அரசியல்தலைமைகளிடம் துளியளவும் கிடையாது. இதேநிலை நீடிப்பது மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் உறவில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த பொறுப்புணர்வு முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் ஏற்பட வேண்டும்.

மட்டக்களப்பில் நடக்கும் நில சுவீகரிப்பை கட்டுப்படுத்தி, அவற்றை வெளிப்படையானதாக, அனைத்து இனங்களிற்கும் சமமாக காணி கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கே உள்ளது. கூட்டமைப்பினர் பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளும் நடவடிக்கையே, இதை கட்டுப்படுத்தும்.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562
விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561
கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com





## சிம்பாவே ஆட்சி மாற்றத்தின் பின்னால் சீனா?

சீனாவிற்கு சிம்பாப்வேயின் இராணுவ தளபதியொருவர் விஜயம் மேற்கொள்வதை உலகநாடுகள் ஒருபோதும் வழமைக்கு மாறான விடயமாக பார்க்கப் போவதில்லை.

ஜிம்பாப்வேயில் அதிகம் முதலீடு செய்துள்ள நாடு சீனா என்பதுடன் றொபேர்ட் முகாபே அரசாங்கத்தின் நெருங்கிய சகாவாகவும் சீனா காணப் படுகின்றது.

ஆனால் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்ட சிம்பாப்வேயின் இராணுவ தளபதி கொன்சன்டினோ சிவெங்கா அந்த நாட்டின் பல அதிகாரிகளை சந்தித்து விட்டு நாடு திரும்பிய பின்னரே சிம்பாவேயில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இதன் காரணமாக சிம்பாப்வே இராணுவதளபதியின் சீனா விஜயம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் முகாபேயை பதவி கவிழ்ப்பதற்காக சீனாவின் ஆதரவை இராணுவதளபதி கோரினார் என்ற ஊகங்களும் வெளியாகியுள்ளன.

சீனாவிற்கும் சிம்பாப்வேயிற்கும் இடையிலான உறவுகள் 1970களில் இருந்து நெருக்கமானவையாக காணப்படுகின்றன. சிம்பாப்வேயின் சுதந்திரப் போராட்டத்தின்போது முகாபேயின் கெரில்லாப்படையினருக்கு சீனா இரகசியமாக ஆயுதங்களை வழங்கியிருந்தது.

அதற்கு பின்னரும் சீனா அந்த நாட்டிற்கு பெருமளவு நிதியுதவியை வழங்கி வந்ததுடன் அரசியல் ஆதரவையும் வழங்கி வந்துள்ளது. மேலும் சீனா சிம்பாப்வேயின் பல அபிவிருத்தி திட்டங்களில் முதலீடு செய்துள்ளது. முகாபே அரசாங்கத்திற்கு சீனா தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வந்தது. சிம்பாப்வேயின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தக சகா சீனாதான். இதனால் சிம்பாப்வே அரசியல் நெருக்கடிக்குள் சிக்குட்படுவதை சீனா விரும்பாது.

ஆனால் சிம்பாப்வேயின் முகாபே பதவி கவிழ்க்கப்பட்ட விவகாரத்தில் சீனாவின் பங்களிப்பு என்ன, சீனாவிற்கு முன்கூட்டியே தகவல் வழங்கப்பட்டதா என்பதை அறிவதற்கான வழிவகைகள் எதுவும் இல்லை. இதற்கான வாய்ப்பை நிராகரிக்கவும் முடியாது. பதவி கவிழ்ப்பிற்கு முன்னர் இராணுவதளபதி சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை ஏதோ நடந்திருக்கின்றது என்பதை புலப்படுத்தியுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் முகாபே சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அவரை சந்தித்த சீனா ஜனாதிபதி, தனது நாடு பழைய நண்பர்களை ஒருபோதும் கைவிடாது என குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை சீனாவின் அரசாங்க ஆதரவு நாளேடான குளோபல் டைம்சில் எழுதியுள்ள ஆய்வாளர் ஒருவர், சிம்பாப்வேயில் சீனாவின் முதலீடுகளின் நீண்டகால பாதுகாப்பு குறித்து சீனாவில் கரிசனைகள் உருவாகியிருந்தன என தெரிவித்துள்ளார்.

முகாபேயின் கொள்கைகள் காரணமாக சீனாவின் முதலீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சில திட்டங்களை மூடவேண்டிய அல்லது வேறு நாடுகளிற்கு மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சீனா நிறுவனங்கள் பாரிய பாதிப்பை சந்தித்துள்ள என அவர் தெரிவித்துள்ளார். சிம்பாப்வேயில் ஆட்சி மாற்றம் சீனாவிற்கு சாதகமாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வல்லரசுகளின் உறவென்பது வர்த்தகத்தை மையமாக வைத்ததுதானே. இதையெல்லாம் கூட்டிக்கழித்து பார்த்தால்.. மேலே சொன்ன தலைப்பில் தவறிருப்பதாக தோன்றாதல்லவா!



"பொண்ணு எப்படி?"

"நல்ல பொண்ணுதான். ஆனா, அப்பப்போ ஓவியா மாதிரி பிஹேவ் பண்ணுவா!"



"மன்னா...எதிரி, போரை பிக்பாஸ் வீட்டில் வைத்துக்கொள்ளலாம் என்கிறான்."


"ஏன் அமைச்சரே...?"

"தாங்கள் ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாதே."



"தலைவரோட கணக்கு வழக்கை யார் பார்க்குறாங்க..."

"கணக்கை ஒருத்தர் தான் பார்க்கிறார்... வழக்கை ஏகப்பட்ட பேர் பார்க்குறாங்க."





## உலகம் சுற்றி பார்ப்போம் 7





# நீலக்கடலின் பச்சைக்கடற்கரைகள்

சாள்ஸ் ஜே போர்மன்

அதிகாலையிலேயே புறப்பட்டு துறைமுகத்துக்கு வந்து காலை வெயிலில் குளித்தபடி நடந்து நடப்பவைகளை கவனித்து ரசித்தோம். எட்டு மணியளவில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரயாணிகள் படகுகள் தமது கடைகளை விரிக்க ஆரம்பித்தன.

சிமி தீவுவரை போய் மாலையிலேயே திரும்பிவரும் படகுச்சேவையொன்றை நாம் தெரிந்தெடுத்தோம். வேகமாகப் பயணிக்கும் கத்தமரான், அழகிய உல்லாசப்படகுகள் முதல் சாதாரணமான தரப் படகுச்சேவைகள் வரை அங்கிருந்தன.

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்தது படகு, ஒன்றரை மணிநேரப் பயணம். மெதுவான காற்று இதமாக வீசப்பட காட்டம் சுகமாக இருந்தது. ஓரிரு நூற்றுச்சொச்சப் பேர்களைக் கொள்ளக் கூடிய இடவசதி பெரும்பாலும் நிறைந்திருந்தது.

நானுன் கதிரும் சாளரத்தையடுத்து அமரும் இடத்தைத் தேர்ந்தெடுத்திருந் தோம். மண்டிராக்கி துறைமுகத்திலிருந்து வெளியேறும்போது தவிர்க்க முடியாதவைகளில் புனித நிக்கொலாஸ் கோட்டையும் ஒன்று. ஏற்கனவே நான் குறிப்பிட்டிருந்த வெண்கல மான்களின் சிற்பங்களைத் தாண்டியவுடன் தெரியும் கலங்கரை விளக்கம் இருக்கும் கோட்டை அது. 1464 1467 காலத்தில் கட்டப்பட்டது அந்தக் கோட்டை. ஆரம்பத்தில் புனித நிக்கொலாஸ் ஆலயமாக இருந்தது பின்பு இராணுவப் பாதுகாப்பு அரணாகி இப்போது கலங்கரை விளக்கமாகியிருக்கிறது.

தூரத்தில் கோட்டையின் உச்சி மறையவும் எமது எதிர்ப்பக்கத்தில் குன்றாலான நிலப்பகுதியொன்று தெரிய ஆரம்பித்தது. ஆங்காங்கே மீன்பிடிக் கப்பல்களைக் கடந்தோம். மணல் கற்பாறைகளைத் தட்டுத்தட்டாக அடுக்கியிருந்தது போன்றிருந்த அப்பிரதேசம் துருக்கியின் எல்லை என்று நான் சொன்னதும் கதிர் ஆர்வத்துடன் கவனிக்க ஆரம்பித்தான். என்னிடமிருந்த கைப்பேசியில் கூகுள் நிலப்பரப்புப்படத்தைத் திறந்து அந்த இடம் எதுவென்று தேடிப்பார்த்தான் அவன்.

"நாங்கள் துருக்கிக்குப் போகும்போது மார்மாரிஸ் துறைமுகத்துக்குப் போவோம்," என்றான் கதிர். "எப்போ அங்கே போவோம்?" என்ற கேள்வியும் வந்தது.

"ஓரிரு நாள் கழித்துப் போகலாம்," என்றேன் நான். சுவீடனில் வாழும் எனக்குத் தெரிந்த துருக்கியர்கள் மூலம் அப்பகுதியில் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யும் வசதி எனக்கு இருந்தது.

விரைவில் எங்கள் கப்பல் ஒருதீவின் ஒரு அழகான குடாப்பகுதியை நெருங்குவது தெரிந்தது. நீலநிற ஆழ்கடலும் நிலப் பரப்பை அடுத்திருந்த பச்சை நிற நீர்ப்பரப்பும் சேர்ந்து ஒரு அழகிய சித்திரம் போன்றிருந்தது.

'பனொர்மிட்டிஸ் மடாலயத்திற்குப் போகாமல் சிமிதீவுப் பயணம் நிறைவு பெறுவதில்லை' என்கிறது இத்தீவைப்பற்றிய சுற்றுலாப் பயணிகள் கையேடொன்று. சிமி தீவின் தென்பாகத்தில் இருக்கும் கிராமம் பனொர்மிட்டிஸ். பெரும்பாலான கிரேக்க கிறீஸ்தவர்களின் ஆர்த்தடொக்ஸ் தேவாலயத்தைச் சேர்ந்தது அந்த மடாலயம்.

மூன்று ஆஸ்தான தேவதூதர்களில் முக்கியமானவர் என்று ஆபிரகாமிய மார்க்கங்களால் [யூத, கிறீஸ்தவ, இஸ்லாமிய] கருதப்படும் மிக்கேல் சிமி தீவுக்கும், அப்பகுதி கடல் தொழில் செய்படுபவர்களுக்கும் பாதுகாவலராக கருதப்படுகிறார். அதனால் இந்த மடாலயமும் அதன் வளாகத்துக்குள் இருக்கும் புனித மிக்கேல் தேவாலயமும் மிகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றன.

அக்குடாவின் குறுகிய வாய்வழியாக உள்ளே நுழைந்து ஒரு பக்கத்திலிருக்கும் அகன்ற துறைமுகத்தில் நின்றது படகு. அடுத்த பக்கத்தில் "என்னிடம் வா," என்று ஆசையுடன் அழைக்கும் ஒரு கடற்கரை. துறைமுகத்தில் ஏற்கனவே



சிறியதும் பெரியதுமாகச் சில பிரயாணிகள் கப்பல்கள் ஆயிரக்கணக்கானவர்களுடன் நிறுத்தப்பட்டிருந்தன. அப் பிரதேசத்தில் அத்தனை பேருக்கும் இடமிருக்குமா என்ற கேள்விதான் எனக்குள் எழுந்தது.

வாசலில் வானுயர்ந்த மணிக்கோபுரம் அதன் இரண்டு பக்கமும் நீண்ட தூரத்துக்கு வளர்ந்திருந்தன வெனிசிய கட்டிட அமைப்பிலான கட்டிடங்கள்.

கடற்கரைக்கு போகலாமென்று கதிரும், மனதும் ஈர்த்தாலும், என்னதான் இருக்கிறது அந்த மடாலயத்துக்குள் என்று போய்ப்பார்ப்போம் என்று சமாதானப்படுத்திக்கொண்டு மடாலயத் துக்குள் நுழைய முயன்றோம்.

நெருக்கியடித்துக் கொண்டுதான் அந்தக் குறுகிய வாசலுக்குள்ளாகப் போக வேண்டும். உள்ளே வளாகத்துக்குள் பலவிதமான மரஞ்செடி கொடிகளும் நிறைந்திருந்தன. அதற்குமேல் தொடர வேண்டுமானால் பிரத்தியேகப் பொறுமை வேண்டும்.

ஒரு காலத்தில் பனொமிட்டிஸ் சமய ஸ்தலமாக இருந்திருக்கலாம். தற்போது மிகப்பெரும் சமய விற்பனைச்சந்தை என்றுதான் சொல்ல வேண்டும். சமய சம்பந்தமான பொருட்களின் விற்பனை ஓஹோவென்று நடந்து கொண்டிருந்தது. மடாலயத்தின் மேலேயுள்ள கட்டடங்களிலெல்லாம் உல்லாசப் பிரயாணிகளுக்கான தங்குமிடங்களாக மாற்றி நிறைய சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்.

எங்கள் படகு துறைமுகத்தில் ஒரு மணித்தியாலம்தான் நிற்கும். மீதமிருக்கும் நேரத்தில் அழகான சுற்றுப் புறத்தை ரசிப்போம் என்று சொல்லிக் கொண்டு நாங்கள் வெளியே வந்து கடற்கரைப் பக்கமாக நடந்தோம்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# பொம்பிள புரோக்கர்கள்!

ஆரூரன்

நேரகாலம் இல்லாமல் யார்யாரோ வெல்லாம் போன் பண்ணி, "ஊரில யாராவது பொம்பிளையள் இருக்கினமோ" என கேட்கிறார்கள். போனகிழமை ஒருவன் நடுச்சாமத்தில் போன் பண்ணி பொம்பிளை கேட்டான். நான் இப்படி சொல்றதை பார்த்து, ஆள் பேமசான பொம்பிளை புரோக்கராக இருப்பானோ என ஒரு மாதிரி நீங்கள் நினைக்கிறது புரியுது. நான் போன் கதைக்கும்போது, பக்கத்தில் நிற்கும் நண்பர்களும் ஒரு மாதிரி முகத்தை சுளிக்கிறார்கள்தான். எனக்கு இப்படியொரு தொழில் பழக்கம் இருக்கிறதை தெரியாமல் பழகிவிட்டோமே என அவர்கள் நினைத்திருக்கலாம்.

ஆனால் அது மேற்றரில்லை. எனக்கு கொஞ்சம் பொலிற்றிக்கல் இன்ரஸ்ற் இருக்கிறது. நாலு கட்சிக்காரரை தெரியும். வரப்போகும் எலக்சனில் கட்டாயம் 25 வீதம் பெண்கள் வேட்பாளர் பட்டியலில் இருக்க வேண்டுமென்றது அவர்களிற்கு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. எங்கள் ஊர் சுற்றுவட்டாரத்தில் யாராவது பெண்கள் கிடைப்பார்களா... அதுவும் துணிந்து தேர்தலில் போட்டியிடுபவர்களாக கிடைப்பார்களா என தேடித்திரிகிறார்கள்.

சில தினங்களிற்கு முன்னர், எமது கட்சியில் இணைந்து உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் தொடர்புகொள்ளுங்கள் என பத்திரிகைகளிலும் ஒரு விளம்பரம் வந்திருந்தது. உண்மையை சொன்னால், வெட்கத்தை பார்க்காமல் ஒரு கட்சி விளம்பரம் போட்டுள்ளது. மற்றவர்களிற்கும் அதுதான் நிலைமை. ஆனால் பகிரங்கமாக விளம்பரம் போடாமல் இருக்கிறார்கள்.

பொதுவாகவே சிறுபான்மை கட்சிகள் எதிலும் கிராமமட்ட கட்டமைப்புக்கள் கிடையாது. தமிழரசுக்கட்சியிலும், முஸ்லிம் காங்கிரசிலும்தான் ஓரளவு சொல்லிக்கொள்ளும் விதமாக உள்ளது. ஆனாலும் அதுவும் வினைத்திறனான கட்டமைப்பல்ல. குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகத்தில் இருந்த உள்ளூராட்சி மன்றங்கள் பெரும்பாலானவை வினைத்திறனற்றவையாகவே இருந்தன. ஜெனீவா பிரச்சனை கதைப்பதுதான் தமது வேலையென பிரதேசசபை உறுப்பினரும் நினைப்பதால் இந்த பலவீனம் ஏற்பட்டது.

பாதுகாப்பான அரசவேலை, பென்சனிற்கு பின்னர் அரசியல் என்ற போர்முலா வைத்தான் நம்மவர்கள் வைத்திருக்கிறார்கள். உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றிற்கு போனால், காந்தித்தாத்தா மாதிரி ஒருவர் கதிரையில் இருப்பார். சந்திரமுகி படத்தில் ரஜினி ஒரு வார்த்தை சொல்வார் "எழுந்து நடக்கவே வக்கில்லையாம்ஞ் ஓம்பது பெண்டாட்டி கேக்குதாம்" என. இந்த உதாரணம் கொஞ்சம் ஓவர்தான். ஆனால் நம்மவர்களின் அலப்பறைகளை வர்ணிக்க இதைவிட வேறுவழியில்லை.


கட்சி செயற்பாட்டியங்கள் கிராம மட்டங்கள் வரை வலுவாக இல்லாததால், உள்ளூராட்சி தேர்தல் கட்சிகளிற்கு பெரிய சவாலாக இருக்கிறது. தேர்தலிற்கு ஆட்பிடிப்பது பெரிய காரியமாக இருந்தால், அந்த சபைகளை கைப்பற்றியும் இந்த கட்சிகளால் எதுவும் செய்ய முடியாது. கட்சி செயற்பாட்டியக்கத்தை கிராமமட்டத்திலிருந்து வளர்க்காத கட்சிகளால் உள்ளூராட்சி நிர்வாகத்தை சரியாக நடத்த முடியாது.


ஆண் வேட்பாளர்களையே சரியாக பிடிக்க முடியாத நிலையில், பெண்களை களமிறக்குவதென்பது பெரிய சிக்கலாகத்தான் இருக்கபோகிறது. பல கட்சிகள் எண்ணிக்கை கணக்கிற்காக மாமி, மச்சாள், மச்சாளின் சினேகிதி என்ற ரீதியில் வேட்பாளர்களை களமிறக்கப் போகிறது.

பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டது பெண்களின் உரிமைகளை வலுப்படுத்துவதற்குத்தான். மாறாக கட்சிகள் கேலிக்கூத்தாடுவதற்கு அல்ல. பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வது மட்டுமல்ல, பெண் அரசியலை ஆரோக்கியமானதாக மாற்றும் பொறுப்பும் கட்சிகளிற்கு உள்ளது. அதை கட்சிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பெண் அமைப்புக்களிற்கும் இதில் பொறுப்புள்ளது. தகுதியான பெண் வேட்பாளர்கள் களமிறக்கப்படுவதை உறுதிசெய்ய என்ன செய்யலாமென்பதை கண்டறிய வேண்டும். நடுசாமத்தில் போன் பண்ணி, "பொம்பிள இருக்குதோ?" என்ற வேட்பாளர் தேர்வுமுறையை இல்லாமல் செய்ய வேண்டிய பொறுப்புணர்வு எல்லோருக்கும் அவசியம். ●

---



கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த படகுகள் நிறுத்துமிடங்களில் பெரும் பணக்காரர்களின் ஆசைப்படகுகள் சில பச்சை நீரில் துளம்பிக் கொண்டிருந்தன.

உச்சியை நோக்கி வந்து கொண்டிருந்த சூரியனின் வெம்மைக்குள் அந்த அழகிய கடற்கரையின் முழங்காலளவு நீருக்குள் நிற்கும்போது இதமாக இருந்தது. கதிர் கடல்தண்ணீரை அள்ளி என் மீது அடித்தான். நானும் அவன் மீது திருப்பி நீரை அடித்தபடி எனது சிறு பிராய உற்சாகத்துடன் துரத்தினேன்.

எங்கள் கண் காணக்கூடிய தூரத்தில் நின்றது எங்கள் படகு. அதை கவனித்தபடியே வேறு பக்கங்களிலும் நடந்து நேரத்தைச் செலவழித்தபின் பயணத்தின் அடுத்த பகுதி தொடர்ந்தது.

சிமி நகர் வீதிகளில் அதிக நேரமாகவில்லை. சூரியக்கதிர்கள் பட்டு வெண்ணங்களோ ஒளிபாய் மாறிவிடும் அந்த சித்திரம் நாங்கள் நெருங்க நெருங்க மேலும் அழகாகிக் கொண்டு எங்கள் முன்னால் விரிந்தது என்று விபரிக்கும்போது நான் அவ்வழகின் இலட்சத்தின் ஒரு பகுதியைத்தான் சொல்கிறேன் என்பதைக் குறிப்பிட வேண்டும். அடுத்த வார தொடரில் சிமி நகருக்குள் நுழையமுன்பு சிமி தீவைப்பற்றிய ஒரு பண்டைக்கால கதையையும் சரித்திரப் பின்னணியையும் குறிப்பிடுகிறேன்.


ஏக்லி, ஹெஸ்பரே, எரிதீஸ் என்ற பெயருடைய அழகாக பாடக்கூடிய மூன்று தேவதைகள் அழகிய வனமொன்றில் வசித்து வந்தார்கள். இவர்களில் ஏக்லி என்பவள் கிரேக்க கடவுள்களில் ஒருவரான அப்போலோவின் மகள். தீ பிஸ் என்ற தேவனின் காதலி இவள். அராதின் என்ற இன்னொரு தேவதையிடம் ஆசைகொண்ட தீஸிஸ் ஏக்லியை ஒதுக்கி வைத்திருந்தான்.

சிமியின் முதலாவது அரசன் கிளோகஸ் ஏக்லியைச் சிறை பிடித்துக்கொண்டு வந்து தன் அரசியாக்கினான். அவளது இன்னொருபெயரான சிமியே அந்தத்தீவின் பெயரானது. சிமி ஏக்லி என்ற பெயராலும் பல இடங்களில் அழைக்கப்படுகிறது.


ஹோமரால் எழுதப்பட்ட இலியாட் காவியத்தில் சிமி தீவு குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிமி தீவினர் மூன்று கப்பல்களுடன் டிரோஜான் போரில் கிரேக்கர்களின் சார்பில் பங்குபற்றியதாக ஹோமர் எழுதியிருக்கிறார்.

சிமி தீவு 1522 இல் துருக்கர்களால் கைப்பற்றப்பட்டது. கடலோடிகளாகவும், கடலில் மூழ்கி கடற்பாசியெடுப்பவர்களாகவும், வியாபாரிகளாகவும் திகழ்ந்த சிமி வாழ் மக்கள் அச்சமயத்தில் துருக்கிய சுல்தானுக்கு விலையுயர்ந்த பரிசுகளை கொடுத்து மகிழவைத்தனர். விளைவாக அத்தீவினருக்கு மொழி, மதம் உட்பட பெரும்பாலான சுதந்திரங்களை சுல்தான் அனுமதித்தார். துருக்கியுடன் போர்புரிந்த கிரேக்கர்கள் பின்பு தங்களை விடுவித்துக் கொண்டனர்.

1832 இல் மீண்டும் துருக்கியரிடமும் 1912 இல் இத்தாலியரிடமும் கைமாறிய சிமி 1943 இலிருந்து 1945 வரை பல தடவைகள் ஆங்கிலேயருக்கும், ஜேர்மனியர்களுக்கும் இடையே கைமாறியது. 1947 இல் பிரிட்டர்கள் சிமி தீவை மீண்டும் கிரீஸிடம் கையளித்தனர். அதன் பின்பு 1948 இல் "டொடெகானிஸோஸ் தீவுகளை ஒன்றிணைத்தல் ஒப்பந்தம்" கைச்சாத்திடப்பட்ட பின் என்ற பெருமையை சிமி பெற்றது. தொடரும்...



# பிரபாகரனின் காதல் கதை!



ஹிருத்திக்போஸ் நிஹாலே

இந்த நவம்பர் 26ம் திகதி பிரபாகரனிற்கு 63வது பிறந்தநாள்.

பிரபாகரனின் பிறந்தநாளில் சம்பிரதாயமாக பேசுவதற்கென்று சில விடயங்கள் உள்ளன. அவற்றை தவிர்த்து, யாரும் அதிகம் பேசாத விடயமொன்றை குறிப்பிடப் போகிறோம். அது பிரபாகரனின் காதல் விடயம்!

பிரபாகரன் பற்றிய முழுமையான தகவல்களே நமது சமூகத்திற்கு தெரியாதபோது, பிரபாகரன்மதிவதனி தம்பதியின் காதல், வாழ்க்கை பற்றி அதிகமாக தெரியாமலிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைத்தான். பிரபாகரன் வாழ்க்கையில் அவ்வளவு பேசப்படாமல் போன அவரது காதல் வாழ்க்கை பற்றி சில சுவாரஸ்ய சம்பவங்களை குறிப்பிடுகிறேன்.

பிரபாகரனின் காதல் கதையை ஆரம்பிப்பதற்கு முன்னர், வேறொரு சம்பவத்தை குறிப்பிட வேண்டும். அதிலிருந்துதான் பிரபாகரனின் காதல் உருவாகியது.

1983 யூலை கலவரத்தையடுத்து தென்னிலங்கையிலிருந்த தமிழ் மக்கள் வடக்கு கிழக்கிற்கு இடம்பெயர்ந்து விட்டனர். கலவரம் கட்டுப்பாட்டிற்குள் வந்ததும் மிகச்சிறியளவானவர்கள்தான் திரும்பிச் சென்றனர். பெரும்பாலானவர்கள் வடக்கு, கிழக்கிலேயே தங்கிவிட்டனர். இதில் அரசாங்கம் அதிக நெருக்கடியை சந்தித்தது பல்கலைகழக மாணவர்களினால். தென்பகுதியில் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லையென பெருந்தொகை பல்கலைழக மாணவர்கள் வடக்கு கிழக்கில் தங்கியிருப்பது அரசாங்கத்திற்கு பெரிய நெருக்கடியை கொடுத்தது. கொழும்பு, பேராதனை, மொரட்டுவ பல்கலைகழக மாணவர்களே தென்பகுதிக்கு செல்லாமல் தங்கியிருந்தனர். தென்பகுதி பாதுகாப்பு அச்சுறுத்தலை குறிப்பிட்டு, தமக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைகழகங்களில் படிக்க மாற்றம் செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசு அதை ஏற்கவில்லை. ஏற்கனவே படித்துக் கொண்டிருந்த பல்கலைகழகங்களிற்கு திரும்பி வருவதற்கே காலக்கெடு விதித்தது.

அரசின் அறிவிப்பு மாணவர்களிற்கு கோபத்தை ஏற்படுத்தியது. அரசின் முடிவிற்கெதிராக பல்கலைகழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டங்களிற்கு இயக்கங்கள் ஆதரவாக இருந்தன. ஈழ மாணவர் பொதுமன்றம், விடுதலைப்புலிகள் நேரடி ஆதரவு தெரிவித்து, துண்டுப்பிரசுரங்களும் வெளியிட்டனர். என்றாலும் ஜே.ஆர் அரசு விடாப்பிடியாக நின்றது.

இயக்கங்களும் பின்னணியில் நிற்க, மாணவர்களும் எதிர்ப்பை தீவிரப்படுத்தினர். யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் இடம்பெயர்ந்த மாணவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த போராட்டத்தையும்ஜேஆர் கண்டுகொள்ளவில்லை.

09.01.1984 தொடக்கம் ஒன்பது மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். மாணவர்களின் போராட்டம் மக்கள் மத்தியில் ஆதரவுஅலையை உருவாக்க, பல்கலைகழகத்திற்கு முன்பாக பெருமளவு மக்கள் திரளத்தொடங்கினார்கள். யாழ்ப்பாணத்தில் பாடசாலை பகிஷ்கரிப்பு, கர்த்தால், கறுப்புக்கொடி என எதிர்ப்பு தீவிரமடைந்தது. அரசாங்கம் பதில் நடவடிக்கையாக, யாழ்ப்பாண பல்கலைகழகத்தை மூட உத்தரவிட்டது. ஒரு வாரமாக உண்ணாவிரதமிருந்த மாணவர்களை திரும்பியும் பார்க்கவில்லை.

1984 ஜனவரி 16ம் திகதி உண்ணாவிரதமிருந்தவர்களின் உடல்நிலை மோசமாகியது. மாலையில் மருத்துவர் உண்ணாவிரதிகளை பரிசோதித்தார். ஒரு மாணவியின் நிலை மிகவும் மோசமடைந்திருந்தது. அவர் ஆபத்தான கட்டத்திற்கு சென்று கொண்டிருக்கிறார் என மருத்துவர் எச்சரித்துவிட்டு சென்றார்.

மாணவர்கள் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார்கள் என்ற தகவல் விடுதலைப் புலிகளிற்கு சென்றது. மாணவர்கள் போராட்டத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் ஈழ மாணவர் பொதுமன்றமும் ஆதரித்தது அல்லவா. அவர்களின் செல்வாக்கு போராட்ட களத்தில் அதிகரித்திருந்தது. மாணவர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும் போராட்டத்தை கைவிடக்கூடாதென்பது ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிலைப்பாடு. மாணவர்களிற்கு ஏதும் ஆபத்து நிகழ்ந்தால், அரசியல்ரீதியாக அரசாங்கத்திற்கு நெருக்கடியை கொடுக்குமென அவர்கள் நினைத்தார்கள்.. போராட்டத்தை ஒழுங்கமைத்தவர்களில் பலர் ஈழ மாணவர் பொதுமன்றத்தை சேர்ந்தவர்கள். உண்ணாவிரதத்தை கைவிடுவதில்லையென அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

உண்ணாவிரதத்தை நிறுத்தலாம் என புலிகள் விரும்பினார்கள். அப்போது யாழ்ப்பாண தளபதியாக இருந்தவர் கிட்டு. பல்கலைகழகத்துடன் கிட்டு அவ்வளவாக தொடர்பு வைத்திருக்கவில்லை. ஆனால் திலீபனிற்கு நெருக்கமான தொடர்பிருந்தது. 16ம் திகதி மாலை திலீபனும் வேறு சிலரும் மாணவர் பிரதிநிதிகளுடன் பேசி போராட்டத்தை நிறுத்த முயன்றனர். ஈழ மாணவர் பொது மன்றத்தில் செல்வாக்கு மாணவர்கள் பிரதிநிதிகளிடம் அதிகமாக இருந்தது. திலீபனின் கோரிக்கையை அவர்கள் ஏற்க தயாராக இருக்கவில்லை.

புலிகள் தமது பாணியில் காரியத்தை முடித்தார்கள்!

உண்ணாவிரதமிருந்தவர்களை புலிகள் இரவோடிரவாக வாகனமொன்றில் ஏற்றி, உண்ணாவிரத மேடையிலிருந்து அகற்றினார்கள்.

புலிகள் உண்ணாவிரதிகளை கடத்தியதாக இன்றுவரை சிலர் குற்றம் சுமத்துகிறார்கள். போராட்டக்காரர்களை புலிகள் கடத்தினார்கள் என ஈ.பி.ஆர். எல்.எவ், புளொட் என்பன அப்பொழுதே பகிரங்கமாக குற்றம்சுமத்தி அறிக்கை விட்டனர். உண்மையில் அதை கடத்தல் சம்பவமாக சொல்ல முடியாது. ஏனெனில், உண்ணாவிரதமிருந்த ஒன்பது பேரில் யாருமே, புலிகள் எம்மை கடத்தினார்கள் என பகிரங்கமாக குற்றம்சுமத்தியது கிடையாது. உண்ணாவிரதம் இருந்ததில் மூன்று பெண்கள் பின்னர் புலிகள் அமைப்பிலும் இருந்தார்கள்!

கடத்தல் குற்றச்சாட்டு எழுந்ததும் புலிகள் அப்பொழுது ஒரு அறிக்கை விட்டனர். உண்ணாவிரதமிருந்தவர்களின் உயிரை காப்பாற்ற, அவர்களின் சம்மதத்துடன் அழைத்து சென்று மருத்துவ சிகிச்சை வழங்குகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

புலிகள் எம்மை கடத்தினார்கள் என புலிகளால் அழைத்து செல்லப் பட்டவர்களை கொண்டே சொல்ல வைக்க ஈ.பி.ஆர்.எல்.எவ் விரும்பியது. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை புலிகள் குழப்பினார்கள் என பிரசாரம் செய்யலாமென்பதும் அவர்களின் திட்டம். புலிகளால் அழைத்து செல்லப் பட்டவர்களை தொடர்புகொள்ள பல வழிகளிலும் முயன்றார்கள். இதையெல்லாம் எதிர்பார்த்த புலிகள், ஒன்பது பேரையும் “மிக கவனமாகவே“ வைத்து சிகிச்சையளித்தனர். ஒன்பது பேரின் பெற்றோரையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தொடர்புகொண்டு, பிள்ளைகளை உடனே உடனே ஒப்படையுங்கள் வேண்டுமென புலிகளிற்கு அழுத்தம் கொடுங்கள் என தூண்டிவிட்டனர்.

சிகிச்சையளிக்கப்படும் போது பிள்ளைகளை நீங்கள் பார்க்கலாம், சிகிச்சை முடியாமல் எப்படி அவர்களை வெளியில் அனுப்புவது என புலிகள் கேட்டனர். பெற்றோருக்கும் அது நியாயமாக பட்டது. ஆனால் இரண்டு, மூன்று பெற்றோரை ஈ.பி.ஆர்.எல்.எவ்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

வளைத்துப்போட்டு விட்டது. தம்மிடம் பிள்ளைகளை ஒப்படைக்காவிட்டால், உண்ணாவிரதமிருக்க போவதாக அச்சுறுத்தினார்கள்.

இந்த சிக்கலை சமாளிக்க, மாணவர்களை படகு மூலம் தமிழகத்திற்கு அழைத்து சென்றனர் புலிகள்.

ஒன்பது பேரில் நான்கு பேர் மாணவிகள். ஐவர் மாணவர்கள். சென்னை இந்திரா நகரில் இருந்த அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டில் பெண்கள் நால்வரையும் தங்கவைத்தனர். பத்திரமாக சென்னையிலுள்ள விடயத்தை வீடுகளிற்கும் அறிவித்தனர். இந்த சமயத்தில் பிரபாகரன் சென்னையில்தான் தங்கியிருந்தார்.

தினமும் அன்ரன் பாலசிங்கம் வீட்டிற்கு செல்வது பிரபாகரனின் வழக்கம். பிரபாகரன் பொதுவாகவே பெண்களுடன் அவ்வளவாக பேசிக்கொள்ளாதவர். நான்கு பெண்கள் அங்கு தங்கியிருந்தபோதும், அவர்களை கவனிக்காமல் போய்வந்தார். அன்ரன் பாலசிங்கத்தின் வீடு மாடிவீடு. மேல்தட்டிலேயே பெண்கள் நால்வரும் தங்கியிருந்தனர். பாலசிங்கம் குடும்பமும், அலுவலகமும் கீழ் தளத்தில்.

அந்த வீட்டிற்கு சென்ற அடுத்தடுத்த நாட்களிலேயே புலிகளுடன் நெருங்கிச்

**பாலசிங்கத்தின் வீட்டிற்கு பிரபாகரன் வரும்போது, சிலபல குறும்புத்தனங்களை மதிவதனி செய்துகொண்டிருப்பார். அது பிரபாகரனிற்கும் தெரியும். அவர் கவனிக்காததை போல சென்றுவிடுவார் பிரபாகரன் கவனிக்காமல் போவதை போல பாவனை காட்டுவது மதிவதனிக்கும் தெரியும்.**

செயற்பட தொடங்கிவிட்டனர் நான்கு மாணவிகளும். புலிகள் அமைப்பில் இணைவதில் கூட அவர்களிற்கு ஆட்சேபணையிருக்கவில்லை. ஆகவே கீழ்த்தளத்திற்கு வந்து அலுவலக வேலைகளிற்கு உதவினார்கள். பிரபாகரன் வந்து செல்லும்போது மட்டும் அவர்களிற்கு கொஞ்சம் பயமிருந்தது. இலங்கையிலேயே பிரபல்யமான இயக்கத்தின் தலைவரல்லவா!

பிரபாகரனை பார்த்த மாத்திரத்திலேயே மதிவதனிக்கு பிடித்துவிட்டது.

அந்த நால்வரில் மதிவதனி மிகவும் குறும்புக்காரி. துறுதுறுவென ஏதாவது குறும்புத்தனம் செய்தபடியேயிருப்பார். அதனால் ஆரம்பத்திலேயே அவரை அன்ரன் பாலசிங்கத்திற்கு பிடித்துப்போய் விட்டது. அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டிற்கு போய் இரண்டாம்நாள், மதிவதனிக்கு அவர் வைத்த பெயர் "குழப்படி"!

பாலசிங்கத்தின் வீட்டிற்கு பிரபாகரன் வரும்போது, சிலபல குறும்புத்தனங்களை மதிவதனி செய்துகொண்டிருப்பார். அது பிரபாகரனிற்கும் தெரியும். அவர் கவனிக்காததை போல சென்றுவிடுவார். பிரபாகரன் கவனிக்காமல் போவதை போல பாவனை காட்டுவது மதிவதனிக்கும் தெரியும்.

பிரபாகரன் வரும்போது அவர்கள் மரியாதையாக எழுந்து நிற்பது வழக்கம். பிரபாகரன் கவனிக்காததைபோல, தானும் கவனிக்கவில்லையென மதிவதனி குறும்புத்தனமாக உட்கார்ந்திருப்பார்.





இந்த குறும்புத்தனங்கள் நீடித்துக் கொண்டிருந்தபோது, கோலி பண்டிகை தினம் வந்தது. அன்று காலையிலேயே தெருவில் வண்ணவண்ண நிற சாயங்களை மற்றவர்கள் மீது பூசி கொண்டாடிக் கொண்டிருந்தனர். இலங்கையிலிருந்த சென்ற மாணவிகளுக்கு இது புதிதாகவும், வினோதமாகவும் இருந்தது.

பகல் முழுவதும் கோலி கொண்டாட்டத்தை கவனித்துக்கொண்டிருந்து விட்டு, மதியம் சாப்பிடும்போது அவர்களிற்குள் ஒரு சுவாரஸ்ய உரையாடல் ஏற்பட்டது. பிரபாகரனிற்கு மஞ்சள் தண்ணீரை ஊற்றுவோம் என திட்டமிட்டார்கள். ஆனால் யார் துணிந்து அதை செய்வது?

மதிவதனி உற்சாகமாக அந்த பொறுப்பை ஏற்றார். பிரபாகரனில் தனக்கு எந்த பயமும் இல்லையென கூறி, அந்த பொறுப்பை ஏற்றார்.

பொழுதுசாயும் சமயத்தில் பொன்னம்மானுடன் மோட்டார்சைக்கிளில் பிரபாகரன் வந்தார். பிரபாகரனை இறக்கிவிட்டு, விக்டர் திரும்பிச்சென்று விட்டார். தனியாக நடந்து வந்த பிரபாகரனிற்கு, வாசலோரம் ஒளிந்து நின்ற மதிவதனி மஞ்சள் தண்ணீரை ஊற்றினார். பிரபாகரன் இதை எதிர்பார்க்கவில்லை. அவருக்கு கடுமையான கோபமும் வந்துவிட்டது மதிவதனியை கடுமையாக கண்டித்துப்பேசி விட்டார். அமைப்பின் அலுவலகங்களில் தங்கியிருக்கும்போது, ஆண் பெண் உறவின் எல்லையை புரிந்து நடக்க வேண்டும், இது பொழுதுபோக்கிடம் அல்ல என கடுமையாக பேசிவிட்டு, அன்ரன் பாலசிங்கத்தின் அறைக்குள் போய்விட்டார். பாலசிங்கம் மாற்றுடையொன்றை பிரபாகரனிற்கு வழங்கினார்.

அன்று பாலசிங்கம் வீட்டில்தான் பிரபாகரனிற்கு இரவுணவும். எட்டு நாற்பத்தைந்தளவில் பிரபாகரனை ஏற்றிச்செல்ல மீண்டும் பொன்னம்மான் வந்தார். அன்ரன் பாலசிங்கத்தின் அறையை விட்டு வெளியில் வந்தபோதுதான் கவனித்தார், மதிவதனியை காணவில்லை. மற்ற மூன்று பெண்களும்தான் விறாந்தையில் இருந்தனர். மதிவதனி எங்கேயென கேட்க, அலுவலக அறையை கைகாட்டினார்கள். பிரபாகரன் எட்டிப்பார்த்தார். ஓரமாக உட்கார்ந்து அழுதபடியிருந்தார்.

பிரபாகரன் தனிமனித ஆசாபாசங்களிற்கு அவ்வளவு இடம்கொடாதவர். அதனால் வாசலில் நின்றபடியே, மதிவதனிக்கு சில ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். பக்கத்தில் பொன்னம்மான் நின்றுகொண்டிருந்தார்.

மறுநாள், பிரபாகரன் அங்கு செல்லவில்லை. வேறு அலுவலாக இருந்துவிட்டார். ஏதோ ஒரு அலுவலகாக விக்டர் அங்கு சென்றார். பிரபாகரனும் விக்டரும் மிக நெருக்கமானவர்கள். முதல்நாள் நடந்த சம்பவம் முக்கிய போராளிகளிற்கு தெரிந்திருந்தது. அவரும் அறிந்திருந்தார். மதிவதனியை பார்த்ததும், பகிடியாக "நேற்று நல்ல பேச்சுபோல" என நக்கடித்தார். இதற்கெல்லாம் பயப்படவில்லை, மீண்டும் தண்ணீர் ஊற்றுவோம் என சொல்லிவிடுங்கள் என மதிவதனி சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.


இதுதான் பிரபாகரன் மதிவதனி தம்பதியின் காதலின் ஆரம்ப தருணங்கள்.

ஆனால் பிரபாகரன் ஒரு விடயத்தில் கவனமாக இருந்தார். இயக்க அலுவலகத்தில் காதல் பேச்சு இருக்க கூடாது. அது இயக்க வேலையை குழப்பும் என நினைத்தார். மதிவதனியுடனான காதல் பேச்சையும் அவர் இயக்க அலுவலகத்திற்குள் வைத்திருக்கவில்லை. அன்ரன் பாலசிங்கத்தன் இந்திரா நகர் வீட்டில் மதிவதனியுடன் பிரபாகரன் தனிமையில் பேசியிருக்கவில்லை. பிரபாகரனின் கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும் இது காண்பிக்கிறது.

பிரபாகரனும், மதிவதனியும் முதன் முதலில் மனம்விட்டு பேசியது சென்னை மெரீனா கடற்கரையில். இந்திரா நகர் வீட்டிலிருந்து கடற்கரைக்கு மதிவதனியை அழைத்து சென்றவர், நீண்டகாலத்தின் முன்னரே புலிகளை விட்டு பிரிந்து தற்போது ஐரோப்பாவில் வசிக்கிறார். திருமணம் செய்வதென முடிவெடுத்ததும், பாலசிங்கத்திடம்தான் முதன்முதலில் பிரபாகரன் முதலில் விடயத்தை சொன்னார். புலிகள் அமைப்பில் யாரும் திருமணம் செய்யக் கூடாதென்ற கடுமையான விதிமுறையிருந்த சமயம் அது. பிரபாகனின் முடிவிற்கு ஆதரவாக இருந்தவர்களில் அன்ரன் பாலசிங்கம் முதன்மையானவர். திருமணம் செய்யலாமென எடுத்த முடிவு அறிவுபூர்வமானதென்பதை பின்னர் புலிகள் நடைமுறையில் உணர்ந்தனர்.

திருமணம் செய்யகூடாதென அமைப்பு விதிமுறை இருந்ததை பற்றி தானும் அவ்வளவாக சிந்தித்திருக்கவில்லையென்பதை பின்னாளில் பாலசிங்கம் போராளிகளுடனான கலந்துரையாடல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். அமைப்பின் சிந்தனை பரிமாண மாற்றத்தை ஏற்படுத்தியதில் பிரபாகரனின் காதல் முக்கியமானது. அந்த சமயத்தில் மதிவதனிதான் பிரபாகரனின் காதலியென்பதே தன்னை அதற்கு ஆதரிக்கவைத்தது என்றும் குறிப்பிட்டிருந்தார். மதிவதனியின் இயல்பு பாலசிங்கத்திற்கு நன்றாக பிடித்திருந்தது என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன்.

பிரபாகரன் மதிவதனி காதல்கதை ஊடகங்களில் அதிகமாக வெளியானதில்லை. ஆனால், தமது காதல்கதையை மதிவதனி சிலமுறை போராளிகள் மத்தியில் சிரிப்புடன் பகிர்ந்துள்ளார்.



## சினி கிசுகிசு

- கன்னக்குழி நடிகை நடிக்க வந்த வேகத்தில் பல பட வாய்ப்புகளை பெற்றார். அதே வேகத்தில் அவருடைய பெயர் இசையமைப்பாளர் ஒருவருடன் சேர்ந்து அடிபட தொடங்கியது. இதனால், நடிகையை ஒப்பந்தம் செய்ய இயக்குனர்கள் தயங்குகிறார்களாம். ஒப்பந்தம் செய்த பிறகு நடிகை திருமணம் செய்து கொண்டு சென்றுவிட்டால் படம் பாதிக்குமே என்பது இயக்குனர்களின் பயம். இதனால் நடிகைக்கு வாய்ப்புகள் வருவது குறைந்துள்ளது. வாய்ப்பு வராததன் காரணத்தை அறிந்த நடிகை அந்த இசையமைப்பாளருடன் நெருக்கத்தை குறைக்க ஆரம்பித்துள்ளார்.
- தெலுங்கில் செம ஹிட்டான ரெட்டி படத்தில் நடித்த அந்த நடிக, இப்போது இசை ஹீரோவுக்கு ஜோடியாக தமிழில் நடித்து வருகிறாராம். இதையடுத்து அவர் நடிக்க உள்ள புதுப்படங்களுக்கு, 25 லட்சம் சம்பளம் கேட்டு நடுங்க வைக்கிறாராம். ஒரு படம் கூட தமிழில் ரிலீசாகாத நிலையில், இவ்வளவு சம்பளம் கேட்பது ஏன் என்று, தயாரிப்பாளர்கள் வாய்விட்டுப் புலம்புகிறார்களாம்.
- உலக அழகிப் பட்டம் வென்ற பிரியமான நடிகை, பாலிவுட்டில் முன்னணி நடிகையாக தற்போது வலம் வருகிறாராம். ஹாலிவுட்டிலும் நடித்துக் கொண்டிருக்கிறாராம். நடிக்க வந்த புதிதில் பிரபல இயக்குனரின் படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததாம். அந்த படத்தில் அரைகுறை ஆடை அணிய வேண்டும் என்றார்களாம். உலக அழகிப் பட்டம் வென்றவரை அழகாக காட்ட வேண்டாமா என்று அந்த இயக்குனர் கேட்டாராம். இதற்கு நடிகை நோ சொல்லியிருக்கிறாராம். பின்னர், இயக்குனரின் படத்தில் இருந்து நடிகை வெளியேறினாராம். இதனால் அந்த இயக்குனர் கோபம் அடைந்தாராம். இதனால், நடிகைக்கு 10 பட வாய்ப்புகள் பறிபோனதாம்.
- தொடர்ந்து நல்ல படங்களில் நடித்தும், தன்னை ஏன் இன்னும் முன்னணி அந்தஸ்துள்ள நடிகையாக கோலிவுட் கொண்டாடவில்லை என்று, எதிர்ப்படுவோரிடம் எல்லாம் கேட்டு ஆதங்கப்படுகிறாராம் ஆண்ட்ரிய நடிகை. 'படங்களுக்கான புரமோஷனுக்கும் வருகிறேன், படத்தைப் பற்றியும் நிறைய பேசுகிறேன், வெற்றிப் படங்களிலும் நடித்திருக்கிறேன். என்றாலும், எனக்கு ஏன் அதிக வாய்ப்புகள் வருவதில்லை' என்று புலம்புகிறாராம். இதைக் கேட்ட சில இயக்குனர்கள், பிடிவாதம், அளப்பறையை கைவிட்டால்தானே பலன் கிடைக்கும் என முணுமுணுக்கிறார்களாம்.

### சூட்டிங் ஸ்பொட்



என் ஆளோட செருப்பை காணோம்

தானா சேர்ந்த கூட்டம்



## சின்னத்திரை



### ராஜாராணி வில்லிக்கு கல்யாணம்

பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சியின் மூலம் சின்னத்திரைக்கு வந்தவர் ஷப்னம். பிறகு தொகுப்பாளினி ஆனார். அப்படியே புரமோஷன் ஆகி வசந்தம் தொடரின் மூலம் நடிகையாகினார். அடுத்து தெய்வமகள் தொடரில் சபீதா ஆனந்தின் மருமகளாக நடித்தார். தற்போது விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் ராஜாராணி தொடரில் வில்லியாக நடிக்கிறார். ஷப்னத்திற்கு நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. அடுத்த பெப்ரவரியில் திருமணம் நடக்கவுள்ளது.



### தீபிகாவிற்கு ஆதரவு

பாலிவுட் இயக்குனர் சஞ்சய் லீலா பஞ்சாலி இயக்கும் புதிய படமான பத்மாவதிக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். தீபிகா படுகோன், ரண்விர் சிங், ஷாகித் கபூர் இதில் நடிக்கிறார்கள். இந்த படத்தை தடுக்க வேண்டுமென சிலர் கொலைவெறி பிரசாரம் செய்து வருவதையடுத்து கலைஞர்கள் பலரும் படத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகிறார்கள். பிரபல தொகுப்பாளினி ரம்யாவும் தனது ஆதரவை வெளியிட்டுள்ளார். படத்தில் தீபிகா படுகோன் உடுத்திய ஆடையைப்போல தானும் உடையணிந்து, அந்தப்படத்தை சமூக ஊடகங்களில் வெளியிட்டு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.



### தேன் கிண்ணம் தொகுப்பாளினியின் கதை

ஜெயா டிவியின் தேன் கிண்ணம் நிகழ்ச்சி பார்ப்பவர்களிற்கு தொகுப்பாளினி ஸ்ரீதேவியின் முகம் சட்டென நினைவுக்கு வரும். தாயுடன் வேறு அலுவலகாக ஜெயா டிவிக்கு பொனபோது, அப்போது அங்கு வேலைசெய்த நீயா நானா கோபிநாத், இவரை பார்த்துவிட்டு, சிறிய ஸ்கிரிப்டை படிக்கும்படி சொன்னார். அன்றிரவே தாயாரிற்கு போன் பண்ணி, மகள் தொகுப்பாளினியாக வேலை செய்யப்போகிறார் என்று சொன்னாராம். இப்படித்தான் ஜெயா டிவிக்குள் நுழைந்தார். இவரது தொகுப்பு பிடித்துப்போன ஜெயலலிதா, தனது பிறந்தநாள் தேன் கிண்ணத்தை ஸ்ரீதேவிதான் தொகுத்து வழங்க வேண்டுமென கூறினார். விசேட நாட்களில் ஒளிபரப்பாக வேண்டிய பாடல் லிஸ்டையும் ஜெயலலிதாவே அனுப்பிவைப்பாராம். சினிமா வாய்ப்புக்கள் வந்தாலும், அதில் தனக்கு ஆர்வமில்லையென்றுள்ளார்.



### மீண்டும் வறுத்தெடுக்கப்படும் ஜூலி

ஜூலி என்றாலே எல்லோரும் கலாய்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். பிக்பாஸில் அதிக வெறுப்பை சம்பாதித்தவர் இவராகத்தான் இருக்கும். இப்போது ஓடி விளையாடு பாப்பா என்ற சிறுவர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். இவர் தொகுப்பாளினியானதற்கே நெட்டிசன்கள் பயங்கர கலாய் கலாய்த்தனர். அண்மைய நிகழ்ச்சியொன்றில் கலா மாஸ்ரருடன் சேர்ந்து மேடையில் நடனம் ஆடினார். ரசிகர்கள் விசிலடித்து நக்கல் செய்ய ஆடுவதை நிறுத்தி விட்டார். ஆனாலும் இந்த வீடியோவை டிவி நிறுவனம் வெளியிட்டுள்ளது. மீண்டும் ஆளாளுக்கு ஜூலியை வறுத்தெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

# வண்ணத் திரை



## வேதிகாவும் எல்லை கடக்கிறார்!

முனி, காளி, சக்கரகட்டி, பரதேசி, காவியத்தலைவன் முதலிய படங்களில் நடித்தவர் வேதிகா. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி படங்களில் நடித்து வருகிறார். சில படங்களில் அழுத்தமான வேடங்களில் நடித்திருந்தாலும், இன்னும் பெரிய இடத்தை பிடிக்கவில்லை. இப்படியிருந்தால் வேலைக்கு ஆகாதென நினைத்த வேதிகா, இப்பொழுது கமர்சியல் ஏரியாவிற்குள் நுழைய முடிவெடுத்துள்ளார். கமர்சியல் ஏரியாவிற்குள் நுழைந்து கவர்ச்சியில் பிளந்துகட்ட தயாராகிவிட்டார். கவர்ச்சி போட்டோசூட் நடத்தி அதை பல இயக்குனர்களிற்கு அனுப்பி வைத்துள்ளார். அதற்கு பலன்கிடைக்குமா என காத்திருக்கிறார்.

## மேல்நாட்டு மருமகன் பிரான்சிற்கும் போகிறார்

ராஜ்கமல் கதாநாயகனாக நடிக்கும் மேல்நாட்டு மருமகன் என்ற படத்தை உதயா கிரியேசன் தயாரிக்கிறது. பிரான்சை சேர்ந்த ஆண்ட்ரீயன் நாயகியாக அறிமுகமாகிறார். இந்தியாவிற்கு சுற்றுலா வரும் ஆண்ட்ரீயனிற்கும், சுற்றுலா வழிகாட்டியாக உள்ள ராஜ்கமலிற்கும் இடையில் ஏற்படும் காதலும், அதனால் ஏற்படும் மோதல்களும்தான் கதை. பிரான்சில் படத்தை வெளியிட வேண்டுமென ஆண்ட்ரீயா விரும்பியதால், அங்கு 30 தியேட்டர்களில் வெளியிடவுள்ளனர். டிசம்பர் இறுதியில் படம் வெளியாகிறதாம்.

## சின்ன ஹன்சிகாவிற்கு வாய்ப்பு

பெரும்பாலான ஹீரோயின்கள் தங்களிற்கு முக்கியத்துவமுள்ள வேடங்களில் மட்டுமே நடிப்போம் என அறிவித்து வருவதால், கவர்ச்சி ஹீரோயின் வேடங்களில் நடிப்பதற்கு கோலிவுட்டில் கடும் பஞ்சம் நிலவுகிறது. அதிலும் அறம் படத்தில் நயன்தாராவின் நடிப்பை பார்த்த பின்னர், அந்த வழியில் செல்லவே முன்னணி நாயகிகள் விரும்புகிறார்கள். இந்த இடைவெளியை பயன்படுத்தி அதிக படவாய்ப்புக்களை கைப்பற்றும் முயற்சியில் இறங்கியுள்ளார், நெஞ்சில் துணிவிருந்தால் ஹீரோயின் மெஹரின். பஞ்சாபை சேர்ந்த இவர், மொடலிங் செய்துவிட்டு சினிமாவிற்கு வந்தவர். தெலுங்கு பட உலகம்தான் மெஹரினை முதலில் வளைத்தது. பின்னர் இந்திப்படங்களில் நடித்தார். இப்போது தமிழ் சினிமாவில் கண்வைத்துள்ளார். பார்ப்பதற்கு ஜூனியர் ஹன்சிகாவை போலிருப்பதால், பிரகாசமான எதிர்காலம் இருக்கிறதென ஆரூடம் கூறுகிறார்கள் திரையுலகினர்.

## நயன்தாரா இயக்குனரை சமாளித்த விஜய் இயக்குனர்

விஜய் நடித்த கத்தி, கார்த்தியின் மெட்ராஸ் படங்கள் திரைக்கு வந்தபோது மீஞ்சூர் கோபி என்பவர் வழக்கு தொடுத்தார். தற்போது நயன்தாரா நடித்துள்ள அறம் வெளியாகியுள்ளது. இதை இயக்கியவர் கோபி நயினார். அதாவது மீஞ்சூர் கோபிதான் இந்த பெயரில் அறத்தை இயக்கினார். அதுவரை கோபியின் குற்றச்சாட்டை கண்டுகொள்ளாமல் இருந்த திரையுலகம், அவர் வெற்றிபட இயக்குனரானதும், அவரை சமரசம் செய்ய முயற்சிக்கிறது. ரஜினி உள்ளிட்ட நடிகர்கள் அறத்தை பாராட்டியுள்ளனர். ரஜினியின் காலா படத்தை இயக்குபவர், மெட்ராசை இயக்கிய பா.ரஞ்சித். அவரும் படத்தை பாராட்டியுள்ளார். ஆனால் அதில் தவறியும் கோபியின் பெயர் வராமல் பார்த்துக் கொண்டார். இதை சமூக வலைத்தளங்களில் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள். சர்ச்சைகள் அதிகமாகிக்கொண்டு சென்றதையடுத்து, கோபியுடன் சமரசமாக செல்ல ரஞ்சித் தரப்பு முயல்கிறது. கருப்பர் நகரம் என்ற தனது கதையைத்தான் ரஞ்சித் மெட்ராசாக எடுத்தார் என கோபி குற்றம்சாட்டி வந்தார். இதற்காக ஒருதொகை பணத்தை ரஞ்சித் தரப்பு தற்போது கொடுத்துள்ளது.

## பிரபுதேவாவிற்கு திருப்பதியில் கல்யாணம்

2002 இல் வெளியானது சார்லிசப்ளின். பிரபுதேவா ஹீரோ. இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், பேஜ்புரி, ஒரியா, மராத்தி மொழிகளிலும் ரீமேக் ஆனது. இதன் இரண்டாம் பாகம் தயாராகிறது. பிரபுதேவா, நிக்கி கல்ராணி நடிக்கிறார்கள். பிரபுதேவாவிற்கும், நிக்கி கல்ராணிக்கும் திருப்பதியில் திருமண பேச்சு நடக்கவிருக்கிறது. இதற்காக இரண்டு குடும்பமும் திருப்பதி போகும்போதும், அங்கு போனபின்னரும் நடக்கும் சம்பவங்களின் கலகலப்பான தொகுப்பே படம். இந்த வருடம் நடிப்புமேதை சார்லிசப்ளினின் 125வது பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இந்த சமயத்தில் படத்தை தயாரிப்பது அவருக்கு செலுத்தும் மரியாதையென்றார் தயாரிப்பாளர் டி.சிவா.

## கவர்ச்சியில் கலங்காத டாப்ஸி

டாப்ஸி இப்போது இந்திக்கரையில் கரையொதுங்கி விட்டார். அதற்கேற்ப கவர்ச்சியில் தாராள மனது காட்டி வருகிறார். அண்மையில் மிகவும் கவர்ச்சியான ஆடையுடன் ஒரு புகைப்படத்தை தனது சமூகவலைத்தளத்தில் பதிவேற்றியிருந்தார். இதை பார்த்த ஒருவர், "பெண்கள் இப்படி ஆடை அணிவதால்தான், தவறாக நடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஆண்களிற்கு வருகிறது" என கொமண்ட் பண்ணியிருந்தார். அதற்கு டாப்ஸி சுடச்சுட பதிலளித்திருந்தார். "அப்படியென்றால் முதலில் அவர்கள் குரூர எண்ணத்தைத்தான் மாற்ற வேண்டுமே தவிர, ஆடையை அல்ல" என பதிலளித்துள்ளார்.

## அஜித்திற்கு ஒரு ஆறுதல்

அஜித்திற்கு இது போதாத காலம். மற்ற முன்னணி நாயகர்கள் கதையில் கவனம் செலுத்தி, வெற்றிப்படங்களை கொடுத்து வருகிறார்கள். அஜித்திற்கு அவரது இமேஜை கடந்து படத்திற்காக ஓடவில்லை. கடந்த சில படங்கள் எல்லாமே இதேநிலைதான். இந்த நிலையில் சிறுத்தை சிவாவுடன் மீண்டும் அஜித் கைகோர்த்திருப்பதால், ரசிகர்கள் ஆடிப்போயுள்ளனர். இப்போது அஜித்திற்கு ஒரு சிறு ஆறுதல். அவரது ஆரம்பம் படத்தை டப் செய்து தீரா என்ற பெயரில் கன்னடத்தில் ரிலீஸ் செய்தனர். யாருமே எதிர்பாராத விதமாக படத்திற்கு நல்ல வரவேற்பு. விவேகம் படம் கர்நாடகாவில் 9 கோடி வரை வசூல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜோடி சேரும் பிக்பாஸ் பிரபலங்கள்

பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர்கள் ஹரீஷ் கல்யாண், ரைசா. பிக்பாஸிற்கு மன்னதாகவே பொறியாளன், சிந்து சமவெளி, வில் அம்பு படங்களில் ஹரீஷ் நடித்தார். வேலையில்லா பட்டதாரி 2இல் கஜோலின் உதவியாளராக நடித்திருந்தவர் ரைசா. பிக்பாஸ் மூலமாகத்தான் இருவரும் கவனம் பெற்றனர். பிக்பாஸின் பின்னர் இருவரும் ஜோடி சேரவுள்ளதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. இப்பொழுதுதான் அது உறுதியாகியுள்ளது. புதுமுக இயக்குனர் இளனின் இயக்கத்தில் பியார் பிரேமா காதல் என்ற படத்தில் இருவரும் இணைகிறார்கள். யுவன்சங்கர் ராஜா தயாரிக்கிறார்.

## ரகுலிற்கு நயன்தாரா ஆசையில்லையாம்

ஸ்பைடர் தோல்வியடைந்ததால், தீரன் அதிகாரம் ஒன்றைத்தான் தமிழில் அதிகம் எதிர்பார்த்திருந்தார் ரகுல் பரீத் சிங். படம் அவரை ஏமாற்றவில்லை. தீரன் அதிகாரம் ஒன்றின் வெற்றியையடுத்து புதிய படங்கள் பல அவரைத்தேடி வரத் தொடங்கியுள்ளன. முன்னணி நாயகர்களின் படங்களை மட்டுமே அவர் டார்கெட் செய்கிறார். இந்த நிலையில், நயன்தாராவை போல அழுத்தமான வேடங்களில் நடிக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன். ஆனால் நயன்தாரா சாதித்தஅளவிற்கு நான் சாதிக்கவில்லை. அடுத்த நயன்தாராவாக வேண்டுமென யோசிக்கவுமில்லையென எச்சரிக்கையாக பேசியுள்ளார்.

## பாலகிருஸ்ணா குடும்பத்திற்கே விருது

ஆந்திர அரசு வழங்கும் திரைப்பட விருதுகள் இம்முறை பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன. மூன்று ஆண்டுகளிற்கான விருதுகள் இறுதியாக அறிவிக்கப்பட்டன. இதில் கமல்ஹாசன், ரஜினிகாந்த் ஆகியோர் உயரிய என்.டி.ஆர் தேசிய விருதிற்காக தேர்வாகியுள்ளனர். நடிகர்கள் பாலகிருஷ்ணா, மகேஸ்பாபு, ஜூனியர் என்.டி.ஆர் ஆகியோருக்கு சிறந்த நடிகர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. சந்திரபாபு நாயுடுவின் உறவினரான பாலகிருஸ்ணா நடித்த லெஜண்ட் படத்திற்கு 9 விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்வுக்குழுவில் பாலகிருஸ்ணாவும் இருந்தார் என்பதே வேடிக்கை. விருது வழங்கலில் முறைகேடு என தெலுங்கு இயக்குனர்கள் பலர் குற்றம்சாட்டியுள்ளனர். சிரஞ்சீவி, பிரபாஸ் குடும்பத்தை சேர்ந்த யாருக்கும் விருது வழங்கப்பட்டு விடக்கூடாதென தேர்வாளர்கள் திட்டமிட்டு செயற்பட்டதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.




எம்.ஜி.ஆர் 100
நெடுந்தொடர் 83

“அரசாங்க நிதியில் இருந்து கொடுப்பதென்றால் நான் எழுதும் கடிதம் முறைப்படி ஒவ்வொரு துறையாகச் சென்று ஒப்புதல் பெற்று பணம் கிடைக்க மாதக்கணக்கில் ஆகும். அதைத் தவிர்க்கவே என் சொந்தப் பணத்தைக் கொடுத்தேன். நானே நன்கொடை வழங்குவதில் எனக்கு மகிழ்ச்சி!”

# வென்றாரும் வெல்வாரும் இல்லை!

**எம்.ஜி.ஆர்.** நல்ல காரியங்களுக்கு நன்கொடை வழங்குவதிலும் சரி; நாட்டுக்கும், மொழிக்கும் உழைத்தவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதிலும் சரி, முதல் ஆளாக நிற்பார். அப்படி உதவுவதில் அரசு நடைமுறைகளால் தாமதமோ, விதிமுறைகள் மீறலோ இல்லாமல் பார்த்துக் கொள்வார்!

வெள்ளையருக்கு சிம்மசொப்பன மாகத் திகழ்ந்த லோகமான்ய பாலகங்காதர திலகருக்கு புனேயில் வெண்கல சிலை வைக்க மகாராஷ்டிர அரசு முடிவு செய்தது. தேசியத் தலைவரான திலகரின் சிலை நிறுவ மற்ற மாநிலங்களின் பங்களிப் பும் இருக்க விரும்பி, எல்லா மாநிலங்களிடமும் மகாராஷ்டிர அரசு நிதி கோரியது.

திலகரின் பேரன் அந்த மாநிலத்தின் சட்ட மேலவைத் தலைவராக இருந்தார். சிலை அமைக்க நிதி கோருவதற்காக அவர் தமிழகம் வந்தார். அப்போது, தமிழக சட்ட மேலவைத் தலைவராக இருந்த ம.பொ.சி.க்கு முன்கூட்டியே கடிதம் எழுதிவிட்டு, குறிப்பிட்ட நாளில் வந்து அவரை சந்தித்தார். அன்று தமிழக சட்டப்பேரவை மற்றும் மேலவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.


மேலவைத் தலைவரான ம.பொ.சி யின் அறையில் அவரை சந்தித்த திலகரின் பேரன், முதல்வர் எம்.ஜி.ஆரை சந்திக்க விருப்பம் தெரிவித்தார். அதை அறிந்து, பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொண்டிருந்த முதல்வர் எம்.ஜி.ஆரும் ம.பொ.சி.யின் அறைக்கு வந்துவிட்டார். திலகருக்கு சிலை அமைக்கப்பட இருப்பதையும் தமது வருகைக்கான நோக்கத்தையும் அவரிடம் திலகரின் பேரன் தெரிவித்தார். உடனே, தனது செயலாளரை அழைத்த எம்.ஜி.ஆர், அவரது காதில் ஏதோ சொன்னார்.


செயலாளர் வெளியே சென்று முதல்வரின் அறையிலிருந்து காசோலை புத்தகத்தைக் கொண்டு வந்தார். காசோலையில் ரூ.50 ஆயிரம் தொகையை எழுதி கையெழுத்திட்டு “திலகர் சிலை அமைக்க இது என் நன்கொடை” என்று கூறி திலகரின் பேரனிடம் கொடுத்தார் எம்.ஜி.ஆர்! இவ்வளவு பெரிய தொகையை, அதுவும் முதல்வர் தனிப்பட்ட முறையில் தருவார் என்று எதிர் பார்க்காத திலகரின் பேரன், அவ்ருக்கு மகிழ்ச்சியுடன் நன்றி கூறினார். காசோலையைப் பெற்றுக் கொண்ட அவருக்கு மனதில் ஒரு சந்தேகம்.

“அரசிடம் இருந்துதான் பணத்தை எதிர்பார்த்தேன். நீங்கள் சொந்தப் பணத்தில் இருந்தே கொடுத்து விட்டீர்களே?” என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டார். ‘அரசு மூலம் கொடுக்காமல் நீங்களே கொடுத்தது ஏன்?’ என்ற அவரது சந்தேகம் அந்தக் கேள்வியில் தொக்கி நின்றது. அது எம்.ஜி.ஆருக்குப் புரியாமல் போய் விடுமா? “அரசாங்க நிதியில் இருந்து கொடுப்பதென்றால் நான் எழுதும் கடிதம் முறைப்படி ஒவ்வொரு துறையாகச் சென்று ஒப்புதல் பெற்று பணம் கிடைக்க மாதக்கணக்கில் ஆகும். அதைத் தவிர்க்கவே என் சொந்தப் பணத்தைக் கொடுத்தேன். மேலும், திலகரின் சிலை அமைய நானே நன்கொடை வழங்குவதில் எனக்கு மகிழ்ச்சி!” என்று புன்முறுவலுடன் எம்.ஜி.ஆர் சொல்ல, நடைமுறைக்கேற்ப முடிவெடுக்கும் அவரது திறனையும் தேசப்பற்றையும் கண்டு சிலிர்த்தார் திலகரின் பேரன்!

தமிழக அமைச்சராகவும் சட்டப் பேரவைத் தலைவராகவும் இருந்த க.ராசாராமுக்கு வேண்டிய தமிழ்ப் பேராசிரியர் க.திருநாவுக்கரசு. திருக்குறள் சம்பந்தமான ஆய்வு நூல்களை எழுதியவர். திருக்குறள் ஆராய்ச்சி தொடர்பாக படித்தும் எழுதியும் திருநாவுக்கரசுக்கு கண் பார்வையே மங்கி விட்டது. ஒருநாள் அவர் ராசாராமை சந்தித்து, “எனது மகள் மருத்துவக் கல்லூரியில் சேர விரும்புகிறாள். ஆனால், தேவையான மதிப்பெண்களைவிட, ஒன்றிரண்டு குறைவாக உள்ளது. என் மகளுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க முதல்வரிடம் கூறி ஏற்பாடு செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

இதை முதல்வர் எம்.ஜி.ஆரின் கவனத்துக்கு ராசாராம் கொண்டு சென்றார். திருநாவுக்கரசு எழுதிய நூல்களையும் முதல்வரிடம் அளித்தார். ராசாராம் கூறியதை அமைதியாகக் கேட்ட எம்.ஜி.ஆர், தமிழுக்குத் தொண்டு செய்தவரின் மகளுக்கு உதவ முடிவு செய்தார். அவர் மனதுக்குள் தீர்மானித்து விட்டாலும் உடனடியாக வெளியே சொல்லவில்லை. எம்.ஜி.ஆர் மவுனமாக இருக்கவே, “எப்படியாவது அந்த மாணவிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்” என்று வலியுறுத்தினார் ராசாராம்.







அதற்கு, “செய்துவிடலாம்” என்று எம்.ஜி.ஆரிடமிருந்து பதில் வந்தது. ‘என்ன இவ்வளவு சாதாரணமாக சொல்கிறாரே? நமக்காக ஒப்புக்கு சொல்கிறாரோ?’ என்ற எண்ணம் மேலிட, “என்ன செய்யப் போகிறீர்கள்?” என்று ராசாராம் வினவினார்.

“தமிழ்த் தொண்டு செய்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இந்த ஆண்டு முதல் இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற புதிய விதி முறையை உரு வாக்கி விட்டால் சரிதானே?” என்று புன்னகைத்த படியே கேட்டார் எம்.ஜி.ஆர்! அசந்துபோய் நின்றார் ராசாராம்.

எம்.ஜி.ஆர் நினைத்திருந்தால் அந்த மாணவிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்க சிபாரிசு செய்திருக்கலாம். முதல்வரே சொல்லும்போது மாணவிக்கு இடம் கிடைக்காமல் போய்விடுமா? ஆனால், தனது அதிகாரத்தை எம்.ஜி.ஆர் எப்போதுமே தவறாகப் பயன்படுத்தியதில்லை. மரபுகளையும் விதிகளையும் மீறாமல் அதே நேரம் அந்த மாணவிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவும் ஏற்பாடு செய்துவிட்டார். அந்த மாணவி மட்டுமின்றி, தமிழ்த் தொண்டு செய்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் எதிர்காலத்தில் பயனடையும்படியும் செய்து விட்டார். தமிழறிஞர் திருநாவுக்கரசு எம்.ஜி.ஆருக்கு நன்றி தெரிவித்து வாழ்த்தினார்.

எம்.ஜி.ஆரின் பெருமைகளையும் அவரது பண்புகளையும் பாராட்டி, இன்னொரு முக்கியமான தமிழறிஞரும் அவரை வாழ்த்தி, “குன்றனைய புகழ் கொண்ட குணக்குன்றே...” என்று தொடங்கி கவிதை எழுதியுள்ளார். அந்தக் கவிதையில்,

“வென்றாரும் வெல்வாரும் இல்லா வகையில்
**எந்நாளும் ஒளிவீசும் தண்மதியே!**
**தென்னாடும் தென்னவரும்**
**உள்ளவரை**
**மன்னா! உன் திருநாமம் துலங்க**
**வேண்டும்!**
**உன்னாலே உயர்வடைந்த என்**
**போன்றோர்**
**உள்ளங்கள் அதைக் கண்டு மகிழ**
**வேண்டும்!”**
**என்று அந்தத் தமிழறிஞர்**
**வாழ்த்தியுள்ளார். அவர்... கலைஞர்**
**மு.கருணாநிதி!**

தொடரும்...

## வேலைவாய்ப்பு

# வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, நகர குடியிருப்பு அதிகாரசபை

## உள்வாரி/ வெளிவாரி

**பணிப்பாளர் (பொறியியல்) HM 1-1 2016 வெற்றிடம் 01**

*தகைமை*

அ.பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றில் பொறியியல் விடயம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

*அல்லது*

ஆ.பட்டயம் பெற்ற பொறியியல் நிறுவனம் ஒன்றில் முழுமையான அங்கத்துவத்தை பெற்றிருத்தல்

அத்துடன்

இ. பட்டம் பெற்ற பின்னர் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றிலோ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிலோ முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 10 வருட அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

வயது 35 வருடத்திற்கு குறையாமலும் 55 வருடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பள கொடுப்பனவுகள்:** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இற்கு அமைவாகும்.

**கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) MM 1-1 2016 வெற்றிடம் 01**

*கல்வித்தகைமை*

அ.பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றிலிருந்து புள்ளிவிபரவியல்/சந்தைப்படுத்தல்/நிதி முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் இருந்து ஒரு பாடம் உள்ளடங்கியதாக பெற்றுக்கொண்ட பட்டம்.

*அத்துடன்*

ஆ. பட்டம் பெற்ற பின்னர் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திதுறையில் ஆகக்குறைந்தது 03 வருட சேவை அனுபவத்தை கொண்டிருத்தல் (அச்சேவை அனுபவமானது நகர அபிவிருத்தி அல்லது வீடமைப்பு துறையிலாயின் கூடுதல் கவனம் செலுத்தப்படும்)

உள்வாரி விண்ணப்பதாரிகள்

அ.நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கனிஷ்ட முகாமைத்துவ சேவைத்தொகுதியில் (யிவி 1i) I.ஆம் தரத்தில் உரியதுறையில் 05 வருட திருப்திகரமான சேவைககாலத்தை கொண்டிருத்தல். வயது 25 வருடங்களிற்கு குறையாத மற்றும் 45 வருடங்களிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பள கொடுப்பனவுகள்:** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016இற்கு அமைவாகும்.

**கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்

**உதவிப்பணிப்பாளர் (பொறியியல்) MM 1-1 2016 வெற்றிடம் 01**

*கல்வித்தகைமை*

அ.பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றிலிருந்து சிவில் பொறியியல் தொடர்பான பட்டம் அல்லது அதற்கு சமனான ஒரு தகுதி

**அல்லது**

ஆ.பட்டத்தை பெற்றதன் பின்னர் / தொழில்சார் நிறுவனம் ஒன்றில் அங்கத்துவத்தை பெற்றதன் பின்னர் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் பொறியியல்துறையில் ஆகக்குறைந்தது 03 வருட சேவை அனுபவத்தை கொண்டிருந்தல்.

**வயது**

25 வருடங்களிற்கு குறையாத மற்றும் 45 வருடங்களிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

இரட்டை வீத அடிப்படையிலாயினும் கவனத்தில் கொள்ள முடியும்.

**சம்பள கொடுப்பனவுகள்:** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016இற்கு அமைவாகும்.

**கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்

**உதவிப்பணிப்பாளர் (கட்டிடக்கலை) MM 1-1 2016 வெற்றிடம் 01**

*கல்வித்தகைமை*

அ.பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றிலிருந்து கட்டிடக்கலை தொடர்பான முதலாவது பட்டம்

*அல்லது*

ஆ.பட்டத்தை பெற்றதன் பின்னர் / தொழில்சார் நிறுவனம் ஒன்றில் அங்கத்துவத்தை பெற்றதன் பின்னர் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் கட்டிடக்கலைத்துறையில் ஆகக்குறைந்தது 03 வருட சேவை அனுபவத்தை கொண்டிருந்தல்.

**வயது**

25 வருடங்களிற்கு குறையாத மற்றும் 45 வருடங்களிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பள கொடுப்பனவுகள்:** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016இற்கு அமைவாகும்.

**கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்

**நிர்வாக உத்தியோகத்தர் JM 1-1 2016 வெற்றிடம் 01**

*கல்வித்தகைமை*

அ.பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றிலிருந்து எந்ததுறையிலாவது பெற்றுக்கொண்ட பட்டம் ஒன்று

*அல்லது*

ஆ. அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் ஆகக்குறைந்தது 01 வருட அனுபவத்தை பெற்றிருத்தல் (ஆங்கில மொழிப்பாவனை தொடர்பில் தேர்ச்சி பெற்றிருப்பது விசேடமானதாகும்)

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

அ.முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) சேவைத்தொகுதியில் 05 வருடத்திற்கு குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தை கொண்டிருத்தல்

**வயது**

25 வருடங்களிற்கு குறையாத மற்றும் 45 வருடங்களிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பள கொடுப்பனவுகள்:** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016இற்கு அமைவாகும்.

**கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்

**தொழில்நுட்ப உதவியாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) MA 2.1 2016 வெற்றிடம் 04**

*கல்வித்தகைமை*

அ.மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட 06 பாடங்களில் க.பொ.த சாதாரணதரத்தில் தேறியிருத்தல் அல்லது சமமான தொழில் தகைமையை கொண்டிருத்தல்

மற்றும்

தொழில்சார் திறமைகள்

ஆ. மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரகாரம் தேசிய தொழில்சார் திறமை/ மிகஷினி 05வது மட்டத்திற்கு குறையாத தரத்தில் இருக்கின்ற தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (பொறியியல்/அளவை மதிப்பீடு) அல்லது அதற்கு இணையான அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றிலிருந்து சிவில் பொறியியல் சான்றிதழ்/ அளவை மதிப்பீடு சான்றிதழ் பெற்றிருத்தல்

**வயது**

18 வருடங்களிற்கு குறையாத மற்றும் 35 வருடங்களிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கும் அரசசேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கும் உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

இரட்டைவீத அடிப்படையிலாயினும் கவனத்தில் கொள்ளப்படும்

**சம்பள கொடுப்பனவுகள்:** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016இற்கு அமைவாகும்.

**கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்

உள்வாரி விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.
அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுதாபனங்கள் மற்றும் நியாயாதிக்கசபைகளில் தற்போது சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்ப படிவங்களை, தமது நிறுவனங்களின் பிரதானிகள் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகள் முழுமையான சுயவிபர தரவுகள் உள்ளடங்கியதாக தமது கையெழுத்தினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தை கீழுள்ள முகவரிக்கு 2017.11.22ம் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் கிடைக்ககூடியதாக பதிவு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 09ம் மாடி, செத்சிறிபாய பத்தரமுல்லை
தொலைபேசி 0112887721 தொலைநகல் 0112887721
மின்னஞ்சல் dg.usda16@gmail.com

# அகதிகளால் என்ன லாபம்?

மருதன்

அகதிகளை ஏற்றுக்கொள்ள ஒரு நாடு தயங்குவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அவற்றில் பிரதானமானது பொருளாதாரம். சிறிய குழந்தைகளோடு கண்கள் முழுக்கக் கவலையுடன் மூட்டை முடிச்சுக்களுடன் வந்து நிற்கும் அகதிகளைப் பார்க்க உண்மையிலேயே பாவமாகத்தான் இருக்கும். சரி போகட்டும் என்று கதவைத் திறந்துவிடலாம்தான். ஆனால் அவர்களை வால் பிடித்தபடியே இன்னொரு கூட்டம் திரண்டுவரும். கதவை மேலும் திறந்தோம் என்று வையுங்கள் அலைஅலையாக அகதிகள் பொங்கிவர ஆரம்பித்து விடுவார்கள். கண்ணுக்கே தெரியாத சிறிய ஓட்டை என்று விட்டுவிட்டால் முழுக்கப்பலும் கவிழ்ந்துவிடும். பிறகு வருத்தப்பட்டு என்ன பலன்?

சில முகாம்களில் அளிக்கப்படும் வசதிகளைப் பார்க்கும் போது நிஜமாகவே அகதிகள் அந்நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் சுமையாகவே இருக்கிறார்கள் என்று தான் பலருக்குத் தோன்றும். சிரியாவிலிருந்தோ இராக்கிலிருந்தோ வந்துசேரும் அகதிகள் ஜெர்மனிக்கோ பிரிட்டனுக்கோ அமெரிக்காவுக்கோ சென்று குடியேறும் போது நிச்சயம் அவர்கள் இதுவரை வாழ்ந்த வாழ்வைவிட பல மடங்கு நல்ல ஆடம்பரமான வாழ்வைத்தான் வாழப்போகிறார்கள். ஆம் அகதிகள் தங்கள் தாய் நாட்டில் பலவற்றை இழந்திருக்கிறார்கள். உண்மை. ஆனால் புது நாடு அவர்களுக்குக் குறைவாகவா அள்ளித் தந்திருக்கிறது! சுத்தமான சாலைகளையும் பளபளப்பான கட்டடங்களையும் அதிநவீன நாகரீகமான வாழ்வையும் அவர்கள் தங்கள் வாழ்நாளில் கண்டிருப்பார்களா? சற்றே குரூரமாகத் தோன்றக்கூடும். என்றாலும் போரும் வன்முறையும் ஒரு வகையில் அகதிகளுக்கு நன்மையே அளித்திருக்கிறது என்றுகூடச் சொல்லலாம் இல்லையா?

அதானால்தான் டொனால்ட் ட்ரம்ப் அமரிக்காவின் கதவுகளை இறுக்கமாக மூடிக்கொள்ள விரும்புகிறார். அகதிகளை அனுமதிக்க முடியாதபடிக்குச் சட்டத்தை மாற்ற அவர் துடித்தார். அது முடியாது என்னும் நிலையில் இயன்றவரை அகதிகளின் நுழைவைக் குறைத்துகொண்டு வருகிறார்.

அகதிகளை அனுமதிப்பது உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலை அளிக்கும் என்பது ஒரு பக்கமிருக்க அவர்களால் அமெரிக்காவின் வளம், வேலை வாய்ப்புக்கள் அனைத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படும். தேசத்தின் பொருளாதாரத்தையே ஒரு கட்டத்தில் சீரழித்துவிடும் என்று வாதாடுகிறார் ட்ரம்ப். அகதிகளுக்காக செலவிடும் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இன்னொரு பக்கம் அமெரிக்கர்களுக்காக அளிக்கப்படும் நலத்திட்டங்களை இந்த அகதிகளும் சட்டப்படி அனுபவிப்பதால் பணவிரயம் அதிகரிக்கின்றது என்கிறார் ட்ரம்ப்.

ஆனால் இது உண்மையல்ல. அகதிகளுக்காக ஒரு நாடு செலவிடும் தொகையை மட்டும் எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அலருவது அநீதியானது என்கிறார்கள் இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள். 'நீ அகதிக்கு என்ன செய்திருக்கிறாய் என்று மட்டும் பார்க்காதே; அகதி உனக்கு என்ன செய்திருக்கிறார் என்றும் பார்' என்பதுதான் அவர்களுடைய தர்க்கம். அகதிகள் அமெரிக்காவில் வாழ்கிறர்கள் என்றால் அவர்கள் மற்ற அமெரிக்கர்களைப் போல் அரசுக்கு வரி செலுத்துகிறார்கள் என்று பொருள். அதிக அகதிகள் என்றால் அரசுக்கு அதிக வரி வருமானம் என்று பொருள்.

உதாரணத்துக்கு செப்ரெம்பர்2015ல் வெளிவந்த ஓர் அறிக்கையை எடுத்துக்கொள்வோம். அதன்படி பெரும்பாலான நாடுகளில் குடியேறியவர்கள் அதிக வருமானவரி செலுத்துபவர்களாக இருக்கிறார்கள். மேலும் அந்நாடுகளின் சமூக வளர்ச்சியில் அவர்களுடைய பங்களிப்பு கணிசமானதாக இருக்கிறது. இந்த அறிக்கையை வெளியிட்டிருப்பவர்கள் உலக வங்கி, சர்வதேசத் தொழிலாளர் ஆணையம், மற்றும் பணக்காரநாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் OECD என்னும் கூட்டமைப்பு. அகதிகளால் அமெரிக்காவுக்குச் செலவு அதிகமா அல்லது வருமானம் அதிகமா என்பதைக் கண்டறிய ப்ரெஞ்சு பல்கலைக்கழகமொன்றில் பணிபுரியும் வில்லியன் இவான்ஸ் என்னும் பொருளாதார ஆய்வாளர் தன் உதவியாளருடன் சேர்த்து ஓர் ஆய்வைச் சமீபத்தில் நடத்தி முடித்திருக்கிறார். அமெரிக்க அரசின் அதிகாரபூர்வக் கணக்கெடுப்பின் அடிப்படையில் அமெரிக்காவில் குடியேறிய அகதிகளின் விபரங்களை அவர் எடுத்துக்கொண்டார். அதில் 18 முதல் 45 வயது வரையிலான அகதிகளுக்காக அரசு தோராயமாக எவ்வளவு செலவழித்திருக்கிறது என்று கணக்கிட்டார். கடந்த இருபது ஆண்டுகளாக ஒரு அகதியை குடியமர்த்த அரசு மேற்கொண்டுள்ள செலவு சுமார் 15000 டொலர். அகதி ஒருவருக்கான சமூகநலத் திட்டங்களுக்கு 92000 டொலர். மொத்த செலவு 107000 டொலர். இலங்கை ரூபாய் மதிப்பில் ஓர் அகதிக்குசுமார் 150 லட்சம்ரூபாய் செலவு செய்கிறது அமெரிக்க அரசு. குடியமர்த்தப்பட்ட பிறகு இந்த அகதிகளால் அமெரிக்காவில் பணியாற்ற முடியும். அந்தவகையில் ஓர் அகதி மூலமாக எவ்வளவு வரிவருவாய் அரசுக்கு அதே இருபது ஆண்டுகளில் கிடைத்திருக்கிறது என்பதைக் கணக்கிட்டார். கிடைத்த தொகை 130000 டொலர். அதாவது செலவழித்ததுபோகக் கூடுதலாக இருபதாயிரம் டொலருக்கும் அதிகமான வருவாயை ஓர் அகதியிடமிருந்து அமெரிக்கா ஈட்டியிருக்கிறது.

மேலும் பல ஆச்சர்யமூட்டும் தகவல்கள் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளன. முதல் சில ஆண்டுகள் அகதிகளுக்கு வேலை கிடைப்பது கடினமாக இருந்திருக்கிறது. அப்படியே கிடைத்தாலும் குறைவான ஊதியமே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அதே அகதிகள் மிக நல்ல வருமானத்தை ஈட்ட ஆரம்பித்துள்ளனர். அதே வயதுள்ள அமெரிக்கர்களைக் காட்டிலும் திறமையாகவும் அதிகமாகவும் உழைத்து இந்த அகதிகள் சம்பாதித்துள்ளனர். அரசு வழங்கும் நலத்திட்டங்களால் பயனடைவதையும் அவர்கள் ஒரு கட்டத்துக்கு மேல் நிறுத்திக் கொண்டுவிட்டனர். ஆனால் அதே வயது கொண்ட அமெரிக்கர்களோ இன்னமும் நலத்திட்டங்களுக்கு அரசின் கையை எதிர்பார்த்தது காத்துக்கிடந்தனர். இதில் கவனிக்க வேண்டிய விடயம் ஓர் அகதிக்கும் ஓர் அமெரிக்கருக்கும் சராசரி வருமானம் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஓரே வேலையை செய்தாலும் ஓர் அகதி அமெரிக்கரைக் காட்டிலும் குறைவான வருமானமே பெறுகின்றார்.




ஆனால் ட்ரம்ப் இத்தகைய ஆய்வுகளை மட்டுமல்ல, கள யதார்த்தங்களையும் கூட ஏற்பவர் அல்லர். அதனால் தான் அவர் பதவி ஏற்ற நாள் தொடங்கி அமெரிக்கா அனுமதிக்கும் அகதிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. மிக சமீபத்திய கணக்கின் படி அக்டோபர் 2016 வாக்கில் 9945 அகதிகளை அமெரிக்கா அனுமதித்தது. ஏப்ரல் 2017ல் இது 3316 ஆகக் குறைந்து விட்டது. டெக்சாஸ், கலிபோர்னியா, அரிசோனா என்று ஒவ்வொரு பகுதியும் அகதிகளை அனுமதிப்பதைக் குறைத்துக் கொண்டு வருகிறது. அகதிகளை அனுமதிப்பது குறித்த சட்டம் 1980ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட போது அமெரிக்கா இரண்டு லட்சம் அகதிகளை வரவேற்று ஏற்றுக்கொண்டது. அதற்குப்பிறகு படிப்படியாக இவ் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் குறைய ஆரம்பித்தது. அதிகபட்சம் ஓர் ஆண்டுக்கு 76000 அகதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று உச்சவரம்பு விதித்தார் ஒபாமா. சிரியா சிதற ஆரம்பித்தபோது இந்த எண்ணிக்கையை ஒபாமா 110000 ஆக உயர்த்தினார். ட்ரம்பின் சமீபத்திய உச்சவரம்பு 45000. இதுவரை அமெரிக்கா விதித்த உச்சவரம்பில் மிகக் குறைவானது இதுவே. அகதிகளைக் குடியமர்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

துவதற்கு அமெரிக்கா மிகப்பெரும் விலையை ஒவ்வோர் ஆண்டும் கொடுத்து வருகிறது என்பதுதான் ட்ரம்பின் வாதம். இந்த வாதத்துக்கு வலுச் சேர்க்கப் புள்ளிவிபரங்கள் தேவை என்று கடந்த மார்ச் மாதம் கேட்டிருந்தார் ட்ரம்ப். ர்ர்ளு அறிக்கை (ஹெல்த் அண்டு ஹியூன் சேர்வீசஸ் துறை) என்னும் பெயரில் அந்த புள்ளி விபரங்கள் ட்ரம்ப்பிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் ஒரு சிக்கல். அகதிகளுக்காக அமெரிக்க அரசு செய்யும் செலவைவிட அகதிகள் மூலம் அமெரிக்க அரசு அதிகம் சம்பாதிக்கிறது என்னும் உண்மையைப் போட்டுடைத்திருந்தது அந்த அறிக்கை. ஆதாரத்துக்கு விரிவான வரவு செலவுக் கணக்கும் இருந்தது. செலவு போக 63 பில்லியன் டொலர் வருமானத்தை அகதிகள் மூலம் அமெரிக்கா ஈட்டியிருகிறது. இதன் பொருள் டொனால்ட் ட்ரம்ப் கூறுவது பொய் என்பதே.

தடுத்து நிறுத்தியதோடு நில்லாமல் வழக்கமாகக் கூறிவரும் அதே பொய் களைச் சிறிதும் தயக்கமின்றி மீண்டும் சொல்லத் தொடங்கி விட்டார் ட்ரம்ப். அவரைப் பொறுத்தவரை புள்ளி விபரங்கள் அநாவசியம். அகதிகள்

**அகதிகள் என்பவர்கள் பிரச்சனைக்குரிய இடங்களிலிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தப்பியோடி வருபவர்கள். இந்த எளிய உண்மையை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை.**

பொருளாதாரச் சுமை என்று அவர் முடிவு செய்துவிட்டார். அந்த முடிவை எதன் பொருட்டும் மாற்றிக்கொள்ள தயாராக இல்லை அவர். ட்ரம்ப் மட்டுமல்ல. பலரும் இதே தவறான முடிவுடன்தான் அகதிகளை அணுகிக் கொண்டிருக்கிறார்கள். அகதி களை மட்டுமல்ல. ஆசியாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் முறைப்படி ஆவணங்களுடன் குடியேறுபவர்களைக் கூட ட்ரம்ப் தடுத்து நிறுத்தவே விரும்புகிறார். குடியேறிகளும் அகதிகளும் அமெரிக்கர்களின் வேலைவாய்ப்புக்களை நலத்திட்டங்களை அபகரித்துக் கொள்





கிறார்கள் என்று கூச்சலிடுவது தான் அவருடைய அரசியலாக இருக்கிறது.

இத்தனைக்கும் அமெரிக்காவின் அடையாளமாக மாறிவிட்ட ஸ்வீட் ஜாப்ஸ் ஒரு குடியேறியின் மகன் என்பதை அமெரிக்கா அவ்வப்போது ட்ரம்ப்க்கு நினைவுபடுத்திக்கொண்டு தான் இருக்கிறது. ஸ்வீட் ஜாப்ஸின் தந்தை படிப்பதற்காக 1950களில் சிரியாவிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தவர். பெயர் அப்துல் ஃபதா ஜண்டாலி. மிஸ்டர் ட்ரம்ப் ஒருவேளை நீங்கள் அப்போது அதிபராக இருந்திருந்தால் ஸ்வீட் ஜாப்ஸ் உருவாகியிருக்கமாட்டார் என்கிறது ஒரு ட்வீட். ஸ்வீட் ஜாப்ஸின் தந்தை சிரியாவிலிருந்து வந்தவர். யாரை தடுத்து நிறுத்துவது என்று முடிவு செய்யும்போது கவனமாக இருங்கள் என்கிறது ட்ரம்புக்கான இன்னொரு ட்வீட்.

அகதிகளால் லாபமே கிடைக்கும் எனவே கதவை திறங்கள் என்று கோருவது ட்ரம்ப் போன்றவர்களுக்கான ஒரு நல்ல பதிலடியாகமட்டுமே இருக்கும். அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கான தார்மிக நியாயம் என்பது முற்றிலும் வேறு. ஆயிரம் அகதிகளை உள்ளே அனுமதித்தால் பதிலுக்கு அவர்கள் எனக்கு என்ன தருவார்கள் என்னும் கேள்வியைக் கடந்து சென்றால் இந்த நியாயத்தை தரிசிக்க முடியும் என்கிறார் அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணரான ஜெஃப் ரிசாக்ஸ்.

அகதிகள் என்பவர்கள் பிரச்சனைக்குரிய இடங்களிலிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தப்பியோடி வருபவர்கள். இந்த எளிய உண்மையை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை. சக மனிதர்கள் செத்து விழுந்தால் பரவாயில்லை, எனக்கு என் நாடும் என் மக்களும் மட்டும்தான் முக்கியம் என்று பொறுப்புள்ள அரசாங்கம் சொல்லாது. மனிதர்களை அழிவிலிருந்து மீட்டு அவர்களுக்கு வாழ்வளிப்பது அரசாங்கங்களின் கடமை. உன் நாடு போரிட்டால் அதற்கு நான் என்ன செய்வது என்று சொல்லி அகதிகளை திருப்பியனுப்புவது அநீதியான செயல். அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கையும் கூட.

இருந்தும் அரசாங்கங்கள் இதைத்தான் உலகெங்கும் செய்து கொண்டிருக்கின்றனர். அகதிகளை ஏற்க வேண்டுமா, வேண்டாமா என்பதை சம்பந்தப்பட்ட நாடு தான் முடிவு செய்கிறது. விருப்பமிருந்தால் கதவை திறக்கிறது. பிடிக்கவில்லை என்றால் விரட்டுகிறது. ஒவ்வெரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான சட்டம். இந்த ஆண்டு இத்தனை அகதிகளை மட்டுமே ஏற்பேன் என்று ஒரு நாடு உச்சவரம்பு விதிக்கலாம். அல்லது ஒரேயொரு அகதியைக் கூட ஏற்க மாட்டேன் என்று எல்லையில் பூட்டுப் போடலாம். மீறி உள்ளேவரத் துடிப்பவர்களை கைது செய்து சிறையில் தள்ளுவதற்கும் அந்த நாட்டுக்கு உரிமை இருக்கிறது. அகதிகளை ஏற்க மறுப்பதற்கு காரணங்களை சொல்ல வேண்டிய அவசியம் கூட இல்லை. நாம் எல்லோருமே ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது என்கிறார் ஜெஃப் ரிசாக்ஸ். எபோலா பிரச்சனையாக இருந்தாலும் சரி, புவி சூடேற்றமாக இருந்தாலும் சரி எல்லோரும் ஒன்றுபட்டுதான் தீர்வுகாண வேண்டியிருக்கிறது. பிரச்சனைகளுக்கு எல்லைகள் கிடையாது. தீர்வுகள் காணவேண்டுமானால் எல்லைகளை நாம் கடந்தாக வேண்டும்.

2005ம் ஆண்டு 'ரீஃபாடா என்னும் பர்மியப் பெண் தன் குடும்பத்தினருடன் 9000 மைல் பயணம் செய்து அமெரிக்காவில் அகதியாகக் குடியேறினார். நான் தற்சமயம் டெக்சாஸில் தங்கியிருக்கிறேன். நானும் என் கணவரும் எங்களுடைய மூன்று குழந்தைகளுடன் இங்கு வந்துசேர்ந்தோம். அமெரிக்காவில் எங்கள் வாழ்நாளிலேயே முதல் முறையாக பாதுகாப்பாக உணர்ந்தோம்.

வன்முறையிலும் போரிலும் சிக்கி சீரழியும் குடும்பங்களுக்கு ஒரு நாடு அளிக்கும் அதிகபட்ச உதவி இதுவே. அகதிகள் கப்பலின் ஓட்டைகள் அல்ல. அவர்களை சேர்த்து அணைத்துக் கொண்டு செல்லும் போது கப்பல் மேலதிக வேகத்துடன் பயணம் செய்கிறது. மூழ்கட்டும் நமக்கென்ன என்று கருதுபவர்கள்தான் ஆபத்தான ஓட்டைகள். அவர்கள் செலுத்தும் கப்பல் நிறைய தள்ளாட்டங்களை சந்திக்க நேரிடும்.

'ரீபாடா தொடர்கிறார், 'அதிபர் தேர்தல் பிரசாரத்தில் டொனால்ட் ட்ரம்ப் குதித்த போது என்னுடைய பாதுகாப்பு உணர்வு அகன்று முதல்முறையாக நான் அச்சப்பட ஆரம்பித்தேன். இப்போது ட்ரம்ப் அதிபராகி விட்டார். அமெரிக்கா எனக்கு இதுவரை அளித்து வந்த பாதுகாப்பு உணர்வு விலகிச் சென்றுவிட்டதுபோல் இருக்கிறது. ட்ரம்ப் வெறுப்பையும் அச்சத்தையும் விதைத்து ஆண்டு கொண்டிருக்கிறார். அக்கம்பக்கத்தினரும் அவரை பின்பற்ற ஆரம்பித்து விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். அப்படி நடந்தால் என் குடும்பத்தின் நலன் பாதிக்கப்படும் என்று எனக்குத் தெரியும்.'

'கவலைப்படாதீர்கள் அம்மா. அப்படி எல்லாம் நடக்காது. நாங்கள் இருக்கிறோம்' என்று 'ரீஃபா டாவின் கரங்களைப் பற்றி யார் ஆறுதல் அளிக்கப்போகிறார்கள்?

**சொந்தங்கள் வருவார்கள்**




"நர்ஸ், இங்க படுத்துட்டிருந்த பேஷண்ட் எங்க காணோம்?"

"சிக்னல் கிடைக்கலேன்னு மொட்டை மாடியில படுத்துட்டார் டாக்டர்!"



"என்ன நோய்க்கு என்ன மருந்து சாப்பிடணும்னு கரெக்டா சொல்றீங்களே... உங்க வீட்டுல யாராவது டாக்டரா இருக்காங்களா?"

"எல்லாரும் நோயாளியா இருக்காங்க!"



"தலை எல்லாம், ஏன் இப்படி வீங்கிப் போயிருக்கு"

"மழை கொட்டு கொட்டுனு கொட்டிருச்சு!"

# சபாஷ் டிக்வெல்ல!

அன்ரூ இக்னேஷ்

இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியை சூடான வார்த்தைப் போருடன் இலங்கை ஆரம்பித்துள்ளது. வழக்கமாக இலங்கை வீரர்கள் மிக சாதுவாக இருப்பார்கள். இந்தியர்கள் மல்யுத்த வீரர்களை போல ஆக்ரோசமாக இருப்பார்கள். கடந்த மூன்று வருடத்தில் இந்த போக்கு மிக அதிகமாக இருக்கிறது. இலங்கையுடனான ஆட்டங்களில் இந்தியா மேலாதிக்கம் செலுத்துவதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஆட்டம் ஆரம்பித்ததில் இருந்தே இந்தியர்கள் பந்து, துடுப்பு, வார்த்தையால் ஆட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுவார்கள். சவாலளிக்கும் ஆட்டத்திறன் வளரும்போதுதான் மூன்றாவது ஆயுதம் கைவரும். இலங்கை இம்முறை அதை கையில் எடுத்துள்ளது. உண்மையில் இது நல்ல விடயம்தான். களத்தில் இந்தியர்களின் மேலாதிக்க மனோபாவத்திற்கு நெத்தியடி கொடுத்துள்ளனர். வார்த்தை மோதல்கள் கிரிக்கெட் ஆட்டத்தின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாகிவிட்ட இன்றைய காலத்தில், ஆட்டத்திலும் ஆக்ரோசத்தில் பலமான ஒரு அணியை இலங்கை இப்படித்தான் எதிர்கொள்ள வேண்டும்.

முதல் மூன்று நாட்களில் இலங்கை செலுத்திய ஆதிக்கம் மனோரீதியாக இந்தியாவை கடுமையாக சீண்டியிருக்கும். நீண்ட தொடருக்காக இந்தியா புறப்பட்ட போதே, பங்களாதேஷ் மாதிரியான ஒரு அணி வருகிறதென்ற அபிப்பிராயம்தான் இந்திய ஊடகப்பரப்பில் எதிரொலித்தது. இந்திய அணியினதும், மனத்தினதும் எதிரொலிப்புத்தான் அது. அந்த அபிப்பிராயத்திற்கு முதல் நாளிலேயே நெற்றியடி கொடுத்துவிட்டார் லக்மல். லக்மலின் ஸ்பெல் இந்திய அணியை மட்டுமல்ல, இந்தியாவின் ஆதிக்க மனதையும் உண்மையில் ஆடவைத்து விட்டது.

இதனால்தான் இந்திய அணியும், ஊடகங்களும் இலங்கையின் மனஉறுதியை ஆட்டம்கான வைக்க களத்திற்கு உள்ளேயும்



டில்ருவானின் ரிவியூ

வெளியேயும் ஸ்லெட்ஜிங்கில் ஈடுபட்டன. களத்திற்கு உள்ளே ஸ்லெட்ஜிங்கிற்கு அகப்பட்டவர் நிரோசன் டிக்வெல்ல. வெளியே சிக்கியவர் டில்ருவன் பெரேரா.

ஆட்டத்தின் கடைசிக்கட்டத்தில் டிக்வெல்லவுடன் தேவையற்ற சீண்டலில் கோலி ஈடுபட்டு, அது டிக்வெல்லவின் தவறாக இந்திய அணி, ஊடகங்களாலும் கட்டியமைக்க முயற்சிக்கப்பட்டது. இந்த சம்பவத்தை நுணுக்கமாக அவதானித்தால் ஒரு விடயம் புலப்படும். கோலியும், இந்திய அணியும் எவ்வளவு மேலாதிக்க மனநிலையுடன் களத்தில் செயற்படுகிறார்கள் என்பதை கவனியுங்கள். ஸ்லெட்ஜிங்கை கோலியே ஆரம்பித்தாலும், அதையெல்லாம் டிக்வெல்ல சகித்துக்கொள்ள வேண்டுமென அவர் எதிர்பார்த்தார். பந்துவீச தயாரான சமியை திருப்பியனுப்ப டிக்வெல்ல கையாண்ட பாணி உண்மையிலேயே மிகச்சரியான ஸ்லெட்ஜிங் பதிலடி. இதை கோலியோ, இந்தியாவோ எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் களத்தில் அப்படி கொந்தளித்தார்கள். மற்றும்படி, டிக்வெல்ல தாமதித்த மூன்று நிமிடத்தால் இலங்கை தப்பித்ததென்பதை நகைச்சுவைக்கு மட்டுமே நம்பலாம்.

டில்ருவன் பெரேரா ஆட்டமிழந்ததாக நடுவர் அறிவிக்கப்பட்டதும், அவர் அதை ஏற்றுக்கொண்டு சில அடிகள் நடந்துவிட்டு, மீண்டும் ரிவியூ கேட்டார். இதை இந்திய ஊடகங்கள் சித்தரித்ததும் ஒரு ஊடக ஸ்லெட்ஜிங்தான். ஓய்வறையை பார்த்து ஆலோசனை கேட்டு ரிவியூ செய்தார் என்ற தலைப்பிட்டு கரித்து கொட்டியிருந்தன இந்திய ஊடகங்கள். வேடிக்கை என்னவென்றால், தலைப்புத்தான் அப்படியிருந்ததே தவிர, செய்தியின் உள்ளடக்கத்தில் ரிவியூக்காக ஓய்வறையை நாடியதாக செய்தியில்லை. அது ஆதாரமில்லாத குற்றச்சாட்டு. சம்பவத்தை மீளநினைவில் கொண்டு, சம்பவத்தை அலசிப்பார்க்க சில விநாடி அவகாசத்தை அவர் எடுத்துக்கொண்டிருக்கலாம்.

இந்த சம்பவங்களை கடந்து, இந்தியாவிற்கு கடுமையான சவாலளித்த அளவில் இலங்கை முதலாவது போட்டியில் திருப்திப்படலாம். இரண்டாவது இன்னிங்சில் வெளியில் சென்ற பந்துகளிற்கு கால்களை நகர்த்தாமல் மட்டையை நீட்டிய தவறுகளை தவிர்த்தால், இந்த தொடரில் இலங்கை நம்பிக்கையான மாற்றங்களை ஏற்படுத்தலாம். களத்தில் எதிரணியினர் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கமாட்டேன் என்ற டிக்வெல்லவின் மனநிலை மற்றைய வீரர்களிற்கும் ஏற்பட வேண்டும். ●

## லேடி ஷேன் வோர்ன்


அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியின் லெக் ஸ்பின்னர் அமந்தா வெலிங்டன், ஷேன் வொர்ன், மைக் கேட்டிங்குக்கு வீசிய நூற்றாண்டின் சிறந்த பந்து போன்ற ஒரு பந்தை வீசி அசத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய மகளிர் அணிக்கும், இங்கிலாந்து மகளிர் அணிக்கும் பகலிரவு ஒன் ஆஃப் டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்றது. அதன் கடைசி நாளன்று ஆஸி. லெக் ஸ்பின்னர் அமந்தா வெலிங்டன், இங்கிலாந்து தொடக்க வீராங்கனை டாமி பியூமான் என்பவருக்கு அருமையான லெக் ஸ்பின் பந்தை வீசி போல்ட் செய்தார்.

இந்தக் காட்சி அச்சு அசலாக அப்படியே ஷேன் வோர்ன், இங்கிலாந்து வீரர் மைக் கேட்டிங்குக்கு வீசிய அதே பந்து போல் அமைந்தது. லெக்ஸ்டம்பில் பிட்ச் ஆன பந்து ஓஃப் ஸ்டம்பைப் பெயர்த்தது.

ஆனாலும் அவுஸ்திரேலியாவினால் போட்டியை வெல்ல முடியவில்லை ஆட்ட முடிவில் இங்கிலாந்து 206/2 என்று வலுவான நிலையில் இருக்க ட்ரா ஆனது.

ஷேன் வோர்ன் 1993ம் ஆண்டு வீசிய அந்தப் பந்து இன்று வரை 'நூற்றாண்டின் சிறந்த பந்து' என்று வர்ணிக்கப்படுகிறது. தற்போது அமந்தா வெலிங்டன் பந்து அந்த மாதிரி பெயரைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது, லேடி ஷேன் வோர்ன் என்று இவரை அழைக்கலாம்.



## 151 பந்துகளில் 490 ரன்கள்

தென்னாரிக்காவின் கிளப் மட்ட ஒருநாள் கிரிக்கெட்டில் 20 வயது ஷேன் டாட்ஸ்வெல் 490 ரன்களைக் குவித்து சாதனை புரிந்துள்ளார்.

புக்கே கிளப் அணிக்கு ஆடிய டாட்ஸ்வெல், போட்ச் டார்ப் அணிக்கு எதிராக போட்செஃப்ஸ்ட்ரூமில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இந்த அதிவேக அதி அதிரடி இன்னிங்ஸை ஆடியுள்ளார். இவர் ஒரு விக்கெட் கீப்பர் பட்ஸ்மென். கடந்த சனிக்கிழமை இவரது பிறந்ததினம், அன்றைய தினத்தில் 57 சிக்சர்கள், 27 பவுண்டரிகளுடன் 151 பந்துகளில் 490 ரன்களை விளாசியுள்ளார். பவுண்டரிகள், சிக்சர்களிலேயே 450 ரன்கள்.

இவரது சக வீரர் ருவான் ஹாஸ்புருக் உறுதுணையாக ஆடி 52 பந்துகளில் 104 ரன்கள் எடுத்தார். இவரது புக்கே அணி 50 ஓவர்களில் 677/3 என்ற இமாலய ஸ்கோரை எட்டியது. எதிரணியான போட்ச் டார்ப் 50 ஓவர்களில் 290 ரன்களையே எடுக்க முடிந்தது. 490 ரன்கள் அடித்த டாட்ஸ்வெல் பந்து வீச்சிலும் 7 ஓவர்களில் 32 ரன்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

கிரேம் ஸ்மித் போன்றவர்கள் படித்த கிங் எட்வர்ட் தி செவந்த் பள்ளியைச் சேர்ந்தவர்தான் டாட்ஸ்வெல் அதிரடி ஆட்டத்துக்காக பெயர்பெற்றவர்.




பிரபல டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் அவரது காதலரான அலெக்ஸிஸ் ஓஹானியனைத் திருமணம் செய்து கொண்டார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் செரீனா, அமெரிக்காவின் பிரபல சமூக ஊடக நிறுவனமான ரெட்டிட் நிறுவனத்தின் துணை நிறுவனரான அலெக்சிஸ் ஓஹானியனுடன் தனக்குநிச்சயம்செய்யப்பட்டதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து, சேர்ந்து வாழ்ந்துவந்த இவர்களுக்கு கடந்த செப்டம்பர் 1ம் திகதி பெண் குழந்தை பிறந்தது. இதனைத் தொடர்ந்து இவர்களது திருமணம் வெள்ளிக்கிழமை நியூ ஓர்லன்ஸில் நடைபெற்றது.

இத்திருமணத்தில் செரினா மற்றும் அலெக்ஸின் நெருங்கிய உறவுகள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டனர்.

டென்னிஸ் உலகில் முடிசூடா ராணியாக விளங்கும் செரீனா வில்லியம்ஸின் திருமணத்துக்கு பிரபலங்கள் பலர் சமூக ஊடகங்களில் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# மனமே நலமா?
## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



 கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்



பெண் (25)
வட்டுக்கோட்டை

**கேள்வி:** ***அக்காவிற்கு 27 வயது. அவருக்கு ஒருவரை திருமணம் பேசினார்கள். அக்காவை கோயிலில் வைத்து மாப்பிள்ளையும் பார்த்தார். திருமணப்பொருத்தம் போதுமானதுதான். திருமண வீடொன்றில் அக்காவும் நானும் நிற்கும்போது மாப்பிள்ளை இரண்டாம் முறையாகப்பார்த்தார். இப்பொழுது மாப்பிள்ளை வீட்டார் சொல்கிறார்கள் அக்காவின் பொருத்தம் காணாதாம் எனது குறிப்பையும் பார்ப்போம் என. அவர் 2 மாத லீவில் வந்தவர். விரைவில் போய்விடுவார் என அவசரப்படுத்த எமது வீட்டிலும் குறிப்பை பார்க்க கொடுத்துவிட்டனர். பொருத்தமாம். அக்காவிற்கு பார்த்தவரை நான் திருமணம் செய்வது அக்காவின் மனதை பாதிக்கும். நான் இந்த திருமணத்தை செய்யலாமா?***

*பதில்:* *அன்புச்சகோதரி! உண்மையிலேயே இவ்வகையான பிரச்சனைகள் நூற்றுக்கு நூறு வீதம் உளவியல் ரீதியாக மட்டுமே தீர்க்கப்பட வேண்டியவை. பேச்சுத்திருமணம் என்றாலே ஒருவித வியாபாரம்தானே. இந்த வியாபார நடவடிக்கையில் சில பல வியாபார ஒழுக்கங்களை பேண வேண்டிய தேவையும் இருக்கிறது. உதாரணமாக நாம் ஒரு மாட்டை விலைபேசி தீர்த்து ஒரு ரூபாய் முற்பணம் கொடுத்துவிட்டால் பின்னர் யார் வந்து நாம் தீர்த்த விலையை விட எத்தனை ஆயிரம் அதிகமாக தந்தாலும் அதை விற்காமல் இருப்பதுதான் வியாபார ஒழுக்கம். இந்த ஒழுக்கம் எல்லாவகை வியாபாரத்திற்கும் அவசியமானது. அப்படி இருக்கும் போது பெண் வாங்கும் வியாபாரத்தில் இந்த ஒழுக்கத்தை மீறலாமா.?*

*பேச்சுத்திருமணம் என்பது ஒருவகையில் பாரம்பரியமான பண்பாட்டு அம்சமாக காணப்படினும் என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு வியாபார நடவடிக்கையே. அதுவும் சீதனம் அன்பளிப்போடுபேசப்படும்திருமணங்கள் 100 வீதமான வியாபாரமாகும். ஏனெனில் விற்பனையாளருக்கும் வாடிக்கையாளருக்குமிடையிலான கேள்விகோரல் நடவடிக்கையின்படியே பொருத்தமான ஒரு தீர்வுக்கு இருபகுதியினரும் வருகிறார்கள். அப்படி ஒரு பொருத்தப்பாட்டின் படியான உடன்படிக்கைக்கு வந்தவர்கள் அதை மீறுவது வியாபார ஒழுக்க மீறலல்லவா?*

*உங்கள் அக்காவைப் பொருத்தம் பார்த்து பேசி முடித்து பெண்பார்க்க வந்த இடத்தில் உங்களை பார்த்து பெண்ணை மாற்றி வாங்க முயல்வது சரியான ஒரு செயல் அல்லவே. ஏனெனில் பெண்கள் என்ன பொம்மையா? மாற்றி வாங்க. அவர்களுக்கும் உள்ளம் உணர்வுகள் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் இருக்கும். உங்கள் அக்கா சில வேளைகளில் தனக்கு வரப்போகும் புதுமாப்பிள்ளை பற்றி சில பல கனவுகளோடு இருந்திருக்கலாம். சில எதிர்பார்ப்புக்களோடு இருந்திருக்கலாம். இப்போது அவை உடையும் போது உள்ளம் பாதிப்படையாதா? உண்மையில் எனக்கு இந்தப் பெண் வேண்டாம் என்று விட்டிருந்தால் பறவாயில்லை. இவள் வேண்டாம் தங்கையை தாருங்கள் என்பது உங்கள் மனநிலையிலும் பாதிப்பு ஏற்படுத்தும். அக்காவின் மனநிலையிலும் பாதிப்பு ஏற்படுத்தும் செயலாகும்.*

*அதை விட 2 மாதம் தான் நிற்பேன் அதற்குள் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டுபோகவேண்டும் என்று அவசரப்படுத்துவதற்கு திருமணம் என்ன கொழும்பு புறக்கோட்டை வியாபாரமா? எமது சமூகஅமைப்பில் இதை ஆயிரம் காலத்துப் பயிர் என்கிறார்கள். ஒருதடவை கட்டினால் காலம் முழுக்க கட்டியாள வேண்டிய ஒன்றல்லவா?*

*இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. உங்களுக்குப் பார்க்கப்போகும் மாப்பிள்ளை அக்காவைப் பார்க்க வந்து தங்கையைப் பார்க்கச் சொல்பவர் உங்களை முற்பணம் கொடுத்து புக் பண்ணியபின் இதைவிட நல்ல ஒரு பெண் கிடைத்தால் அதை தெரிவு செய்ய மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. எனவே எனது நிலைப்பாட்டில் இந்த பெண் வியாபார நடவடிக்கையில் முக்கியமாக பெண்களின் மனது புண்படாதவிதமாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன். எனக்குத் தெரிய பல பெண்கள் பேச்சுத் திருமண சந்தையிலே விற்க முடியாத கேள்விகளால் கைவிடப்பட்டு மனம் உடைந்து இனிமேல் சந்தையும் வேண்டாம் கல்யாணமும் வேண்டாம் என்று இருந்திருக்கிறார்கள்.*

*சரி போகட்டும் சகோதரி. உங்கள் விடயத்தில் நீங்கள் இருவரும் இந்த சம்பந்தத்தை விடுவது உளவியல் ரீதியாக நல்லது என்று நினைக்கிறேன். ஏனெனில் தற்செயலாக உங்களுக்கு இந்த வரன் அமைந்து உங்கள் அக்காவிற்கு நான் மேலே சொன்னதுபோல சந்தைக் கேள்வி போதாமல் வரன் அமையாவிட்டால் உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்கள் மனம் உங்களை உறுத்தும். அல்லது அக்காவிற்கு சரியான வரன் அமையும் வரை இந்த சம்பந்தத்தை ஒத்திவையுங்கள். அக்காவிற்கு சரியான வாழ்க்கை ஓகே எனின் உங்களுக்கும் ஓகே.*

*அப்படியில்லாவிடின் அக்காவிற்கும் இந்த விடயத்தில் எதுவித பிரச்சனையும் இல்லை கிடைத்த பஸ்ஸை பிடித்து நீ போ நான் எனக்குரிய பஸ்ஸை பிறகு பார்த்துக்கொள்கிறேன் என்றால் ஓகே. நீர் பஸ்ஸில் ஏறிக்கொள்ளலாம். ஆலோசனைகள் என்னுடையவை. முடிவுகள் உங்கள் கையில். ஏதோ ஒரு நல்ல முடிவை எடுங்கள் சந்தோசமாக வாழுங்கள்.*

பெண் (20)
வவுனியா

**கேள்வி: நான் விடுதியொன்றில் தங்கியிருந்து உயர்கல்வி படித்து வருகிறேன். எட்டுமாதமாக இங்கு இருக்கிறேன். கடந்த ஆறுமாதமாக என்னிலும் சற்று வயது கூடிய அக்கா ஒருவருடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. என்னில் அக்கறையுடையவராகத்தான் அவரது நடவடிக்கைகளைப் பார்த்து வந்தேன். கடந்த 2 மாதமாக அவரது நடத்தையில் வித்தியாசம் தெரிகிறது. இரவில் என்னுடன் எல்லைமீறி நடக்க முயல்கிறார். எனக்கு இதில் விருப்பமில்லை. அவரிடம் நேரில் சொல்லிவிட்டேன். நான் இல்லாவிட்டால் தற்கொலை செய்துகொள்வேன் என போனவாரம் அழுதபடி மிரட்டினார். நான் உண்மையில் குழம்பிப் போயிருக்கிறேன். என்ன செய்யலாம்?**

**பதில்:** அன்புச்சகோதரி! பூகோளமயமாதலில் வேகமான வளர்ச்சியின் விளைவுகளில் இதுவும் ஒன்று. தகவல் தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக அதிகரித்துக்கொண்டு வரும் பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. ஏனெனில் உலகின் கண் உள்ள கண்றாவிப் பிரச்சனைகளை எல்லாம் எங்கள் வீட்டிற்குள் கொண்டுவந்து கொட்டுவதில் இந்தச் சாதனங்கள் மிகப்பெரிய உதவியைச் செய்கிறது. அந்தக் குப்பைகளை எல்லாம் பார்த்துப் பார்த்துப் பழகி குப்பையினுள்ளே வாழ்வதில் மகிழ்ச்சிகாண ஒரு சமூகம் தயாராக இருக்கிறது. நான் என்ன கேட்க, இவர் என்ன சொல்கிறார் என்பது புரியாமல் குழம்புகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது.

உண்மையில் உங்கள் அக்கா நண்பியின் பிரச்சனை இயற்கையான அதேநேரம் அசாதாரனமான இயல்புப் பிரச்சனை. நீங்கள் நேரடியாக கூறாவிடினும் நீங்கள் கூறும் விடயம் உங்கள் நண்பி பாலியல் ரீதியாக பலாத்காரம் செய்யப்பார்க்கிறார் என்பதுதான் உங்களின் பிரச்சனை. உண்மையில் உங்கள் நண்பி ஒரு ஓரினச்சேர்க்கையாளராக இருக்கலாம். பெண்களில் ஓரினச்சேர்க்கையில் ஆர்வமுடையவர்களை ஆங்கிலத்தில் Lesbians என்பார்கள். இவர்களும் ஒரு சமூகஉறுப்பினர்களே. உலகம் முழுவதும் எந்த ஒரு சமுதாயத்திலும் குறைந்தளவாக சனத்தொகையினர் (3%) இவ்வகையான பாலியல் ரீதியான விலகல் நடத்தை உள்ளவர்களாக காணப்படுகின்றனர். இது இவர்களின் இயல்பு இதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். பொதுவாக இவர்கள் தமக்குரிய பங்காளரை அவர்களின் சம்மதத்துடன் தேர்ந்து கொள்வார்கள். ஒரு சிலருக்கு இவ்வகையான சுத்தமான காதலுணர்வு மேலோங்கி தற்கொலை நிலமைக்கு போபவர்களும் இருக்கிறார்கள்.

இன்று இந்த மாதிரியான விடயங்களில் ஒரு சமுதாய ரீதியான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமான தமிழ்திரைப்படங்கள் கூட அண்மைக்காலமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு விடயத்தை இங்கே அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அதாவது முன்னைய காலங்களில் இதே மாதிரியான அசாதாரன இயல்புகளுடன் ஆண் பெண் இருபாலரும் எமது சமூகத்தில் இருந்துள்ளனர். ஆனால் சமூகப் பண்பாட்டு விழுமியங்களின் ஆதிக்கம் காரணமாக தமது இவ்வகையான உணர்வுகளை கூடியளவு அடக்கி அல்லது நசுக்கி மூடி மறைத்துக் கொண்டு சமூக அங்கீகாரம் உள்ள ஆண் பெண் திருமணச்சடங்கினுள் சிக்கி வாழ்ந்து முடித்தவர்கள் பலர் இருக்கிறார்கள். சிலர் திருமணபந்தத்தில் இணையாமல் தனியாகவே வாழ்ந்து முடித்தும் உள்ளனர். ஆனால் உளவியல் சொல்கிறது இவர்களின் இயற்கையான பாலியல் எதிர்பார்ப்பும் கவர்ச்சியும் திருப்தியும் இந்த ஓரினச் சேர்க்கையிலேயே உள்ளதால் இது அவர்களின் அடிப்படை உரிமையாகக் கூடப் பல நாடுகள் அங்கீகரித்துள்ளன. ஆனால் எமது சமயமருத்துவ இலக்கியமான திருமூலர் திருமந்திரத்தில் பெண்ணோடு பெண் கூடுவது பேதமை என வர்ணித்துள்ளமை நோக்கற்பாலது.

எதுஎப்படியாயினும் உங்கள் பிரச்சனையில் உங்களுக்கு இதில் சம்மதம் இல்லை என்பதைக் கூறுவதில் உங்களுக்கு உரிமை உண்டு. அதேநேரம் அந்த பெண்ணின் மன நிலையையும் கொஞ்சம் கவனத்தில் எடுக்க வேண்டும். உண்மையிலேயே அவர் உங்கள் மீது வெறியான காதல் கொண்டுள்ளார் எனின் அது குறித்து கட்டாயம் கரிசனை கொள்ள வேண்டும். அப் பெண்ணிற்கு உங்களுக்கு இதுவிடயமாக உடன்பாடில்லை என்பதை பக்குவமாகப் புரியவையுங்கள். உங்கள் மீதான நட்பில் எனக்கு எதுவிதமான பிரச்சனையும் இல்லை ஆனால் பாலியல் ரீதியான இவ்விடயம் எனக்கு எள்ளளவும் பொருத்தமற்றது என்பதை புரியவைப்பது உங்களின் கையிலேயே உள்ளது. வன்முறையற்ற தொடர்பாடல் மூலம் இப் பிரச்சனைக்கு இலகுவாக தீர்வுகாணலாம். முடியாவிடின் இருவருமாக சேர்ந்து நல்ல ஒரு மனநல ஆலோசகரிடம் ஆலோசனை பெறுங்கள்.



அக்காவிற்கு ஒருவரை திருமணம் பேசினார்கள். அக்காவை கோயிலில் வைத்து மாப்பிள்ளையும் பார்த்தார். திருமணப்பொருத்தம் போதுமானதுதான். திருமண வீடொன்றில் அக்காவும் நானும் நிற்கும்போது மாப்பிள்ளை இரண்டாம் முறையாகப்பார்த்தார். இப்பொழுது அக்காவின் பொருத்தம் காணாதாம் எனது குறிப்பையும் பார்ப்போம் என சொல்கிறார். நான் இந்த திருமணத்தை செய்யலாமா?

# இலங்கையில் ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் பற்றிய அறிமுகம்



ரமணன் llb



இந்த சட்டம் யாருக்கு பொருத்தமற்றது எனில் கீழ்வரும் வகுதிக்குள் அடங்கும் தொழிலாளர்கள் இச் சட்டத்தில் உட்படுத்தப்படாதவர்களாவர்,

- தொழில் தருனரின் மனைவி மற்றும் அவர் திருமணமாகி அல்லது திருமணமாகாமல் இருப்பினும் அவரில் தங்கிவாழும் குழந்தைகள்.
- மத்திய மற்றும் மாகாண அரச ஊழியர்கள்.
- சாதாரண பணியாளர்.
- பங்குடமையின் பங்காளர்கள்.
- வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுபவர்கள்.
- தொழில்தருனர் மற்றும் தொழிலாளர் ஆகிய இருவரும் இலங்கையரல்லாது வெளிநாட்டில் தொழிலுக்கமர்த்தப்பட்ட நபர்கள்.
- 14 வயதுக்கு குறைந்தவர்கள்.
- 10 ஊழியர்களுக்கு குறைவான ஊழியர்களுடன் இயங்கும் தர்மஸ்தாபனங்கள்.
- வீட்டுப் பணியாளர்கள்.

எவ்வாறாயினும் ஒரு கம்பனியின் பணிப்பாளர் சட்ட விடயம் தொடர்பாக ஒரு தொழிலாளராக காணப்படுகிறார். ஆகவே இந்த சட்டம் மேற்குறிப்பிட்ட வகுதிக்குள் அடங்கும் ஊழியர்கள் தவிர்ந்த அனைத்து தொழிலாளர்களும் ஊழியர் சேமலாப நிதிய சட்டத்திற்கு பொருத்தமுடையவர்களாவர். எனவே கீழ்வரும் தொழிலாளர்கள் ஊழிய சேமலாப நிதிய (EPF) சட்டத்தின் கீழ் உள்ளடங்கப்படுவர்

நிரந்தர ஊழியர், நிரந்தரமற்ற சமயோசித, தற்காலிக, தகுதிகாண் கால, தொழில் பயிலுனர், பயிற்சியாளர்கள், தேர்ச்சியடைந்த நாள், வாராந்த அல்லது மாதகூலி அல்லது சம்பளம் பெறுபவர். ஒப்பந்தம், தரகு அல்லது வீத அடிப்படை தொழிலாளர்கள், நாள் ஒன்றுக்கு குறித்த சிலமணித்தியாலங்கள் மட்டும் தொழிலாற்றுபவர்கள், 55 வயதிற்கு மேற்பட்ட ஆண் தொழிலாளர்கள், 50 வயதிற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள், தொழில் தருனர் ஒரு தொழிலாளரை மட்டும் கொண்டிருப்பினும் கூட அத் தொழிலாளர் ஆகியோர் ஊழியர் சேமலாபநிதிய சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

### சேமலாப நிதிய பங்களிப்பு (EPF CONTRIBUTION)

தொழில் தருனரும் தொழிலாளரும் தொழிலாளரது மாதாந்த மொத்த உழைப்பில் முறையே 12%, 8% இனை மாதாந்தம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பாக வழங்க வேண்டும். தொழிலாளரது பங்களிப்பானது அவரது சம்பளம் அல்லது கூலியில் இருந்தே கழிக்கப்பட வேண்டும்.

மொத்த உழைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது

- அடிப்படை சம்பளம் / கூலி (Basic salary/Wages)
- வாழ்க்கை செலவுப்படி (Cost of living)
- விசேட வாழ்கை செலவுப்படி (Special cost of living)
- விடுமுறைக் கொடுப்பனவு (Leave pay)
- வருடாந்த விடுமுறைக் கொடுப்பனவு (Annual leave pay)
- உழைக்கப்பட்ட தரகு (Commission earned)
- துண்டு கூலி (Piece rate)
- சமைத்த அல்லது சமைக்காத உணவுக்கான ஊக்குவிப்பு பண பெறுமதி (cash value of cooked or uncooked incentives

தொழிலாளர்களதும் தொழில் கொள்வோரதும் மொத்த பங்களிப்புத் தொகையினை அடுத்த மாத முடிவுக்குள் அனுப்புதல் தொழில் கொள்வோரது கடமையாகும். ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பானது தொழில் கொள்வோரால் தாமதமாக செலுத்தப்படும் போது தொழில் கொள்வோரிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்படும். ஒரு மாதம் தாமதமானால் 5% தாமதக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். தாமத காலம் ஒருவருடம்வரை அதிகரிக்கும் போது தாமத கட்டணமும் 50% வரை அதிகரிக்கும்.

செலுத்த தவறிய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் தாமத கட்டணங்களின் வசூலிப்பு .

தொழில் தருனரால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படவில்லையாயின் தொழிலாளர் அது தொடர்பாக தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ய முடியும். ஆணையாளர் அதனை விசாரித்து பங்களிப்புத் தொகையையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்துமாறு தொழில் கொள்வோருக்கு கட்டளை இடுவார். தொழில் கொள்வோரால் அக் கட்டளை புறக்கணிக்கப்பட்டால் செலுத்தத் தவறிய பங்களிப்புத் தொகை மற்றும் அபராதமாக தாமதக் கட்டணத்தையும் வசூலிக்கும் பொருட்டு ஆணையாளர் உரிய நீதவான் நீதிமன்ற முன்னிலையில் வழக்கினை தாக்கல் செய்வார். இவ்வாறான வழக்கு ஒன்றில் தொழில் கொள்வோர் பங்களிப்பினை செலுத்தாது விட்டதிலிருந்து தள்ளுபடி செய்யக்கூடிய மிக வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வருமாறு:

- அவர் ஒரு தொழில் கொள்வோர் அல்லாதபோது
- அவரது வியாபார தளமானது நீதிமன்ற சட்டவரையறைக்குள் காணப்படாதபோது

### அவர் ஏற்கனவே EPF பங்களிப்பினை செலுத்தியிருக்கும் போது

ஒரு தொழில் தருனர் ஊழியர் சேமலாபநிதியச் சட்டத்துக்குள் உள்வாங்கப்படுவதனால் அவர் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஊழியர் இணைத்துக் கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் தொழில் ஆணையாளரிடம் பதிவினை மேற்கொள்ளுதல் வேண்டும். தொழில் தருனர் உரிய படிவத்தின் மூலம் அண்மையிலுள்ள தொழில் அலுவலகத்திற்கு அல்லது தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பத்தினை அனுப்பலாம். ஆணையாளர் விண்ணப்பப் படிவத்தினை பெற்றதும் தொழில் தருனருக்கு பதிவு இலக்கம் வழங்கப்படும். பின் தொழில் தருனர் அவரது தொழிலாளர்களுக்கான EPF இலக்கங்களை நிர்ணயிப்பதும் அத்துடன் 3 மாதங்களுக்குள் பங்களிப்புத் தொகையை செலுத்துதலும் கட்டாயமானதாகும்.

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிய பிரிவின் கீழ் இந் நிதியத்திற்கான நிர்வாகம் மற்றும் அமுலாக்கம் என்பன தொழில் ஆணையாளரால் முன்னெடுக்கப்படும். தொழில் தருனரிடமிருந்து இலங்கை மத்திய வங்கியால் பெற்றுக்கொள்ளப்படும் பங்களிப்புத் தொகைகள் தனிநபர் கணக்குகளில் வரவு வைக்கப்படுவதோடு அங்கத்தவர் கணக்குகளில் வட்டியுடன் வரவு வைக்கப்படும். இது வருடாந்தம் கூற்றுகளாக அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இவ் வருடாந்தக் கூற்றானது ஆரம்ப மீதி, பங்களிப்பு மற்றும் வருடாந்தத்திற்கான வட்டி என்பனவற்றைக் கொண்டிருக்கும்.

### பங்களிப்பு செலுத்துவதன் அனுகூலங்கள்

கீழ்வரும் சூழ்நிலைகளின் கீழ் மட்டும் அங்கத்தவர்களுக்கு நன்மையுடையதாகும்.

### ஓய்வுபெறும் வயதைஅடைந்த பின் தொழில் முடிவுறுத்தப்படும் போது

பெண்கள் ஓய்வுபெறும் வயது 50 மற்றும் ஆண்களின் ஓய்வுபெறும் வயது 55 ஐ அடைந்த பின்னரும் அவர்கள் தொழிலை தொடர விரும்பினால் அவ்வாறு தொழிலை நீடித்துள்ள தொழிலாளர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புசெய்தல் வேண்டும். ஓய்வுபெறும் வயதை அடையப்பெற்ற தொழிலாளர்கள் ஊழிய சேமலாப நிதிய பங்களிப்புத் தொகையினை மீளப்பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

- திருமணம் காரணமாக தொழில் முடிவுறுத்தப்பட்டால்

பெண் தொழிலாளர்கள் மட்டும் தமது திருமணத்திற்காக தொழிலை முடிவுறுத்தும் போது சேமலாப நிதியத்தினை பெற உரித்துடையவர்களாவர். தொழிலில் உறுதிப்படுத்தப்பட்டு 3 மாதங்களுக்குள் ஒரு பெண் திருமணம் செய்து தொழிலை முடிவுறுத்தினால் அப் பெண் திருமணம் நிகழ்ந்த தினத்திலிருந்து 5 வருடங்களுக்குள் EPF இனை பெற்றுக்கொள்ள முடியும்.

### நிரந்தர இயலாமையின் காரணமாக தொழில் முடிவுறுத்தப்படும் போது

விபத்தினால் நிரந்தர இயலாமை, பக்கவாத நோய் போன்ற காரணங்களால் ஒரு தொழிலாளர் தொழில் செய்வதற்கு இயலாத நிரந்தர நிலமையை ஒரு பதிவு செய்யப்பட்ட மருத்துவரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துவதனூடாக தொழில் முடிவுறுத்தப்படும் போது அவர் EPF இனை பெற்றுக்கொள்ள முடியும்.

நிரந்தர குடிப்பெயர்ச்சியின் காரணமாக தொழில் முடிவுறுத்தப்படும் போது

இலங்கைக்கு மீளத் திரும்புவதில்லை எனும் நோக்கத்தோடு வெளிநாட்டு நிரந்தர அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ள தொழிலாளர் அந் நோக்கத்திற்காக தொழிலை முடிவுறுத்தும் போது அவர் EPF இனை பெற்றுக் கொள்ளமுடியும்.

### நிரந்தரமானதும் ஓய்வூதியத் தகுதியுடையதுமான ஒரு தொழிலுக்கு நியமிக்கப்படும் போது தொழில் முடிவுறுத்தப்படும் போது

பொதுச்சேவை அல்லது உள்ளூராட்சி போன்ற அரச நிறுவனங்களில் நிரந்தரமானதும் ஓய்வூதியத் தகுதியுடையதுமான நிரந்தர நியமனம் கிடைக்கும் பட்சத்தில் தற்போதய தொழில் முடிவுறுத்தும் போது அவர் நூறிகு இனை பெற்றுக்கொள்ள முடியும்.

மரணமடைந்த ஊழியரது சேமலாப நிதியானது அவர் திருமணமாகாதவராக இருந்தால் அவரால் முன்மொழியப்பட்ட பயனாளிக்கு வழங்கப்படும். முலீறாக திருமணமாகியிருந்தால் அவரின் சட்டரீதியான வாரிசுகளுக்கே இது சென்றடையும்.

# விபத்தில் இறந்தது திவாகரா?




"சுகந்தி மேடம், பிடியுங்க இதை" என்றபடி மேலதிகாரி அவளிடம் ஒரு இனிப்பு பையையும், ஒரு மிக்ஸர் பக்கெட்டையும் நீட்டினார்

"நன்றி. புதுவீட்டுக்கு எப்போ போகப் போறீங்க?" என்று கேட்டாள் சுகந்தி.

"இன்னும் மூணு மாசம் கழிச்சுதான். சின்னச் சின்ன வேலைகள் இன்னும் நிறைய இருக்கு" என்றபடி நகர்ந்தார் மேலதிகாரி.

சுகந்தி அந்தப் பொட்டலங்களை அப்படியே தன் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள். வீட்டுக்குப் போனதும் தம்பி திவாகருக்குக் கொடுக்க வேண்டும். இந்நேரம் அவன் வீட்டுக்கு வந்திருப்பானா?

அப்போதுதான் அங்கு வந்துசேர்ந்தார் துப்பறியும் நிபுணர் ராம்சேகர்

"மிஸ் சுகந்தி?"

"ஆமாம். நான்தான். நீங்க?"

"நான் டிடெக்டிவ் ராம்சேகர். கொஞ்சம் என்கூட கோவிந்தசாமி நகர்வரை வர முடியுமா? உங்களுக்குத் தெரிந்த யாரையாவதுகூட அழைச்சிட்டும் வரலாம்" என்றார்.

சுகந்தியின் முகத்தில் தென்பட்ட வியப்பைப் பார்த்து பேச்சைத் தொடர்ந்தார். "அங்கே ஒரு சாலை விபத்து" என்றவர் ஒரு சிறு இடைவெளிக்குப் பிறகு "அந்த லொரி விபத்திலே ஓர் இளைஞன் இறந்துவிட்டான். பார்த்த ஒருவர் உங்கள் பெயரைச் சொன்னார்" என்றார்.

சில கணங்கள் சுகந்திக்குக் குழப்பமாக இருந்தது. சற்று யோசித்தப்பிறகு அலறினாள்.

"ஐயோ, திவாகர்"

ராம்சேகர் அவசரமாக விளக்கமளித்தார். "இறந்தது உங்க தம்பிதானான்னு தெரியல்லே. பொலிஸ் ஸ்டேஷன் பக்கத்திலே தான் விபத்து நடந்திருக்கு. அடையாளம் காட்டணும். உடனே வாங்க போகலாம்".

சுகந்தியின் உடல் வியர்த்தது. ராம்சேகரின் காரில் ஏறிக்கொண்டாள். காரில் கதறி அழுதபடி இருந்த சுகந்தி ஏதோ நினைத்தவளாய் கேட்டாள்.

"சார், விபத்திலே இறந்தவன் எப்படி இருந்தான்?"

ராம்சேகரால் புரிந்துகொள்ளமுடிந்தது. அது தன் தம்பியாக இல்லாமல் இருந்துவிட வேண்டும் என்று நம்புகிறாள். அந்த நம்பிக்கை சீக்கிரமே கிடைக்க வேண்டும் என்கிற தவிப்பு.

"அது இருக்கட்டும், உங்க தம்பியின் உடலிலே உள்ள அடையாளங்களை நீங்க சொல்லுங்க".

"இடது கன்னத்தில் ஒரு தழும்பு இருக்கும்".

ராம்சேகர் அவள் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தார். பிறகு "சின்னத் தழும்பா அல்லது பெரிய தழும்பா?" என்று கேட்டார்.

"அப்படின்னா விபத்திலே அடிபட்டவன் முகத்தில் ஏதோ ஒரு தழும்பு இருக்குதா?" என்று திடுக்கிட்ட குரலில் கேட்டாள் சுகந்தி.

"பதட்டப்படாதீங்க மிஸ் சுகந்தி. விபத்திலே இறந்தது உங்கள் தம்பிதான்னு நிச்சயம் ஆகல்லே".

கைக்குட்டையை எடுத்து சுகந்தி தன் வாயில் பொத்திக்கொண்டாள். குலுங்கி அழுதாள். பின் இடைவிடாமல் பேசினாள்.

"என் தம்பி பிறந்த மூணு மாசத்திலே எங்க அம்மா செத்துட்டாங்க. அவனை அம்மாவாக நான்தான் வளர்த்தேன். அவனுக்காகத்தான் என் கல்யாணத்தைக் கூட தள்ளிப் போட்டுக்கிட்டிருக்கேன். அவனுக்கும் நானென்றால் உயிர். அவனுக்குக் கட்டம் போட்ட சட்டைகள் தான் பிடிக்கும். அடிக்கடி அப்படிப்பட்ட சட்டைகளைத்தான் போட்டுக்குவான். அதேபோல வேற வழியில்லாதப்பதான் ஷூ போடுவான். செருப்பு அணிவதுதான் வசதின்னு சொல்லுவான். பொறுப்பாக நடந்துக்குவான்.

எனக்குக் கோயில், சாமி இதிலெல்லாம் ரொம்ப நம்பிக்கை உண்டு. அவனுக்கு அப்படி இல்லைன்னாலும், எனக்காக ரொம்ப கொம்ப்ரமைஸ் செய்வான். போனவருஷம் என்னோட நல்லூருக்கு வந்திருந்தான். அன்று அவனுக்கு பதினெட்டாவது பிறந்தநாள். அங்க ஒரு 'வாட்ச்' வாங்கிக் கொடுத்தேன். நானும் ஏதாவது வாங்கணும் என அடம் பிடிச்சான். நானும் ஒரு வாட்ச் வாங்கினன். அதைதான் இப்பவும் கட்டியிருக்கிறேன்" எனப் பேசிக் கொண்டே வந்தவள் மீண்டும் கதறத் தொடங்கினாள்.

"செத்துப்போனவனின் உடலைத்தான் நீங்க பாத்திருக்கீங்களே சேர். அடையாளங் களைச் சொல்லுங்க. மூக்குக் கண்ணாடி போட்டிருந்தானா, பழுப்பு வண்ண பேர்ஸ் இருந்ததா?"

ராம்சேகர் அழுத்தமாகக் கூறினார். "கவலைப்படாதீங்க. இறந்தது உங்க தம்பி திவாகராக இருக்க வாய்ப்பு இல்லே"என்றார்.


ராம்சேகர் குரல் உறுதியாக இருந்தது. ஏதோ ஆறுதலுக்காக அவர் சொன்னது போல் இல்லை.

எதனால் ராம்சேகர் இப்படி ஒரு முடிவுக்கு வந்தார்? நீங்களும் கண்டுபிடியுங்கள். விடை அடுத்த வாரம்.

(துப்பறியலாம்)

## சென்ற வார விடை

"உங்கள் முதலாளியின் கைத்தடி தொலைந்துவிட்டது" என்றுதான் ராம்சேகர் அந்த நால்வரிடமும் தெரிவித்தார். அந்தக் கைத்தடி குறித்து கோடீஸ்வரன் யாரிடமும் எந்தத் தகவலையும் கூறவில்லை. அப்படியிருக்க அது வழக்கமான கைத்தடி இல்லை என்பதும், மிகச் சிறிய கைத்தடி என்பதும் குற்றவாளிக்கு மட்டுமேதான் (அதாவது அந்தக் கைத்தடியைத் திருடியவருக்கு மட்டுமேதான்) தெரிந்திருக்கும். அந்த நால்வரில் ராகவேந்திரன் மட்டும்தான் பொதுவாக ஒரு கைத்தடி அடங்கியிருக்க முடியாத இடங்களை (அதாவது மேஜை இழுப்பறைகளை) தேடுகிறார். அவரது உள்மனதில் அது மிகச் சிறிய கைத்தடி என்பது பதிந்ததால்தான் ஒப்புக்குத் தேடும்போது அவர் இப்படிச் செயல்பட்டிருக்கிறார். எனவே ராகவேந்திரன்தான் குற்றவாளியாக இருக்க வாய்ப்பு உண்டு என்று கணக்குப் போடுகிறார் துப்பறியும் ராம்சேகர்.



"மன்னர் போர்க்கவசம் கூடத் தரிக்காமல், வலையால் உடம்பை மூடிக்கிட்டே போறாரே ...ஏன்? "

``எதிரியிடம் 'டெங்கு கொசுப்படை ' இருக்கிறதாம் !"



"சதா கூகுள் மேட்டும் கையுமாக இருக்கும் எங்கள் தலைவர், எப்படித் தவறான பாதையில் செல்வார்?""



"கமரா சரியில்லையா... தலைவர் போட்டோவுல கோடு கோடா விழுந்திருக்கு?"

"செல்'லுல எடுத்தது."



"அந்தக் கட்சிகூட வாட்ஸ்அப் மாதிரிதான்."

``எப்படிச் சொல்றே?"

"ஏகப்பட்ட குரூப் இருக்குதே."



"பொண்ணுக்கு செல்போன் மோகம் அதிகமா... எப்படிச் சொல்றீங்க?"

"கல்யாணப் பத்திரிகையில் `திருநிறை செல்ஃபி'னு அடிச்சிருக்காங்களே !"

பீஷ்மர்

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து கருணா விலகியது எப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்தியது? விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளுக்கு கருணாதான் காரணமா? கருணா பிரிந்ததன் பின்னர் புலிகள் ஏன் ஒரு போர்முனையிலும் வெல்லவில்லை? போர்த்தந்திரோபாயங்களில் பிரபாகரனா, கருணாவா தேர்ந்தவர்?

இந்த விடயங்கள் தொடர்பாக பரவலாக குழப்பங்கள் மக்களிடம் இருக்கிறது. இந்த சந்தேகங்களையெல்லாம் இந்த தொடர் தீர்த்து வைக்கும்.

மேலேயுள்ள கேள்விகளில் ஒன்றிற்கு, இந்த பகுதியை ஆரம்பிக்கும்போதே பதில் சொல்லி விடுகிறேன்.

போர்த்தந்திரோபாயங்களில் பிரபாகரனா, கருணாவா தேர்ந்தவர்?

சந்தேகமேயில்லாமல் பதில் சொல்லி விடுகிறோம் பிரபாகரன்தான். இளைஞர்களிற்கு புரியும்விதமாக சொன்னால், கருணா படித்த பாடசாலையில் பிரபாகரன்தான் ஹெட்மாஸ்ரர்!


இதற்கு மட்டும் எப்படி இவ்வளவு உறுதியாக பதில் சொன்னோம் என்பதை, இந்த தொடரை படிக்கும்போது புரிந்து கொள்வீர்கள்.

விடுதலைப்புலிகளை அழிக்க முடியுமென ஒரு காலத்தில் யாராவது கற்பனை கூட செய்யவில்லை. இப்பொழுது ஒரு கதையொன்று பரவுகிறது கோத்தபாய ராஜபக்ச புலிகளை அழிக்க முடியுமென 2005 இலேயே நினைத்திருந்தார் என. இது உண்மையா?

இப்போதைக்கு ஒன்றை மட்டும் சொல்லிவைக்கிறோம். காட்டில் சிங்கம்



**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 57**



# பொட்டம்மானிற்கும் கருணாவிற்குமிடையிலான பதினேழு வருட பகை!

## கருணாவை பிரித்தது இதுதான்





பொட்டம்மான் - பால்ராஜ்

எழுதுவதுதான் வரலாறு.

இந்த யுத்தத்தை வெல்லலாமென மகிந்த ராஜபக்ச குழாமை நம்பிக்கையூட்டியதில் இருந்து, படைக்கட்டுமானங்களை வலுப் படுத்தி, யுத்தத்தை மறைகரமாக இருந்து வழிநடத்தியதெல்லாமே இந்தியாதான்.

புலிகளை அழிக்கலாம் என்ற நம்பிக்கை இந்தியாவிற்கு எப்படி வந்தது தெரியுமா?

கருணா மூலம்!

கருணா பிளவு புலிகளை அழித்ததென்பதுதான் உண்மை. ஆனால் கருணாவின் ஆளணி பலத்தை இழந்ததைவிட, கருணாவின் மூலம் இந்தியா திரட்டிய த்கவல்கள்தான் காரணம். இதை இப்படி மேலோட்டமாக சொல்ல உங்களிற்கு தலையை சுற்றுகிறதல்லவா? தொடரை முழுமையாக படியுங்கள். அனைத்தையும் தெளிவாக அறிந்து கொள்வீர்கள்.

கருணா பிரிந்தது இராணுவரீதியில் புலிகளிற்கு இழப்புத்தான். 2004 மார்ச்சில் புலிகளை விட்டு பிரிந்து செல்கிறேன் என கருணா அறிவித்தபோது, அவரின் கீழ் 5,858 போராளிகள் இருந்ததாக புலிகளின் தலைமைச்செயலக பதிவு குறிப்பிடுகிறது. அதில் 1,800 பேர் கடுமையான காயமடைந்தவர்கள், திருமணமானவர்கள். அப்பொழுது கிழக்கில் கருணா ஆட்சேர்ப்பை ஆரம்பித்திருந்தார். அப்படி இணைக்கப்பட்டவர்கள் 2,300 பேர். மிகுதி 1,700 பேரும் யுத்த அனுபவம்மிக்க போராளிகள்.

கிழக்கு படையணிகள் சிதையாமல் புலிகளிடம் இருந்திருந்தால், யுத்தம் நீண்டு சென்றிருக்கும். இது வெளித்தலையீடுகளிற்கான வாய்ப்பை ஏற்படுத்தி புலிகளிற்கு சார்பான நிலைமையை ஏற்படுத்தியிருக்கும்.

இதெல்லாம் புலிகளிற்கு தெரியாதா? தெரியாமலா கருணாவை விலக்கும் முடிவை எடுத்தார்கள்?

இதெல்லாவற்றையும் விட பெரிய கேள்வி, கருணா ஏன் பிரிந்தார்?

விடுதலைப்புலிகள் அமைப்பின் 32 துறைகளிலும் வடக்கை சேர்ந்தவர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், மத்திய குழுவில் கிழக்கிற்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை, கிழக்கு போராளிகளை வைத்து வன்னிச்சண்டை செய்கிறார்கள் என கருணா குற்றம்சாட்டினார்.

கருணா மீது நிதி, பாலியல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி, அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததாக புலிகள் அறிவித்தார்கள். இதில் எது உண்மை?

இரண்டு தரப்பு சொன்னதிலும் சில உண்மைகள் இருக்கலாம். ஆனால் கருணா பிளவிற்கு இரு தரப்பு சொன்ன காரணங்களும் உண்மையல்ல. இரண்டு தரப்பும் தேடிப்பிடித்த காரணங்கள் அவை.

கருணா பிளவை பற்றிய தொடரை, ஒரு சம்பவத்துடன் ஆரம்பிக்கிறேன்.

1997 மே 13ம் திகதி இராணுவத்தினர் வன்னியின் ஏ9 பிரதான வீதியை கைப்பற்ற ஒரு பிரமாண்ட படைநடவடிக்கையை ஆரம்பித்தார்கள். படையினர் ஜெயசிக்குறுவிற்கு திட்டமிடுவதை அறிந்த புலிகள், மட்டக்களப்பிலிருந்த புலிகளின் படையணிகளை வன்னிக்கு அழைத்தனர். வன்னிக்கு படையணிகளுடன் வந்த கருணாவை, பிரபாகரன் உயரி கௌரவத்துடனே நடத்தினார். இன்னும்சொன்னால், தேவைக்கதிகமான கௌரவம் கொடுத்தார்.

கருணா வன்னிக்கு வந்த சமயத்தில் பெரிய மரபு யுத்த முனைகளை வழிநடத்தியிருக்கவில்லை. வவுனதீவு முகாம் தாக்குதல், புளுகுணாவ தாக்குதல் போன்ற பெரிய தாக்குதல்களை கருணா மேற்கொண்டிருந்தார்தான். ஆனால் புளுகுணாவ தவிர்ந்த மற்றையதெல்லாம் பெரும் வெற்றிகரமான தாக்குதல்கள் அல்ல. வவுனதீவு தாக்குதலில் 84 புலிகள் மரணமானார்கள். சுமார் 100 படையினர் இறந்ததாக அறிவித்தனர். இந்த சமன்பாட்டை புலிகள் விரும்புவதில்லை. இருதரப்பு இழப்பும் கிட்டத்தட்ட சமனாக இருந்தால், விரைவிலேயே இராணுவம் யுத்தத்தை வென்றுவிடும்.

வடக்கிலும் இப்படியான சில தாக்குதல்கள் நடந்துள்ளனதான். ஆனால் அவையெல்லாம் தோல்வி தாக்குதல்கள் பட்டியலில் போட்டு, அதை தலைமை தாங்கிய தளபதியின் "காற்றை பிடுங்கி" விடுவதுதான் பிரபாகரனின் ஸ்டைல்.

வடக்கு, கிழக்கு என்ற பாகுபாட்டை உருவாக்குவதோ... யாரையும் தரம் குறைக்க வைப்பதோ இந்த ஒப்பீடுகளின் நோக்கமல்ல. யதார்த்தம் இதுதான். இதற்கு புறக்காரணங்கள் பலவுள்ளன. கிழக்கில் இப்படியான பெரிய மோதல்களில் அதிகமாக ஈடுபடாமல் கொரில்லா தாக்குதல்களில்தான் அதிகமான ஈடுபட்டது, பிரபாகரனின் முழுமையான கட்டுப்பாட்டில் வடக்கு இருந்தது, அதிக வளங்கள் வடக்கில் இருந்தது போன்றன அதற்கு காரணமாக இருக்கலாம்.

வடக்கு தளபதிகளில் பால்ராஜ் ஏற்கனவே மரபு யுத்தமுனைகளில் சிறப்பாக செயற்படுபவர் என்ற பெயரை எடுத்துவிட்டார். ஒரு சமயத்தில் புலிகள் உருவாக்கிய கூட்டுப்படை தலைமையகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர். அப்படிப்பட்ட பால்ராஜை, கருணா வன்னியில் இருந்தபோது எப்படி கையாண்டார் தெரியுமா?

கருணாவிற்கு கீழ் இயங்குபவராக அல்ல, கருணாவிற்கு கீழ் செயற்படும் ரமேஷின் கட்டளைக்கு கீழ் செயற்படுபவராக நியமித்தார். 1998 ஜனவரியில் ஆனையிறவு மீது புலிகள் ஒரு தாக்குதல் நடத்தினார்கள். ஆனையிறவின் மையத்திற்குள் இயக்கச்சி பெரிய ஆட்லறி

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

படைத்தளம் ஒன்று இருந்தது. புலிகளின் அணியொன்று ஆட்லறி முகாமை கைப்பற்றி ஆட்லறிகளை கைப்பற்றி விட்டனர். பல முனை தாக்குதல்கள் அது. அப்போது மணலாறு மாவட்ட சிறப்பு தளபதியாக இருந்த கேணல் ராஜேஷ் (ஆனந்தபுரத்தில் இறுதியுத்தத்தில் மரணமானவர்) கொம்படி பகுதிக்குள்ளால் நகர்ந்து, அந்த பகுதி முன்னரண்களை தகர்த்து, உள்பக்கமாக இருந்த மினிமுகாம் ஒன்றையும் தகர்க்க வேண்டும். அதை செய்தார் கைப்பற்றப்பட்ட பதினொரு ஆட்லறிகளையும் வெளியே கொண்டு வரலாம்.

ஆனால் ராஜேஷின் அணியால் அந்த மினிமுகாமை கைப்பற்ற முடியவில்லை. ஆட்லறியையும் வெளியே கொண்டு வர முடியவில்லை. ஆனையிறவையும் கைப்பற்ற முடியவில்லை. ராஜேஷிடமிருந்து எல்லா பொறுப்புக்களையும் பிரபாகரன் பிடுங்கினார். தாக்குதலை ஒட்டுமொத்தமாக வழிநடத்திய பால்ராஜிற்கும் காற்றை பிடுங்கினார். காற்றை பிடுங்குவதென்பது புலிகள் அமைப்பிற்குள் நிலவிய ஒரு குறியீட்டு சொல். பொறுப்புக்கள் பறிக்கப்படுவதை குறிக்கும்.

வவுனியாவிலிருந்து முன்னேறி வந்த ஜெயசிக்குறு படையினருக்கு எதிராக மூன்றுமுறிப்பில் புலிகள் முன்னரண் அமைத்திருந்த சமயத்தில் அந்தப்பகுதிக்கு கேணல் ரமேஷ் பொறுப்பாக இருந்தார். 75 பேரை கொண்ட அணியொன்றின் பொறுப்பாளராக பால்ராஜ் நியமிக்கப் பட்டார். அந்த அணி ரமேஷின் கீழ் செயற்பட்டது. அதாவது பால்ராஜிற்கு கட்டளையிட்டது ரமேஷ்!

அதாவது பால்ராஜ் வகித்த பொறுப்பு, விடுதலைப்புலிகள் அமைப்பில் சாதாரணமாக மேஜர் தர நிலையில் உள்ள ஒருவர் வகிக்கும் பொறுப்பையே. வேறு தளபதிகள் என்றால் இப்படியான "காற்று இறக்கல்களை" விரும்பமாட்டார்கள். அதற்கு ஒரு உதாரணம் ரவி.

1996இல் யாழ்மாவட்ட தளபதியாக இருந்தவர் ரவி. அவரது அசட்டையான முன்னரண் அமைப்பினாலேயே சூரியக் கதிர் நடவடிக்கை இராணுவத்தினர் எதிர்ப்பின்றி சாவகச்சேரியை கைப்பற்றினார்கள். புலிகள் வன்னிக்கு பின்வாங்கியதும் பிரபாகரன் செய்த முதலாவது வேலை ரவியின் காற்றை பிடுங்கியது. மாவட்ட சிறப்பு தளபதியாக இருந்தவர், தாக்குலணியொன்றில் சாதாரண போராளியாக விடப்பட்டார். ரவிக்கு இது பிடிக்கவில்லை. சிறிதுகாலத்திலேயே இயக்கத்திலிருந்து விலகிச்சென்றுவிட்டார். இப்பொழுது ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கிறார்.

ஆனால் பால்ராஜ் அப்படியானவரல்ல. இயக்கத்தில் என்ன வேலை கொடுத்தாலும் சிரித்தபடி செய்வார். நேற்று இயக்கத்தில் இணைந்தவரின் கட்டளையை கேட்குமாறு பிரபாகரன் சொன்னாலும் கேட்பார். ஆனால் அவரது எகத்தாள கதைகள் மாறாது. பால்ராஜின் எகத்தாள கதைகள் பற்றி தனி தொடரே எழுதலாம். சுவாரஸ்யமான அந்த கதைகள் பற்றி பின்னர் குறிப்பிடுகிறேன்.

மூன்றுமுறிப்பில்தனதுசிறிய அணியுடன் பால்ராஜ் நிற்பது தளபதிகளிற்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. பலர் துக்கம் விசாரிப்பதைபோல பால்ராஜிடம் பேசப்போவார்கள். "இயக்கம் தரும் என்ன வேலையென்றாலும் நான் செய்யத்தானே வந்தனான். தளபதியாக இருக்கவா இயக்கத்திற்குவந்தனான்" என அவர் கேட்டு அதகளம் பண்ணிக்கொண்டிருந்தார்.

கருணா, ரமேஷ் ஆகியோருக்கு கீழேயே பால்ராஜ் செயற்பட்டார். கருணாவிற்கு புலிகள் முக்கியத்துவம் கொடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டு உண்மையல்ல.ஒருசம்பவத்துடன்தொடங்குகிறோம் என்றுவிட்டு, சம்பவத்தையே சொல்லவில்லையென்கிறீர்களா? சம்பவம் இதுதான்.

1998. மாங்குளத்திற்கு அண்மையாக புலனாய்வுத்துறை அணியொன்று நிலைகொண்டிருந்தது. புலனாய்வுத் துறையில் தாக்குலணி ஒன்று இருந்தது. அது அப்போது மன்னாரில் நிலைகொண்டிருந்தது. அப்போது ஏற்பட்ட கடுமையான ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எல்லா படையணிகளில் இருந்தும் ஆட்களை அனுப்பினார்கள். பொட்டம்மானும் தனது பங்கிற்கு ஒரு ரிஸ்க் எடுத்தார்.

சம்பவத்தை சொல்வதற்கு முன்னர் ஒரு சிறிய விளக்கம். கொழும்பில் இருந்த மறைமுக கரும்புலிகள், கொழும்பில் தங்கியிருந்து நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை ஏதாவது அவசர சந்திப்பு, நடவடிக்கைகளை திட்டமிடுவதற்காக வன்னியிலுள்ள புலனாய்வுத்துறைஇரகசிய முகாம் ஒன்றிற்கு அழைக்கப்படுகிறார்கள் என வைப்போம். அவர்கள் எப்படி தங்கவைக்கப்படுவார்கள் என்பது தெரியுமா?

இராணுவகட்டுப்பாட்டுபிரதேசங்களில் இருந்து பல வழிகளில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிற்கு வருவார்கள். ஏ9 பாதை திறந்துள்ள சமயத்தில் பேரூந்தில் வருவார்கள், கடல்மார்க்கமாக வருவார்கள், காடுகளிற்குள்ளால் வருவார்கள். முகாமிற்கு அழைத்து வரப்படும்போது அவர்களின் முகத்தை முழுமையான மூடும் முகமூடி ஒன்று வழங்கப்படும். ஒவ்வொருவருக்கும் தனி அறை வழங்கப்படும். அந்த அறைக்குள் இருக்கும் சமயத்தில் முகமூடியை கழற்றிக்கொள்ளலாமே தவிர, அறை கதவை திறந்து வெளியில் வரும்போது முகமூடியில்லாமல் வரக்கூடாது. இரண்டு பேர் இரகசிய நடவடிக்கையில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் ஈடுபட்டிருந்தாலும், ஒருவரையொருவர் அறிந்து கொள்ளகூடாது. இதுதான் இரகசிய புலனாய்வு செயற்பாடுகளின் அடிப்படை சூத்திரம்.



பொட்டம்மான் கருணா (இது 2003 இல் எடுக்கப்பட்டது. அதாவது கருணா பிரிவதற்கு ஒரு வருடம் முன்னர். இருவருக்குமிடையில் உள்ள இடைவெளியை கவனியுங்கள்)

வன்னியிலுள்ள ஒருவர்தான் அவர்களிற்கு தாக்குதல் திட்டத்தை விளங்கப் படுத்துவார். அவர் முகமூடி அணிய மாட்டார். ஆனால் தான் திட்டத்தை விளங்கப்படுத்துபவர்களின் முகத்தை அவர் அறியமாட்டார். அந்த இடத்தில் இருப்பவர்களும் பக்கத்திலிருப்பவரை அறியமாட்டார். யாராவது ஒருவர் எக்குத்தப்பாக இலங்கை புலனாய்வுத் துறையிடம் எக்குத்தப்பாக சிக்கிக்கொண்டால், வரிசையாக மற்றவர்களும் மாட்டுப்படாமல் இருக்க இந்த நடைமுறை.

மறைமுக கரும்புலி பயிற்சிக்காக செல்பவர்களுக்கும் இதுதான் நிலை. ஆறு மாதமோ ஒரு வருடமோ அடுத்தவர் முகத்தை தெரியாமல் முகமூடி வாழ்க்கைதான் வாழ்வார்கள்.

ஜெயசிக்குறு களமுனையில் போராளிகள் பஞ்சம் வந்தது. ஜிம்கெலி தாத்தாவின் அணி நீண்டநாட்களாக ஓய்வின்றி களத்தில் நின்றது. அவர்களிற்கு ஓய்வளிக்க வேண்டும். மாற்று அணியொன்று இருந்தாலே சாத்தியம். இந்த பிரச்சனை பிரபாகரனிடம் வந்தது. இயக்கத்தின் உயர்மட்ட முடிவுகளை பொட்டம்மானுடன் பேசியே பிரபாகரன் எடுப்பார். இந்த பிரச்சனையை பொட்டம்மானிடம் பேச, ஒரு அணியை உடனே திரட்டி திருவதாக கூறினார்.

இராணுவகட்டுப்பாட்டு பகுதியில் நிலைகொண்டிருந்த நடவடிக்கையாளர்களையெல்லாம் உடனே வன்னிக்கு அழைத்து ஒரு அணியை உருவாக்கினார். அது பயங்கர ரிஸ்க் எடுக்கும் வேலை. இவர்கள் முன்னரணில் நின்று இறந்தாலும், காயமடைந்தாலும், உயிருடன் இராணுவத்திடம் பிடிபட்டாலும் பிரச்சனைதான். காயமடைந்தால்கூட பின்னர் இராணுவகட்டுப்பாட்டுபகுதியில் வேலை செய்ய முடியாது. காயத்தளும்பு அடையாளம் காட்டிக்கொடுத்து விடும். அவர்களிற்காக புதியவர்களை தயார்செய்வது சாதாரண விடயம் அல்ல. ஆனாலும் பொட்டம்மான் செய்தார்.

பொட்டம்மான் ஒரு மாற்று ஐடியா போட்டார். ஏ9 வீதிக்கு மேற்கு பக்கமாக நிலைகொண்டிருந்த நிதித்துறை படையணியை எடுத்து ஜிம்கெலி தாத்தாவின் படையணி நிலைகளில் நிறுத்திவிட்டு, நிதித்துறை படையணியின் நிலைகளில் புலனாய்வுத்துறை அணியை நிறுத்தலாம். ஏனெனில், ஜிம்கெலி தாத்தாவின் அணி நின்ற பகுதி அடிக்கடி சண்டை நடக்கும் இடம். நிதித்துறை படையணியின் பகுதியில் இராணுவம் அடிக்கடி கண்வைக்கவில்லை. இதை படிப்பவர்களிற்கு குழப்பம் வரலாம். நிதித்துறை, ஜெயந்தன் படையணி போராளிகள் ஆபத்தான இடத்தில் நிற்கலாம், புலனாய்வுத்துறை போராளிகள் நிற்க முடியாதா என. இதற்கு ஒரே பதில் இல்லையென்பதே. இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் ஒரு புலனாய்வுத் துறை உறுப்பினரை நிலைகொள்ள வைப்பதென்பது சாதாரண விடயமல்ல. அதனால்தான் பொட்டம்மான் அப்படி ஐடியா போட்டார். பிரபாகரனிற்கும் அது சரியெனபட, விடயத்தை கருணாவிற்கு விளங்கப்படுத்தி அந்த அணியை அனுப்பினார்கள். ஆனால் அந்த அணி ஜிம்கெலி தாத்தாவின் அணிநின்ற இடத்திலேயே நிறுத்தப்பட்டது!

மறுநாள் அந்த இடத்தில் இராணுவம் சிறிய முன்னேற்றத்தை செய்ய, புலனாய்வுத்துறையின் ஒருவர் மரணமாகி, இருவர் கடுமையான காயமடைந்தனர்.

பின்னர் இது இயக்கத்திற்குள் விவகாரமாகி, விசாரணை வரை சென்றது. புலனாய்வுத்துறை அணியை, நிதித்துறையின் இடத்தில் நிறுத்தாமல், ஜிம்கெலி தாத்தாவின் இடத்திற்கு அனுப்பியது யார் என தளபதிகள் மட்டத்தில் இது பேசப்பட்டபோது, பொட்டம்மான் கொஞ்சம் காரசாரமாக கருணாவை பேசிவிட்டார். தனக்கு இதில் சம்பந்தமில்லை, தனது கட்டளை மையத்தை சேர்ந்த யாரோ தளபதிதான் மாறி செயற்பட்டு விட்டார் என்றார். அப்பொழுது கள விசாரணை பகுதியை புலிகள் உருவாக்கியிருந்தார்கள். களத்தில் நடக்கும் சிக்கல்களை விசாரணை செய்து அறிக்கையிடுவதே வேலை. அவர்களிடம் விசாரணை ஒப்படைக்கப்பட்டது. அதற்கு கருணா அவ்வளவாக ஒத்துழைக்கவில்லை. பின்னர் அந்த விசாரணை கைவிடப்பட்டது!

அதற்கு பின்னர் வன்னியில் பொட்டம்மான், கருணா மோதல் உக்கிரமடைந்தது. விடுதலைப்புலிகளின் இரண்டாவது தலைவராக பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லையே தவிர, அப்படி செயற்பட்டது பொட்டம்மான்தான். பிரபாகரன் அதற்கு அனுமதித்திருந்தார்.

வன்னியில் கருணாவிற்கு பிரபாகரன் கொடுத்த முக்கியத்துவத்தால் அவரை தனித்து செயற்பட வைத்தது. மட்டக்களப்பில் எப்படி நிர்வாக கட்டமைப்புக்களிற்கு கீழ்ப்படாமல் சுயாதீனமாக இயங்கினார்களோ, அப்படியே வன்னிக்குள்ளும் இயங்கினார்கள்.

அந்த சமயத்தில் போராளிகளின் போக்குவரத்திற்கென ஒரு பேருந்து சேவை இயக்கப்பட்டது. அதற்கு பெயர் சிறப்பு பணி. தனியார் பேருந்துகளில் போராளிகள் ஏறினால், பேருந்து உரிமையாளர்களால் தொழில் செய்ய முடியாது. இதை கருத்தில் கொண்டுதான் சிறப்பு பணி ஆரம்பிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் இருந்து விசுவமடுவிற்கு வந்த தனியார் பேருந்தை ஜெயந்தன் படையணி போராளிகள் ஆறுபேர் மறித்துள்ளனர். போராளிகளிற்கு சிறப்பு பணி இருக்கிறதுதானேயென நினைத்தோ என்னவோ, நிறுத்தாமல் சென்றார் சாரதி. பேருந்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி நிறுத்தி, சாரதியையும் கடுமையாக தாக்கினார்கள் ஜெயந்தன் படையணியினர். பொதுமக்கள் பேருந்தில் இருந்தபோதும் நல்லவேளையாக உயிரிழப்புக்கள் நிகழவில்லை.

புலிகள் அமைப்பில் இருந்த யாராவது இப்படி துப்பாக்கியை தவறாக பயன்படுத்துவது கிட்டத்தட்ட மரணதண்டனைக்குரிய குற்றம். புலிகள் அமைப்பில் இருந்தாலும் சிவில் குற்றங்களில் சம்பந்தப்பட்டால் அவர்களை காவல்துறை கைது செய்து, வழக்கமான காவல்துறை நடைமுறைப்படியே விசாரணைகள், தண்டனைகள் அமையும். துப்பாக்கிச்சூட்டுடன் சம்பந்தப்பட்ட ஆறுபேரையும் காவல்துறை விசாரணைக்கு எடுக்க முயல, கருணா கடும் ஆட்சேபம் தெரிவித்தார். இறுதியில் கடுமையான இழுபறியின் பின் அவர்களை காவல்துறை கைது செய்தது.


இதுவேஏனைய படையணிகள் என்றால், சிறிய சிக்கலுமில்லாமல் காவல்துறை விசாரணைக்கு ஒத்துழைத்திருப்பார்கள். கிழக்கில் புலிகளின் சிவில் நிர்வாக கட்டமைப்புக்கள் இருக்கவில்லை. கிழக்கு தளபதிகள், போராளிகளிற்கும் அதனுடன் இணைந்து செயற்பட்ட அனுபவம் இருக்கவில்லை.


புலிகளிற்குள் பிளவு ஏற்பட இதைவிட இன்னும் இரண்டு காரணங்களும் உள்ளன. அதில் முக்கியமானது பொட்டம்மான், கருணா மோதல். அது 1987 இல் இருந்தே இருக்கிறது. அதாவது பொட்டம்மானுடனான 17 வருட பகை முற்றிய சமயத்திலேயே இயக்கத்திலிருந்து கருணா வெளியேறினார்.

1987இல் இருவருக்குமிடையில் ஆரம்பித்த மோதலை அடுத்த வாரம் குறிப்பிடுகிறேன். (தொடரும்)

கருணா பிளவு விடயத்தை தீபம் வார இதழ் ஆறு மாதங்களின் முன்னரே அத்தனை விடயங்களையும் A to Z ஆக, துல்லியமாக பிரசுரித்து விட்டதேஞ் இப்பொழுது எதற்காக மீண்டும் கருணா விவகாரத்தை கையிலெடுக்கிறார்கள் என வாசகர்கள் யோசிக்கலாம். உண்மைதான். பத்திரிகையில் "கூறியது கூறல்" நல்லதல்ல. அதை தெரிந்துகொண்டும் ஏன் கருணா விவகாரத்தை மீண்டும் கையிலெடுத்தோம் தெரியுமா?

கருணா விவகாரத்தில் நடந்தவைகளை மிக துல்லியமாக எழுதுங்கள் என நீண்ட காலமாகவாசகர்கள் கேட்டு வந்தனர். இலங்கையில் இப்படியான எழுத்துக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை பற்றி வாசகர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். எனினும் தீபம் அதனை துணிந்து செய்து வருகிறது. இப்படியான சில காரணங்களால் அப்போது சில தகவல்களை சொல்வதை தவிர்த்திருந்தோம். கருணா பிளவு தொடர்பாக அறிய விரும்பும் புதிய வாசகர்கள், அப்போது சொல்லாமல் விட்ட பல தகவல்களை வெளியிடுதல் என்ற இரண்டு காரணங்களிற்காக இந்த பகுதி பிரசுரமாகிறது.













# ஐயம் தெளி

**அட்டையை தொட்டால் சுருண்டுகொள்வது ஏன்?**



அட்டையின் உடல் மென்மையானது. உடலைச் சுற்றி மென்மையான ஓடால் மூடப்பட்டிருக்கும். ஆனாலும் இது பாதுகாப்பு என்று சொல்ல முடியாது. ஆபத்து ஏற்படும்போது அட்டைகளால் வேகமாக ஓடித் தப்பிச் செல்ல முடியாது. அதனால் உணர்வு செல்கள் மூலம் ஆபத்தை உணர்ந்ததும் உடலை வட்டமாகச் சுருட்டிக்கொள்கிறது. அதன் பிறகு எளிதில் அட்டைக்குத் தீங்கு இழைத்துவிட முடியாது. இது இயற்கை வழங்கிய தகவமைப்பு. அப்புறம், அட்டைகளுக்கு ஆயிரங்கால் பூச்சி என்று பெயர் இருந்தாலும் அவற்றுக்கு ஆயிரம் கால்கள் கிடையாது.

**அடிபட்ட பாம்பு கடிக்காமல் விடாது என்கிறார்களே, அப்படியென்றால் பாம்பு தேடி வந்து பழிவாங்குமா?**



பாம்புகள் மனிதர்களைத் தேடிவந்து கடிப்பதில்லை. மனிதர்களைக் கண்டதும் பாம்பு வேகமாகத் தப்பி ஓடிவிடவே நினைக்கும். பாம்பு தனக்கு ஆபத்து ஏற்படும்போது, தன்னைக் காப்பாறிக்கொள்வதற்காகக் கடிப்பதுபோல் செய்யும். வேறு வழியின்றிதான் கடிக்கும். அடிபட்ட பாம்பு மனிதர்களை அடையாளம் வைத்துக்கொண்டு, தேடிவந்து பழிவாங்காது. பாம்புகளைத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காக, யாரோ ஒரு நல்லவர், 'அடிபட்ட பாம்பு கடிக்காமல் விடாது' என்று சொல்லியிருக்கலாம்! அதனால் பயம் வேண்டாம்.




# ஒருமை பன்மை குழப்பமா?

"என் சில்ரன்ஸை நான் ஒழுக்கமாக வளர்க்கிறேன்" என்றார் நண்பர் ஒருவர். "அடடா தப்பு பண்றீங்களே!" என்றேன். நண்பருக்கு அதிர்ச்சி. "குழந்தைகளை ஒழுக்கமாக வளர்ப்பது தப்பா!" என்றார்.

ஒழுக்கமாக வளர்ப்பதில் தப்பே இல்லை. ஆனால் 'சில்ரன்ஸ்' என்ற சொல்தான் தப்பு. child என்ற சொல் ஒருமை. குழந்தையைக் குறிக்கிறது. குழந்தைகள் என்று பன்மையில் குறிப்பிட children என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும். கூட ஒரு 'S' சேர்த்துக் கொண்டு சில்ரன்ஸ் என்று நீட்டி முழக்கக் கூடாது. அதேபோல் man என்பதன் பன்மை men. Woman என்றால் பெண். women என்றால் பெண்கள். Mens என்றோ womens என்றோ சொற்கள் கிடையாது.

இந்த விஷயத்தில் 'ஊடகங்கள்கள்' செய்யும் ஒரு தவறையும் குறிப்பிட வேண்டும். என்ன இது ஊடகங்கள் என்பதற்குப் பதிலாக ஊடகங்கள்கள் என்று நீட்டி முழக்கித் தப்பாக எழுதிவிட்டேனே என்கிறீர்களா? காரணமாகத்தான் அப்படிக் குறிப்பிட்டேன். ஏன் என்று பார்ப்பதற்கு முன்பாக வேறு சில சொற்களைப் பற்றியும் தெரிந்து கொள்வோம்.

பல் என்றால் tooth. பற்கள் என்றால் teeth. ஓஹோ toothனா ஒரே ஒரு பல்தானா? அப்படியானால் toothpasteஐக் கொண்டு ஒரே ஒரு பல்லைத்தான் தேய்க்க வேண்டுமா என்று கேட்கக் கூடாது. ஒவ்வொரு பல்லையும் கவனமாகத் தேய்க்க வேண்டும் என்று வைத்துக்கொள்ளலாம். அதேபோல் கால் என்றால் foot. கால்கள் என்றால் feet (பாதம், பாதங்கள் என்ற பொருளிலும் இந்தச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன). ஆனால் ஆங்கிலத்தில் my foot என்பது எதிர்ப்பைக் காட்டும் சொற்கள்.

நீங்கள் உங்கள் நண்பரிடம் "நம்ம முத்துகிருஷ்ணன் ரொம்ப நாணயமானவர்" என்று சொல்கிறீர்கள். அவர் பதிலுக்கு "முத்துகிருஷ்ணன் நாணயமானவர்! my foot" என்றால் அவர் அந்த நபரைக் கொஞ்சம்கூட நாணய மில்லாதவர் என்று கருதுகிறார் என்று அர்த்தம்.பல பத்திரிகைகளும் வார இதழ்களும் "மீடியாக்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. மீடியம் (medium) என்பது ஒருமை. மீடியா (media) என்பது பன்மை. எனவே மீடியாக்கள் என்பது தவறான சொல். ஏனென்றால் medias என்று ஒரு சொல் கிடையாதே!

இது போலவே தவறாகப் பயன்படுத்தப்படும் இன்னொரு சொல் 'பக்டீரியாக்கள்'. பக்டீரியம் (bacterium) என்பது ஒரு கிருமியையும், பக்டீரியா (bacteria) என்பது பல கிருமிகளையும் குறிக்கின்றன. அப்புறம் எப்படி 'பக்டீரியாக்கள்' வரும்?

# வேதாளம் புதிது! 2.0

**முன் கதை சுருக்கம்:** ரொம்ப ரொம்பப் பழைய காலத்திலே விக்கிரமாதித்தன் என்ற அரசனை கேள்வி கேட்டே வறுத்தெடுத்த ஒரு பயங்கரப் பேய், வேதாளம். விக்கிரமாதித்தனை நொந்து நூடுல்ஸாக்கிய வேதாளத்துக்கு, வேதாள உலகிலே பயங்கர தண்டனை கொடுக்கப்பட்டது. அதிலிருந்து தப்பிக்கணும்னா, இந்தப் பிறவியில் விக்கிரமாதித்தனைத் தேடிக் கண்டுபிடித்து, அவனுக்கு எடுபுடி பண்ணி, குட் சேர்டிஃபிகேட் வாங்கி வந்தால், விடுதலை. இல்லைன்னா, ரெண்டாயிரம் வருடம் கொதிக்கிற எண்ணெய்ச் சட்டியில் குளிக்கணும். இந்தப் பிறவியில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த விக்ரமை வேதாளம் கண்டுபிடித்து விவரங்களைச் சொல்லி, எடுபுடியானது. விக்ரம் கண்ணுக்கு மட்டும்தான் வேதாளம் தெரியும். அதுவும் ஒரு பாப்பா தோற்றத்தில்! (உண்மையான உருவத்தை நீங்கள் பார்ப்பீங்க.)

இருவரும் சேர்ந்து செய்யும் சாகச அட்டகாசங்களை இனி பார்ப்போம்.











KIRUBAA LEARNERS

KIRUBA A LEARNERS

# கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

## நல்ல சாரதி நாட்டுக்கு தேவை.

இன்றே கிருபா லேணர்ஸ் உடன்
இணைந்து கொள்ளுங்கள்.

### யாழ்ப்பாணம்

முதலாம் கட்டைச் சந்தி
பருத்தித்துறை
021 4923201
071 4546961

இல 227/6 கே.கே.எஸ் வீதி
சுன்னாகம் (மதவாடி
அண்மையில்)
021 224 2022
071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம்
முன்பாக)
021 300 6550
071 454 6958

கண்டி வீதி, சாவகச்சேரி
(நீதிமன்றம் அண்மையில்)
021 492 3202
021 227 0700

யாழ்.கச்சேரியடி,
யாழ்ப்பாணம்
39, நல்லூர் வீதி
021 222 6699
076 722 5292

ஓம் பிளாசா
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
021 222 6688
077 242 2622

### கிளிநொச்சி

ஏ9 கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

வாடியச்சந்தி
பூநகரி
021 320 1818
070 333 7171

புளியடிச்சந்தி
முல்லைவீதி, விசுவமடு
021 320 1515
071 454 6955

### வவுனியா

நாச்சிகுடா சந்தி
மன்னார் வீதி, முழங்காவில்
021 300 6544
070 333 6161

216, ஏ9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777
077 710 0444

### மன்னார்

இல 94, பிரதான வீதி
மன்னார்
023 225 1656
077 847 2732

பெண்களாலேயே பெண்களுக்கு
பயிற்சி வழங்கப்படும்

தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200, 077 722 5292



# AM அல்பா மிக்சர்

- சுவைக்க சுவைக்க சுவையின் உச்சம் அதுவே அல்பா மிக்சர்
- வீடு செல்லும்முன் வாங்குங்கள் அல்பா மிக்சர்
- கால் நூற்றாண்டுக்கும் மேலாக வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள்
- அனைத்து முன்னணி விற்பனை நிலையங்களிலும் இப்போது அமோக விற்பனையில்

பக்கஸ் லேன், உடுவில் வீதி
மானிப்பாய், யாழ்ப்பாணம்
தொ.பே : 077 744 8689
021 225 5278

பிரதான வீதி சங்கானை
மற்றும்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இல.140 பரமேஸ்வரா
சந்தி பலாலி வீதி,
திருநெல்வேலி
தொ.பே : 021 222 6695